தினமணி வெளியீடு: 2

பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ.

# ரவீந்திரநாத டாகுர் 433

## வாழ்க்கையும் கவிதையும்

கி. சந்திரசேகரன் எம்.ஏ., பி.எல்.



"இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை"

தினமணி காரியாலயம்
மவுண்டு ரோடு, சென்னை
1944

காபிரைட்]

[விலை அணு 8

433

# முன்னுரை

சத்தியம் பிரத்தியக்ஷமாக, கவிதையை ஒரு யோக சாதனமாகக் கைக்கொண்டு ஓர் உயர்தர நிலையைத் தேடும் நாடு, நமது நாடு, நமது நாகரிகம். கவியும் ரஸிகனும், ஆணும் பெண்ணும்போல் ஒரு தாய் வயிற்றில் பிறந்த பிறப்பு. நோக்கம் ஒன்றே—துரிய நிலை, சாந்தம் குடிகொண்ட வாழ்வு. இருவரும் சிருஷ்டியின் இரண்டு கண்கள்.

கவிதை என்றால் என்ன? உண்மையான உணர்ச்சி. சுயநலம் பாராட்டாத, பயத்தில் ஈடுபடாத, சத்தியத்தில் ஆழ்ந்துநிற்கும் மனோநிலை. இந்த அவசரத்தில்தான், கவியும் ரஸிகனும் பிறக்கிறார்கள். ஒருவர்க்கு உயிர் மற்றவர். உரையாணி யில்லாமல் மாற்று இல்லை. கெஜக்கோல் இல்லாமல் அளவு இல்லை. ரஸிகன் இல்லாமல் கவியில்லை. சிருஷ்டியில் ஆண் பெண்போல் கலைகளின் வளர்ச்சிக்குக் கவியும் ரஸிகனும். இவர்கள் பிரிந்து நிற்கும் காலத்தில் அழிவும் பிரளயமும். இவர்கள் சேர்ந்து வாழ்ந்து சுகிக்கும் காலத்தில் வெற்றியும், புத்துயிர்ப் பிறப்பும்.

ஸ்ரீமான் கி. சந்திரசேகரன் ஓர் உண்மையான ரஸிகர். ரவீந்திர நாத டாகுரின் மெய்ம்மறந்த காதலர்—பக்தர். இவர், கவிதையின் அழகிலும் நாதத்தின் லயத்திலும் ஈடுபட்டவர். ஸ்ரீ சந்திரசேகரனின் உணர்ச்சி ஒரு தெளிவான இயற்கைப் பெருக்கம்—ஆற்று மணலில் ஊறும் நீர்போல் கையால் மணலைத் தள்ளினால் போதும், மண் வெட்டக்கூட வேண்டாம். கல்லூரியில் கற்ற ஆராய்ச்சி-வழி இவர் வழி அல்ல. கட்டிக்கொடுத்த சோறுபோல், பாங்கியில் போட்ட பணம் போல் அல்ல. எடுத்தால் குறையுமே என்ற பயமில்லை

மூன்று இலக்கியத்தில்—ஸம்ஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம்—தம் வழியிலே ஊறிப் பிறவியிலே ஸங்கீதத்தில் லயித்த மனோ நிலை உள்ள ரஸிகர், கி. சந்திரசேகரன். இந்த நிலையில்தான் டாகுரை உண்மையில் உணரக்கூடிய பக்தி சுரக்கும். ஸ்ரீ கி. சந்திரசேகரனின் எழுத்து நடையில் பிறந்த மேனிக்குள்ள ஓர் அழகையும், உண்மையான உணர்ச்சியையும், ஓட்டத்தையும் நான் கண்டு களிக்கிறேன். பசு, தான் தின்னும் புல்லைப் பாலாக்குவதுபோல், டாகுரைபற்றித் தாம் சேகரித்ததை யெல்லாம் தம் வழியில் இனிக்கச் செய்திருக்கிறார், டாகுரின் வாழ்க்கையையும், கவிதையையும் ஒற்றுமைக் கண் கொண்டு பார்வையிட்டிருக்கிறார் டாகுரின் கலை-விநோதத்தை உணர்ந்து அனுபவிக்க அத்வைதக் கண்களும், ஸம்ஸ்கிருத (பண்பட்ட)மனோபாவமும் வேண்டும். ஸ்ரீ கி. சந்திரசேகரனுக்கு, ஈசன் அருளால், இவை அமைந்துள்ளன.

கவிதையைப் பெருக்கும் நிகழ்ச்சிகளையும், நிகழ்ச்சிகளை ஒட்டிப் பெருகி நிற்கும் டாகுரின் காவியங்களையும், ஒன்றோடு ஒன்றை உணர்ச்சியுடன் பொருத்திக் கதைபோல் ரஸமாக, போற்றத்தக்க முறையில் ஸ்ரீ கி. சந்திரசேகரன் எழுதியிருக்கிறார். டாகுரின் மேன்மை, தாம் கண்ட கனவுகளைத் தம் வாழ்விலே நினைவுகளாகவும் செயல்களாகவும் மாற்றத் தாம் செய்த போராட்டம், சொல்லைச் செயலாக்கித் தாம் களிக்கப் பட்ட பாடு இவைகளை, கி. சந்திர சேகரன் தெளிவாய் உணர்ந்து தமதாக்கிக் கோவையாய்த் தொடுத்து, தமிழ் நாட்டுக்கு ஓர் அழகிய மாலையாக அர்ப்பணம் செய்திருக்கிறார். இதை மனமார்ந்து வரவேற்பது நமது கடமை.

சுவேதாரண்ய ஆசிரமம்,
மயிலாப்பூர், 7-7-'44. } கா. சி. வேங்கட ரமணி.

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | உதயம் .... .... | 5 |
| 2. | சுற்றுணர்ச்சி .... .... | 15 |
| 3. | புதிய அனுபவங்கள் .... .... | 25 |
| 4. | சொந்த நாடும், சுற்றுலகமும் .... | 35 |
| 5. | கவிதைக் காதலி .... .... | 51 |
| 6. | பழமையின் மணம் .... .... | 61 |
| 7. | புதுமை காட்டிய வழி .... .... | 70 |
| 8. | அஸ்தமனம் .... .... | 79 |
| | முத்து மாலை .... .. | 90 |


## உதவிய நூல்கள்


1. ஜீவனஸ்மிருதி—டாகுர்
2. டாகுர் எழுதிய இதர புஸ்தகங்கள்
3. டாகுர் எண்பதாம் ஆண்டு மலர்
4. ரவீந்திரநாத டாகுர்—மிஸ். ஸைக்ஸ்
5. என் குழந்தைப் பருவம்—டாகுர்

# ரவீந்திரநாத டாகுர்

## வாழ்க்கையும் கவிதையும்

## 1. உதயம்

‘ரிஷி மூலம் நதி மூலம் இரண்டையும் விசாரிக்கலாகாது’ என்ற பழமொழியொன்று நம் நாட்டில் வெகு காலமாய் உலவி வருகிறது. மற்ற மனிதர்களின் பிறப்பைப் போல் நடக்கக் கூடியதாய் ரிஷிகளின் ஆரம்பம் இருப்பதில்லை; சில சமயங்களில், உயர்ந்ததாக எண்ணவேண்டிய விதத்திலும் ரிஷிகள் பிறந்த வரலாறுகள் புராணங்களில் காணப்படுவதில்லை. அதே விதம் நதி எவ்வளவு விசாலமாய்ப் பிரவாகத்துடன் கண்ணைக் கவரும் காட்சி அளித்த போதிலும், உற்பத்தியாகும் இடத்தில் சிறுகிக் குறுகி, ‘இதுவா இப்பெரிய ஆற்றின் பிறப்பு?’ என்று வியக்க வேண்டிய அளவில் மெலிந்து விளங்குகிறது. மேலும், சொந்தத்தில் அதற்குத் தகுந்த ஊற்றுப் பெருக்கு ஒன்றும் இல்லாமல், இதர நீரோடைகள் வந்து கலப்பதால் மட்டுமே மேன்மை பொருந்தியதாய்த் தோன்றுவதையும் சில வேளைகளில் காண்கின்றோம்.

கவி மூலம் இவ்விதமே தானா என்ற கேள்வி பலர் வாயிலும் நியாயமாக எழலாம். கவி பாடுகிறவன் ரிஷியாகவே தான் இருக்கவேண்டும் என்றொரு நம்பிக்கை நம் தேசத்து இலக்கிய மரபுகளில் வெகுகாலமாய் வந்துளது. ஏனெனில், ‘க்ராந்த தர்சீ கவி:’ என்ற சொல்லுக்கு ‘நீண்ட பார்வை யுடையவன் தான் கவிஞனாகிறான்’ என்று பொருள். ரிஷிகளிடமே சாமானியக் கண்களுக்குப் புலனாகாத பார்வையின் வலிமை விளைவதாகச் சொல்லுவதாலோ, என்னவோ, ‘ரிஷியே காவியத்தைச் செய்கிறான்’ என்ற மற்றொரு

வடமொழிச் சொல்லும் வழக்கில் இருக்கிறது. ரிஷி என்பதனுள் அடங்குவதால் ஒருகால் கவிஞனைப் பற்றித் தனியாக ஒன்றும் சொல்லப்படவில்லையோ என்று ஊகிக்க இடமும் இருக்கிறது.

ஒன்று நிச்சயம். கவிதையின் வரலாறு வேண்டுமானாலும் அறிவுக்கு உணவூட்டும் விஷயமாய் அமையலாம். கவிஞனுடைய சரித்திர வரலாற்றைத் தெரிந்து கொள்வது இந்நாட்டுச் சம்பிரதாயங்கூட இல்லை. கவிஞன் உண்ட உணவும், உறங்கிய உறக்கமும் இதரர்களைப் போலவேதான் இருந்திருக்கும். மற்ற ஆத்மாக்களைப் போலவே அவனும் குழந்தைப் பருவம் கடந்து வரவரப் பெரியவனாகி யிருப்பான். அறிவு வளர்க்கப் பள்ளி சென்றிருக்க வேண்டும்; அல்லது வீட்டிலாவது பள்ளிக்கூடத்திலுள்ளவை போன்ற பலவிதத் துன்பங்களைப் பெற்றோர்களிடமிருந்து அனுபவித்திருக்க வேண்டும். காலக் கிரமத்தில் அவனும் மணந்து மனைவியுடன் வசித்து, மக்கட்பேறு பெற்று இருக்கலாம். பிறகு வயசு முதிர்ந்து, மயிர் நரைத்து, கிழவனாய்த் தள்ளாடித் தத்தளித்து ஒரு நாள் மண்ணுலகை நீத்து விண்ணுலகு ஏகி யிருக்கலாம். இவைகளையா கவிஞனுடைய வரலாறுகளில் நாம் காணக் கேட்பது?

இல்லை; கவி ரவீந்திரநாத டாகுர் இதற்குச் சரியான தொரு பதிலைத் தாமே தந்திருக்கிறார். கவிப் பண்புகள் படைத்தவரானமையால் பாட்டில் நேருக்குநேர் கருத்தைச் சொல்லாமல், சில அலங்காரமான வழிகளில் மனத்தில் அதைப் பதிய வைக்கின்றார். உள்ளே பார்த்துணர்ந்து பரமானந்தமடையவே கவிஞர்கள் விஷயங்களை மறைத்துரைப்பார்கள். கவனிப்போம் இவர் சொல்வதை:

**வெளியிலிருந்து இம்மாதிரிப் பாராதீர்,**
**வெளித் தோற்றங்களில் என்னைத் தேடாதீர்,**
**என் துயரத்திலும் எனதின்பத்திலும்**
**என்னைக் கண்டறியீர்,**

என்னுள்ளே தோய்ந்திருக்கும் துக்க வெள்ளத்திலும்
என்னைக் காணீர்,
என் சந்தோஷ வெறியிலும் என்னைத் தேடி மோசம்
போகாதீர்,
கவிஞன், தேடும் இடங்களிலெல்லாம் அகப்படான்:
வாழ்க்கை வரலாற்றில் நிச்சயம் கவிஞனைக்
காண்பது அரிது.

வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கொண்டு சந்தேகமறத் தம்மை அறிந்ததாகச் சொல்ல வேண்டாமென்று நம்மை எச்சரிக்கின்றார் போலும். நாமும் இனி இவர் பிறந்த தேதியையும், பள்ளி சென்ற நாளையும், படிப்பு வராமல் வீட்டிற்கு அனுப்பப்பட்ட விவரத்தையும், இவரை வெளியே போக விடாமல் பெரியவர்கள் வீட்டில் கட்டுப் பாட்டில் வைத்ததையும், சகோதர சகோதரிகளுடன் இவர் குழந்தை விளையாட்டுக்கள் விளையாடியதையும், இங்கு விவரிக்க வேண்டாம். வேண்டும் பொழுது இவரிடம் கவிதையை வளர்த்த அடிப்படையான வாழ்க்கை நிகழ்ச்சிகளை மட்டும் குறித்து விட்டு, மற்றச் செய்திகளைப் பொறுத்த மட்டில், இவரிடம் தெளிவாய் ஊற்றுப் பெருக்கெடுத்த கவிதையின் ஓட்டத்தையும், வளைவுகளையும் தொடர்ந்து செல்வோம்.

கவிஞனைப் பற்றிய வரலாறுகள் கேவலம் கற்பனை வகையைச் சேர்ந்ததாக இருப்பினும் பாதகமில்லை. அக் கற்பனைகள் வாயிலாக நாம் பெறும் உணர்ச்சி கவிக் கேற்றதான நிகழ்ச்சி என எண்ணும்படி இருத்தல் அவசியம் என்பது ரவீந்திரரின் கடைசியான முடிவு. ஒரு சமயம், வெள்ளைக்காரக் கவிஞர்களில் சிரேஷ்டரான லார்ட் டென்னிஸன் என்பவரின் ஜீவிய சரித்திரத்தை இரண்டு பாகங்களாகப் பிரசுரித்ததை இவர் வாசிக்க நேர்ந்தது. பாவம், இவர் தேடியதொன்றும் அப் புஸ்தகங்களில் கிடைக்கவில்லை. மனத் தாங்கலுடன் தம் ஏமாற்றத்தை விமர்சன மொன்றில் வெளியிட்டு விட்டார். நம் தேசத்துப் புராதன மரபின் மகிமையும் அப்பொழுது இவருக்குப் புலனாகியது. சரித்திர ஆராய்ச்சி முறையையும்

புறக்கணித்து விட்டு, வேண்டுமென்று கற்பனைச் சித்திரங்களை வைத்துக் கவிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளை அமைப்பதின் கருத்து இவருக்கு மிகவும் உவந்ததாய்த் தோன்றியது. இவர் சொல்லுவார்:

"நம் நாட்டுக் கவிஞர்களின் சரித்திர நிகழ்ச்சிகளை நமக்குத் தெரியாவிட்டாலும் பாதகமில்லை; அதனால் வருந்த வேண்டியதொன்றும் இருப்பதாக எனக்குப் படவில்லை. வால்மீகி மகரிஷியைப் பற்றி நாமறிந்த கதைகளை ஒருவரும் சரித்திர நிகழ்ச்சிகளுக்குச் சமமான அந்தஸ்தில் ஏற்றிவிடவில்லைதான். ஆயினும் ஒன்று மட்டும் சந்தேகமில்லாமல் தெளிவாகின்றது: கவிஞனின் உண்மையான நிலையை விவரிப்பது இக்கற்பனை-நிகழ்ச்சிகளே. வாசகர்களின் இதயங்கள் தேடி அலையும் கவிப் பண்புகளை இம்மாதிரியான வரலாறுகளில் மட்டும் காணமுடியும்: ஒருகால், நிஜமான வாழ்க்கை வரலாறுகள் இருப்பினும், அவைகளில் இவ்விதச் சுவை காண்பது எதிர்பார்க்கக் கூடியதல்ல."

ஆம்; தெளிந்த ஆற்று நீரில் ஸ்நானம் செய்து விட்டுச் சுகமான மர நிழலில் நடந்து வரும்பொழுது, முனிவர் கண்ட காட்சி மனத்தை இரக்கத்தால் கரைய வைத்து விட்டது. அம்பு எய்யப்பட்டு ஆண் பறவை மடிந்து விழவும், அதன் பேடு தீனமாய் ஓலமிட்டுக் கதறவும், ரிஷியின் இதயத்தில் சோகம் நிறைந்து விட்டது. பிறகு சந்தஸ் வடிவில் சோகமெல்லாம் சுலோகமாய் வெளி வந்ததல்லவா? இக்கதையில் கவி பிறந்த வரலாறு வேறெங்கும் உலக இலக்கியத்திலேயே காணக் கிடைக்காத விதம் இருப்பது ஓர் ஆச்சரியம்.

மஹாகவி காளிதாஸரைப் பற்றிய கதைகளுக்குக் கணக்கில்லை. நடக்கக் கூடாத விதங்களிலும் செய்திகள் பல அவரைப்பற்றிப் பரவி உள்ளன. ஆயினும் அவருடைய வாக்கின் இனிப்பைப் பருகிய எவரும், வரப் பிரசாதம் தேவியினிடமிருந்து நேரில் கிடைத்திரா

விட்டால், இவ்வளவு உவமைகளையும், சொல் நயங்களையும், விருத்தங்களின் வேலைப்பாடுகளையும் அவர் செய்திருக்கவே முடியாது என்பர்.

ஊமையாய் வாய் திறவாத மூக கவியும், காஞ்சி காமாக்ஷி அம்பிகையின் அருளால், மடை திறந்தவாறு, அலங்காரமும் சோபையும் பொருந்திய ஐந்நூறு சுலோகங்களை இயற்றினர் என்றால், கவி ஒவ்வொன்றிலும் உள்ள விலை மதிக்க முடியாத சுகத்தை அனுபவித்த ரஸிகருள்ளம் அதை நிஜமெனக் கொள்ளப் பின்வாங்காது. பரதேவதையைச் சுத்த சப்த ஸ்வரூபத்தில் நிலைக்கக் காட்டும் அதிசயம் அவரிடமே உள்ளது.

மேலை நாட்டினர்களுக்கும், அவர்கள் இலக்கியங்களையே சதா ருசிக்கும் ஆற்றல் படைத்த நம்மவர்களுக்கும் இவை தவருகத் தோன்றலாம். ஆனல் கவிதையைப் பற்றிய நம்முடைய அபிப்பிராயங்களே வேறு விதங்களில் ஏற்பட்டவை. ஒரு பதத்தின் அர்த்தம் கூடத் தெரிய வேண்டியதில்லை என்றும், கேவலம் சப்தத்தின் அழகினலேயே ஸஹிருதயர்-உள்ளங்கள் திருப்தி பெறும் என்றும் கொள்கைகளை உடையவர்கள் நாம். தற்காலத்தில் இங்கும் சிலர், மேலை நாட்டுக் காவியங்களில் இருப்பது போன்ற ரசமான வேறுபாடுகளுடைய உணர்ச்சி-வேகங்களுக்கு இடமில்லாமல் உருவாகும் காவியத் தொகுதிகள் இருந்தும் வீண் என்று நம்பி வருகிருர்கள். ரவீந்திரர் எவ்வளவோ தடவைகள் மேலை நாடுகளுக்குச் சென்றவர். ஆங்கில இலக்கிய நிதிகளைத் தாமும் வயிருரப் புசித்தவர். இருப்பினும், இவர் இதயம் திளைப்பது இங்குள்ளவைகளில்தான். மேலை நாட்டுக் காவியங்களில் பூர்ண இன்பம் கிடைப்பதானலும், அதை வேண்டாமென வெறுக்கும் நெஞ்சம் படைத்தவரல்ல. ஒரு விஷயத்தில் மட்டும் பிற தேசத்தவர்களின் இலக்கிய நோக்கங்களைப் பின் தொடர இவருக்கு இஷ்டமில்லை. எதுவாயினும், சமய உணர்ச்சி பெருமலோ, அல்லது

பர சுகத்தை மெய்ப்பிக்காத வகையிலோ, கவி வடிவு கொள்வதில் இவருக்கு மதிப்பில்லை. வெளித்தோற்றங்களைத் தள்ளி, உள்ளே மறைந்து கிடக்கும் உண்மையை எடுத்து உரைப்பதில் தான் இவர் மனம் சதா இன்புறும். அதற்கு மூல காரணம் இவர் வசித்த இடமும், இளம் பிராயத்தில் பெற்ற சகவாசமுமே.

சேற்றில் செங்கழுநீர்ப் பூப்போல இவர் உண்டானவரல்ல. நன்கு பண்படுத்திய குடும்பத்தில் தான் பிறந்தார். இவருடைய தந்தையான தேவேந்திரநாத டாகுர், மகரிஷி என்ற பெயருக்குத் தக்கவாறே வாழ்க்கைத் தர்மத்தைக் கடைப்பிடித்து வந்தார். சிறந்த ஒழுக்கத்தாலும், மோன நிலை கொண்ட தவத்தாலும், உலகப் பற்றற்ற தன்மையை நாடியவர். மேலும் கிருஹஸ்தாசிரமக் கடமைகளையும் சரியாகச் செய்தவர். வயசு அதிகமான காலத்தில் முனியைப் போலவே தபோவனங்களிலுள்ள தனிமையை விரும்பி, இமயமலைப் பிரதேசங்களில் பல நாட்கள் வசித்து வந்தார். உபநிஷத்துக்களே அவர் சதா தம்முடன் கூட வைத்திருந்தவை.

பெரிய குடும்பம் அவருடையது. பதினைந்து குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய், ரவியையும் பதினான்காவது மகவாய் ஈன்றாள். ரவியின் சிறு வயசில் தோன்றிய அநேக வித சக்திகளுக்கெல்லாம் உதவியாய் இருந்தவை அவருடைய சகோதர சகோதரிகளின் கலை-அபிமானமும், கல்வித் திறனுமேயாம். சங்கீதப் பயிற்சியும், கவி பாடும் பழக்கமும் டாகுர் இல்லத்தில் குடிகொண்டிருந்ததென்றால் பொய்யல்ல. மூத்த அண்ணன் த்விஜேந்திரர் அருமையான ஆழ்ந்த எண்ணங்கள் நிரம்பிய கட்டுரைகளைச் சுலபமாய் உருவாக்குவார். ஜ்யோதிரிந்திரர் என்னும் ஐந்தாவது அண்ணன், என்றுமே ரவிக்கு நெருங்கிய பந்து என்று சொல்லிவிடலாம். அவருக்கும் ரவிக்கும் இடையே பன்னிரண்டு ஆண்டுகள் வித்தியாசமிருப்பினும்,

அவ்விருவர்களும் நண்பர்களைப்போல நடந்துகொண்டதில் ஒரு நாளும் மாறுதல் ஏற்படவில்லை. சங்கீதத்தை இருவரும் சேர்ந்தே அப்பியசிப்பார்கள். ஜ்யோதி பிடில் வாசிக்கவும், ரவி தம் இனிய சாரீரத்தை அதனுடன் இழைத்து மனோ தர்ம உலகில் சஞ்சரிப்பார்.

ஏழு எட்டு வயசில் மற்றச் சிறுவர்களுக்கு இருப்பது போலில்லாமல், ரவிக்கு மட்டும் சிற்சில உணர்ச்சி-இன்பங்களில் மனம் சென்று சென்று வரும். வங்காள பாஷைப் பாட புஸ்தகத்தில் வரும் ஒரு சிறு பாட்டின் இரண்டடிகளை இவருடைய குழந்தையுள்ளம் சதா அனுபவித்ததாம். சாதாரணமாய் எல்லாக் குழந்தைகளும் அவ்வளவாக அச்சிறு பாட்டை ரசித்த தில்லை போலும். "மழை படபடவென அடிக்கிறது; இலைகள் காற்றில் அடிபட்டுத் தத்தளிக்கின்றன" என்பவை போன்ற வர்ணனையே அப்பாட்டில் உள்ளது. உடனே ரவியின் இதயம் மழைக் காலத்திற்கே ஓடிவிடும். மேகங்களின் அழகில் என்றுமே தோய்ந்த இதயம் இவருடையது. மழையும் காற்றும் சேர்த்து அடிக்கும் பொழுது கண்கொட்டாமல் இயற்கையின் இயல்புகளைக் கவனித்தவர். சில சமயங்களில் மழை வெள்ளத்தில் நனைவதற்கு இவர் ஆசைப்பட்ட துண்டு.

வீட்டில் மட்டும் கட்டுப்பாடுகளுக்குக் கணக்கே இல்லை. பங்களாவைச் சுற்றி யிருந்த தோட்டத்தைக் கூட இவர் சரியாகப் பார்த்தது கிடையாது. ஆகையால் கற்பனைக் களஞ்சியமான குழந்தையின் உள்ளத்தில், காணாத காட்சிகளே மிகுந்த இன்பம் பயக்கும் உணர்ச்சிகளாகி விட்டன. பிற்காலங்களில் பல தடவை வெளி நாடுகளுக்கெல்லாம் சென்றவராயினும், என்றுமே இயற்கைத் தேவியின் எழிலுக்கும் தம்முடைய சிறிய திருஷ்டிக்கும் நடுவே அகன்று நின்ற — தாண்ட இயலாததோர் — இடைவெளியைப்பற்றிச் சொல்லிச் சொல்லிக் குமுறி யிருக்கிறார்:

வீட்டுக் கிளி கூட்டில் இருந்தது ; காட்டுக் கிளி வெளியே பறந்தது.
இரண்டும் ஒருநாள் சந்தித்தன, விதி வசத்தால் போலும் ;
சுயேச்சை பெற்ற கிளி கேட்டது : 'என் அன்பே,
காட்டை நோக்கிப் பறந்து செல்வோம் வா.'
கூட்டிலுள்ளது காதோடு காதாய்ச் சொல்லியது:
'இங்கே வா, சுகமாய் இக்கூட்டிலேயே காலம் கழிப்போம்.'
சுதந்திரமான கிளி பதிலளித்தது :
'ஐயோ, கூட்டுக் கம்பிகளின் இடையே
இறக்கைகளை விரிக்கக்கூட வசதி இல்லையே எனக்கு!'
உடனே கூட்டில் அடைபட்ட கிளி வேகமாய்ச் சொல்லிவிட்டது :
'அந்தோ, வெளியே வானத்தில் எங்கு
என்னால் தொத்திக்கொள்ள இடம் கிடைக்கும்!'

இந்தியர்களான நமக்கு ஒருநாள் சுதந்திரம் வரப் போவதாக யாராவது ஆசி கூறினாலும், வெகுகால அடிமைப் பழக்கத்தினால் பயமில்லாமல் இனி எப்படி இருப்பதென்பதே கவலையாகிவிடுமல்லவா ? அவரவர் நீண்ட பழக்கமே அவரவர்களுக்கு உபயோகப்படும் போலும்!

சிறு வயசில் எல்லாக் குழந்தைகளுக்கும் உவந்த ஆசைகள் தாம், வெளியே போய் வருவது முதலானவை. ஆனால், பரம்பரைத் தனிகர்களான டாகுர் இல்லத்துக் குழந்தைகளை அப்படி யெல்லாம் அநாதைகளைப்போல் கல்கத்தாவின் நெருங்கிய தெருக்களில் பார்க்க முடியுமா? ரவியின் தாய் இருக்கும் வரையில், ஒருநாளும் குழந்தைகளைத் தனியே வெளியே சென்று வர அனுமதித்தவளில்லை. தாய்க்கல்லவா குழந்தையின் அருமை தெரியும்?

ஆனால், மதனி ஒருத்தி ரவியின் இதயப் போராட்டங்களை நன்கு உணர்ந்தாள். அவளுடைய அன்பு ஒன்றே வெகு நாட்கள் வரையில் ரவிக்கு வீட்டுச் சுகத்தைப் பெருக்கியது. வேலைக்காரர்களின் மத்தியிலேயே வளர்ந்தவருக்கு, நாட்டுப் பெண்ணாக வந்தவளுடைய அபிமானம்

ஆதரவைக் கொடுத்தது. ஒரே குதூகலமாய்த்தான் ரவியும் தமக்குரிய சுதந்திர வேட்கையுடன் பக்கத்திலுள்ள தோட்டத்தில் திரிந்து வரத் தொடங்கினர்.

புராணக் கதைகளைக் கேட்பதில் ரவியின் மனம் மிகுந்த ஆவல் பெறும். வீட்டில் பாடம் சொல்லி வைத்த உபாத்தியாயர் ஒருவர் சிறுவர்களை விஷமம் செய்யாமல் வைத்துக் கொள்வதற்காக, இடை யிடையே ராமாயண மஹாபாரதக் கதைகளிலிருந்து எதையாவது ஒன்றைச் சுவாரஸ்யம் ஊட்டும் விதத்தில் சொல்லுவார். அவ்வளவு தான்; ரவியின் களிப்பிற்கு எல்லையே தெரியாது. குசலவர்கள் வால்மீகி முனிவரின் ஆசிரமத்தில் வளர்ந்ததையும், ராம லக்ஷ்மணர்களைப் போரில் ஒரு நாள் அவர்கள் எதிர்த்ததையும் உபாத்தியாயர் சொல்ல ஆரம்பிப்பார். எத்தனை தரம் கேட்டிருந்தாலும் ரவிக்கு மறுபடியும் மறுபடியும் மேலே வரப்போகும் நிகழ்ச்சிகளில் அடக்கமுடியாததோர் அவா உண்டாகும். நாசமாய்ப் போக! அவ் வுபாத்தியாயர் வேண்டுமென்றோ, என்னவோ, அவ்விடத்தில்தான் நிறுத்தி விட்டுத் தம் கடையைக் கட்டி, வீட்டிற்குப் போய் விடுவார். மேலே கதையை அறிய வேண்டி ரவி மற்றவர்களைக் கேட்டுக் கேட்டு அலுத்து விடுவார். கிசோரன் என்னும் வேலை ஆள் ஒருவனே குழந்தையின் வேண்டுகோளுக்கிணங்கி மேலே கதையைச் சொல்லி முடிப்பான். ஆனால் அவன் சொன்ன வேகமும், அவனுக்கிருந்த சுவை யுணராத கதை சொல்லும் பழக்கமும், கதையைச் சப்பென்றாக்கி விடும்.

கிருத்திவாஸர், வித்தியாஸாகர் போன்ற ஆசிரியர்கள் வங்காள பாஷையில் புராணக் கதைகளை எழுதியுள்ளார்கள். நீண்ட பாட்டுக்களைக் கிருத்திவாஸர் செய்திருக்கிறார். ரவிக்கு ஆயாசத்தைக் கிளப்பும் அப்பாட்டுக்களின் நீளத்தில் சலிப்பு ஏற்பட்டாலும், ராமாயணக் கதையை உட்கொள்ளுவதில் உள்ள ஆர்வம் எல்லாவற்றையும் மறக்கடித்து விடும்.



பதினெட்டாவது வயதில் இங்கிலாந்தில் இருந்தபோது

# 2. சுற்றுணர்ச்சி

எட்டு வயசுப் பாலகனுக்குப் பாட்டுக் கட்டுவதில் ஒரே ஆசை என்பதை வேறு எவ்விடத்திலும் கேட்டிருக்க முடியாது. கவிகளானவர்களிடமே இப்பழக்கங்கள் அதிக மிருக்கலாம். நம்மைப் போன்றவர்களுக்கு இவைகளில் சிறிதேனும் உற்சாகமில்லாத காரணமே, கவிதைக் கென ஒருவர் உயிர் வாழ்ந்ததை நினைக்கக் கூட முடிவதில்லை. ரவியினுடைய இதயம் எதையாவது நினைத்து உணர்ச்சி பெறும். உடனே உள்ளுக்குள்ளே புரண்ட மன எழுச்சிகளை யெல்லாம் வெளியே கொட்டி விட வேண்டும் போல் ஒரு வேகம் பிறக்கும். பேனாவைக் கையில் எடுத்து விறுவிறு என்று ஏதேதோ எழுதி விடுவார் காகிதங்களின் மேல். ஆனால் தமக்கே புரியாத விதமும் சில எண்ணங்கள் இவரையே விழித்து நோக்கிக் கொண்டிருக்கும். கடவுளுக்கு மட்டுமே அவை விளங்கி யிருக்கலாம் அக்காலத்தில்!

தாமரையைப் பார்த்ததும் இவருக்கு ஒரு சந்தோஷம் ஏற்பட்டது. உண்மையில் தாமரை மலரைக் கவனித்துப் பார்த்தவர்கள் இந்திய இலக்கியங்களில் அம்மலருக்குத் தந்திருக்கும் முதன்மை ஸ்தானத்தைப் பழிக்க மாட்டார்கள். தாமரையை அன்றாடம் மனம் குளிரக் கண்ட கண்களுக்கு அதனைக் கடவுளின் முகத்திற்கும், கண்களுக்கும், உள்ளங்கைகளுக்கும், பாதங்களுக்கும் உவமானமாய்க் கூற ஆசை பிறப்பதில் மனத் தளர்ச்சியே இராது. சம்பிரதாயமாய்த் தான் சொல்வதானாலும் கூட, எங்காவது, யாராவது ஒருவர் கண் படைத்தவ ராயின், இவ்வுபமானத்தின் முழு அழகையும் பருக வேண்டிய உணர்ச்சி யனுபவங்களைப் பெறாமல் இருக்க மாட்டார். ஆகையால் ரவியும் தாமரையைக் கண்டு கவிதையை அழைத்ததில் ஒருவிதக் கோளாறும் இருப்பதாக எண்ணுவதற்கில்லை. சிறுவருக்கு

எத்தனையோ அழகிய வடமொழிச் சொற்களை அந்தப் பாட்டில் புகுத்தவே ஆசை. வேண்டிய அளவு பதங்களை யெல்லாம் சேர்த்துக் கவியொன்று கட்டிவிட்டார். வீட்டில் உள்ளவர்கள் இவருடைய புதிய கற்பனையை இவரே வாசிக்கக் கேட்டார்கள். விருந்தினராய் வந்திருந்த ஒருவர் சிறுவனைப் பார்த்து 'த்விரேப' என்று போட்டிருக்கும் பதத்தின் அர்த்தம் என்ன என்று வினவினார். ரவிக்குத்தான் எத்தனையோ அழகிய பதங்களின் முழுக் கருத்தும் கூடத் தெரியாதே! காதிற்குச் சுகமாய் இருப்பவைகளை அவர் எடுத்துப் போட்டதில் பொருத்த மில்லாமல் இல்லை. மேலும் அர்த்தம் தெரிந்தவர்களுக்கு, வண்டினங்களுக்கும் தாமரை மலருக்குமுள்ள, தொன்று தொட்டு வந்த, உறவு நன்கு தெரியுமாதலால், புரியாமல் சிறுவர் புகுத்திய பாஷையிலும் பொருத்தங்கள் இருப்பதைக் கண்டு ஒரு திருப்தி ஏற்பட்டது.

கவி பாடும் சிறுவருக்குப் பள்ளி செல்வதும், உபாத்தியாயர்களின் உபத்திரவங்களும், பொறுக்க முடியாமல் தோன்றியதிலும் ஒருவித ஆச்சரியம் இல்லை. ஆனால் வீட்டிலுள்ளவர்களிடமிருந்து அதே தொந்தரவுகள் நேரிடக் கூடுமல்லவா? ரவியினுடைய தந்தை ஊரில் இருப்பதுகூடக் கிடையாது. தகப்பனாரைச் சிறுவர்கள் அக்காலத்தில் அறிந்ததும் குறைவு. கடைக்குட்டியான ரவி ஒன்பது வயசு வரையிலும் தந்தையைப் பற்றிய கனவுகளையே கண்டார். என்றைக் காவது ஊரில் தகப்பனார் வந்திருந்தால் அவரை நமஸ் கரிக்கப் பய பக்தியுடன் எதிரில் தோன்றுவார். ஆனால் அவ்வளவு மனக் கலவரத்தில் பெரியவரைச் சரியாகக் கவனிக்க எப்படி முடியும்?

தேவேந்திரருக்கு ரவியின்பால் திடீரெனக் கவனம் சென்றது. வீட்டில் தாய்மொழியைப் பயிலவே சௌகரியங்களை அவர் செய்தார். ஆங்கிலம் சிறிது பயிலப்பட்டாலும், அதிகமான பழக்கம் ரவிக்கு வங்காள பாஷையில்தான். கொஞ்ச காலம் பள்ளி சென்றபொழுது

கூட, வங்காள பாஷையில் கட்டுரை எழுத வேண்டிய பரீக்ஷை ஒன்றில் முதன்மையாகத் தேறினர். மற்றப் பாடங்களில் கவனமே செல்லாத இளைஞருக்கு இந்தப் பாடத்தில் முதல் ‘மார்க்கு’ வந்தால், உபாத்தியாயர் நம்புவாரா? ஏதோ சூது இருக்க வேண்டும் இதில் என்று சந்தேகித்து, சிறுவரை மறுபடியும் பரீக்ஷைத் தொந்தரவுக்கு உள்ளாக்கினர். தெய்வம் ரவியின்பால் இருந்ததோ, அல்லது சிறந்த ஞானம் இவருக்கு உதவியதோ, பரீக்ஷையில் மறுபடியும் இவர் முன்னல் நின்று விட்டார். தாய்மொழியை இவர் குழந்தையிலிருந்தே அனுபவித்ததினல், கவிப் பண்புகள் வளம் பெற்றவுடன், பாஷைக்கென ஒருவிதச் சிரமமும் இவருக்கு ஏற்படவில்லை. இங்கு முதலிலிருந்தே ஆங்கிலப் பயிற்சி செய்தவர்களுக்குக் கூட ஒருநாளும் மனத்தில் எழும் எல்லா எண்ணங்களையும் அப்பாஷையில் சொல்ல முடியாது; அப்படிச் சிறிது முடிந்தாலும் கவிதையின் லவலேசமும் அவைகளில் இருப்பது சாத்திய மில்லை.

தந்தைக்குப் பிள்ளையிடம் வேரூன்றிய அன்பு ஏற்படுவதற்குக் காலமும் நேரமும் நெருங்கிற்று. பிள்ளைக்கு உபநயனம் செய்வதற்குத் தந்தை பத்து வயசில் ஏற்பாடு செய்தார். காயத்ரி மந்திரத்தை ஜபிப்பதில் சிறுவருக்கு உண்டான சொல்லொணு அனுபவம் வியக்கத் தக்கது. ஜாக்கிரதையாக மந்திர உச்சாரணம் செய்வார். பதங்களின் முழுக் கருத்தை உணர வேண்டியதில்லை, அவசியமுமில்லை, என்பதை ரவி காயத்ரி மந்திரங்களைப் பல தடவை சொல்லிய பொழுது அறியத் தொடங்கினர். உணர்வைத் தட்டி எழுப்புவதைத் தவிர வேறு எவ்விதப் பிரயோஜனத்தையும் சொற்கள் செய்வதில்லை. வாஸ்தவத்தில், அந்தரங்கத்தில் கிளம்பும் எண்ணங்களை யெல்லாம் நன்கு அறிந்து விவரிக்கப் பாஷையினல் சாத்தியமா? உணர்ச்சிகள் எத்தனையோ, தினம் தினம், நிமிஷத்திற்கு நிமிஷம், தோன்றுவதும் மறைவதுமாய், பாஷையாகிற கூட்டிற்குள் அடைபடாமல் தங்கி விடுகின்றனவே!

என்ன செய்வது? பின் எதற்கு, சர்வகலாசாலைகளில் வைத்த பாட புஸ்தகங்களை உருப்போட்டுப் பரீக்ஷையிலும் தேறிப் பட்டம் பெற்றவர்களைத் தவிர, மற்ற மாந்தர்களைப் படிப்பில்லாத அறிவிலிகள் என்று கருதுகிறோம்? எல்லாம் நாம் அடைந்திருக்கும் ஞானக் குறைவின் சின்னங்களே என்பதில் சந்தேகமில்லை.

உண்மையைக் கூறுமிடத்து, ரவீந்திரருக்கு ஸம்ஸ்கிருத மொழியில் உள்ள அழகும் கம்பீரமும் கலந்த சொற்றொடரொன்றே இன்பத்தில் ஆழ்த்தப் போதுமானதாகிவிட்டது. மேக ஸந்தேச காவியத்திலிருந்து மந்தாக்கிராந்தா விருத்தங்களை இவர் தமையனுரான த்விஜேந்திரர் உரத்த குரலில் சொல்லுவதைக் கேட்டவருக்கு, கண் இமைகளை மூடி அனுபவிக்கும்படித் தோன்றும். சப்தங்களினூடே பாய்ந்த தனிப்பட்ட மாதுர்யம் செவிப் புலன்களையும் தாண்டி உள்ளே பாய்ந்து அவ்விடத்தில் தேங்கத் தொடங்கி விட்டது. அன்று முதல் காளிதாஸரை விடாமல் பாராயணம் செய்து விட்டார்.

தந்தைக்கும் தனயன் உள்ளத்தில் உண்டாயிருந்த புத்துயிரின் வேகம் விளங்காமலில்லை. உபநிஷத்துக்களைச் சதா வாசித்து மனனம் செய்தவரானமையால், பிள்ளைக்கும் உபநிஷத்துக்களிலுள்ள ஆழ்ந்த உண்மைகளைக் கண்டறிவதற்கு வேண்டிய இயற்கையுறவு நிலைக்க வேண்டுமென்று நினைக்கலானார். உடனே தம்முடன் யாத்திரைகளில் இவரையும் அழைத்துச் செல்லலானார். கங்கைப் பிரவாகத்தில் மிதந்து செல்லும் படகு-வீடுகளில் சில சமயங்களில் மகனையும் தம்கூட இருக்கச் செய்வார். கங்கை நதியின் இருக்கரைகளிலும் காட்சி அளித்த இயற்கை விநோதங்களையும், நதியின் ஜலத்தில் கண்ட அதிசயமான மீன் வகைகளையும், வானத்தில் சதா பாடிய பறவைகளையும், ரவியின் கண்கள், இதுவரையும் பட்டினியினால் வாடியவை போல் மிகுந்த ஆவல் கொண்டு உட்கொண்டன.

தந்தை எடுத்து வந்திருந்த அரிய ஸம்ஸ்கிருத புஸ்தகங்களில் ஒன்ருன ஜயதேவருடைய 'கீத கோவிந்தம்' ரவியின் கவனத்தை இழுத்து விட்டது. சப்த ஜாலங்களுக்கும், சிருங்கார ரசத்தின் நீர்விழ்ச்சிகளுக்கும் ஜயதேவரிடம் பிறர் கடன் வாங்க வேண்டுமல்லவா? "இப்படியும் பாட்டுக்கள் உள்ளனவா?" என்று ரவி அற்புத உலகிற்கே செல்லத் தொடங்கி விட்டார். என்ன இன்பமயமான வார்த்தைகள்! "நிபிருத நிகுஞ்ச கிருஹம்" போன்ற சொற்றொடர்கள் போதும், ரவியின் கற்பனைப் புரவியைத் தட்டிவிட. காட்டின் மத்தியில் தனிமையான குடிசையொன்றை இவருடைய மனக்கண் கண்டது. பிறகு எவ்வளவு தடவை இவர் ஜயதேவரை வணங்கி வழிபட்டாரோ தெரியாது.

காளிதாஸருடைய குமார சமபவம் என்ற காவியத்தைப் பண்டிதர் இவருக்குச் சுலோகந் தோறும் வாக்கியங்களாகப் பதச் சேதம் செய்து அர்த்தம் சொல்லி வைத்தார். ஓர் இடத்தில் "பாகீரதி நதியின் நீர்த் திவலைகளை ஏந்திக் கொண்டும், வரும் வழியிலுள்ள தேவதாரு மரங்களைக் குலுக்கிக் கொண்டும் அடித்த வாடை" என்று வந்ததும், இவருக்கு அடுத்த அடியைக் கூட அனுபவிக்க முடியாமல் செய்துவிட்டது பொங்கிய உணர்ச்சி வெள்ளம்.

தந்தை, சிறுவனுடைய செயல்களைக் கூர்மையாய்க் கவனித்ததில், அசாதாரணமான இயல்புகளைச் சிறுவனிடம் பார்த்து விட்டார். கேவலம் உலக ஞானம் பெற்ற சுற்றத்தார்களே சிறு பிராயத்தில் ஒருவரைக் கற்பனைச் சுகங்களுக்கு வாய்த்தவராக இராமல் அடித்து விடுவார்கள். அம்மாதிரித் துர்ப்பாக்கியத்தை ரவீந்திரர் ஒருநாளும் பெறவில்லை. கற்பனைகளுக்கும் உயர்ந்த லக்ஷியங்களுக்கும் தகுதியான பாராட்டைக் குறைவில்லாமல் பெற்றிருந்தார்.

ஒரு நாள் ரவி தந்தையிடம் ஓடிவந்து தாம் பொறுக்கி வந்த பல வகைக் கூழாங் கற்களைக் காட்டிச்

சந்தோஷித்தார். தம் தவச் சடங்குகளுக்குத் தடையாகச் சிறுவரின் செயல்களை எண்ணிவிடாமல் பெரியவரும்,

'என்ன ஆச்சரியம்! இவைகளை எங்கே கண்டெடுத்தாய்?' என்றார்.

உடனே இன்னும் உற்சாகத்துடன் ரவி, "வேண்டியவை அகப்படும்; நிறையக் கொண்டு வரட்டுமா, அப்பா?" என்று கேட்பார்.

பெரியவரும் சரி யென்று பிள்ளையிடம் கூழாங் கற்களைக் கொண்டுவரச் சொல்லித் தம்முடைய தியானத்திற்கு உவந்ததான மணல் மேட்டை அலங்கரிக்கும்படி ஏவி விடுவார். அவ்வளவு தான்; ரவி குதித்துக் கும்மாளம் அடித்துவிட்டுக் கற்களை யெல்லாம் கொண்டு வந்து விடுவார்.

ரவி, தாம் பார்த்த சிறு மலை யருவியின் அழகைத் தந்தையிடம் வருணிப்பார். தகப்பனாரும் சட்டென்று ஆட்களை ஏவி, ரவி காட்டும் ஓடை நீரையே தமக்கு அருந்துவதற்குக் கொண்டு வரும்படி கட்டளை யிடுவார்.

இமய மலைக்கு ரவியை ஒரு தரம் தேவேந்திரர் தம்மோடு கூட்டிக்கொண்டு போனார். தம் நித்திய கர்மங்களுக்கே காலம் போதாதபடியால் ரவியை இஷ்டம்போல் காடுகளையும் மலைச் சிகரங்களையும் பார்த்து வர விட்டுவிடுவார். அப்பொழுது பார்க்க வேண்டும் ரவியை! உயர்ந்தோங்கிய தேவதாரு விருக்ஷங்கள், முனிவர்கள் தவம் கிடப்பதுபோல், கிளைகளாகிற கைகளை மேலே தூக்கி நின்ற கோலம் இவருடைய மனத் தடத்தே புதிய கிளர்ச்சிகளை உண்டாக்கின. இங்கு ஒரு இடத்தில் மலைப் பாறைகளினிடையே நீர்வீழ்ச்சி ஒன்று, ரிஷி குமாரி ஒருத்தி மழலையுடன் தாவி விளையாடுவதுபோல் குதித்து வருவதைக் கண் கொட்டாமல் பார்த்தனுபவிப்பார். அங்கு ஒரு இடத்தில் வனக் கொடிகள் ஆசாபந்தங்கள்

போல் பிணைத்துப் புதரையே மறைத்திருப்பதை நின்று சேவிப்பார். என்ன பசுமை! எங்கிருந்துதான் இயற்கையின் வர்ணங்கள் இப்படிக் கிளம்புகின்றனவோ! இவ்விதம் பிரமித்த சிறுவருடைய இதயம், 'இமய மலையை விட்டுக் கல்கத்தாவுக்குத் திரும்பு' என்றால், உடனே இணங்குமா? சீக்கிரத்தில் அவ்வின்பங்களை விட்டுவிட மறுத்தது.

ரவியின் கண் திறந்தது என்றால், இயற்கையிலுள்ள வனப்பிற்கு மட்டுமல்ல. இவருடைய விழிகள், இனி எங்கு எதைக் கண்டாலும் ஊடுருவிப் பாய்ந்து திளைக்கத் தெரிந்து கொண்டன. கல்கத்தாவின் குறுகிய தெருக்களிலும் கூட இவருடைய கண்ணோட்டம், எவ்வளவோ சூக்ஷமங்களைத் துழாவிப் புலன்களுக்கும் அப்பால் உள்ள இடத்தில் அதிசயங்களைச் சேகரிக்கத் தொடங்கியது.

வீட்டிற்கு வந்தும் காட்டின் ஞாபகம் சிறுவரை விட்டகலவில்லை. வால்மீகியைச் சிறுவருக்குத் தந்தை பரிசயம் செய்து வைத்தார். வால்மீகி ராமாயணத்தை வாசிக்கையில் சிறுவர் நின்று நின்று மூச்சு வாங்கிக் கொள்ளுவார். அதில் காணாத மலைவருணனைகளா? அதில் விவரிக்கப்படாத உலக இயல்புகளா? ரவியின் வயசு அப்பொழுது அதிகமில்லைதான். ஆனால் வால்மீகியை ரவி அனுபவித்ததைக் கண்ட மூத்த தமையனார் 'இவைகளை வங்காளத்தில் மொழிபெயர்த்து விடு' என்று உற்சாகப்படுத்தி விடுவார். ரவியும் சில சுலோகங்களைப் பொறுக்கித் தம் வார்த்தைகளிலேயே தருவார்.

ஸம்ஸ்கிருதம், வங்காளம், இவைகளுடன் ஆங்கிலமும் பயில அண்ணன்மார்கள் இவருக்கு வசதிகளைச் செய்ய முன் வந்தார்கள். 'பள்ளிக்குப் போகத்தான் பிள்ளைக்குப் பிடிக்கவில்லை; வீட்டிலாவது வாசிக்கட்டுமே' என்றார்கள் அவர்கள். ஸத்யேந்திரர் என்ற இரண்டாவது சகோதரர் சிவில் ஸெர்விஸ்

பரீக்ஷையில் தேறி உத்தியோகமும் பெற்று, வெளி ஊரில் வேலை பார்த்து வந்தார். டாகுர் குடும்பத்தில் அவர்தான் சீமைக்கு முதலில் சென்றவர். மேலை நாட்டு வாடையும் அவ்விடத்தில் அடிக்கத் தொடங்கியது அவரால்தான். ரவி தேடிய கவிதை இன்பம் பாஷையாகிற வேற்றுமைகளைச் சட்டை செய்யவில்லை. ஷேக்ஸ்பியருடைய 'மாக்பெத்' போன்ற நாடகங்களைச் சிறுபிள்ளையாக இருக்கையிலேயே ரஸித்து வங்காளத்திலும் இவர் தர்ஜமா செய்தார். டிக்கென்ஸ் பேராசிரியரின் நவீனங்களில் அகப்பட்டு, வாழ்க்கை-வீதிகளில் நடப்பது போன்ற புதிய அனுபவங்களையும் பெற்றார்.

வங்காள பாஷையில் சிறந்த சரித்திரக் கதைகளைச் சிருஷ்டித்த பங்கிம் சந்திரர் அக்காலத்தில் புகழுடைந்து விளங்கினார். ரவியினுடைய சில பாட்டுக்களை அச்சிலும் அவர் வாசித்து விம்மிதமடைந்தார். வங்காள மொழிக்கு வளம் தரும் கவிதைகளைக் காணவே அவர் சிறுவர்பால் கௌரவம் காட்டினார். 'ஞானங்குரம்' 'பாரதி' முதலிய வங்காளப் பத்திரிகைகளில் ரவீந்திரருடைய கவிதையின் ஆரம்பங்களைக் காணலாம். ரவியின் புது ஆர்வத்தை ஒப்பாத சிலரும் இருந்தார்கள். அவர்கள் அடிக்கடி ரவியின் பாட்டுக்கள், மரபில் வந்துள்ள ரீதிகளை அனுசரிக்கவில்லை என்று காட்டவும் முற்பட்டார்கள். இவைகளால் ரவி சற்றும் சளைக்கவில்லை. தமக்கு வேண்டியவர்கள் பிரசுரித்த பத்திரிகைகளில் தாராளமாய் எழுதத் தொடங்கிவிட்டார்.

ஒரு நாள் ரமேச சந்திர தத்தர் என்ற வங்காளி தம் கிருகத்தில் ஒரு விருந்தை ஏற்படுத்தியிருந்தார். ரவிக்கும் அழைப்பு வந்தது. அங்கு வாசலில் வருபவர்களுக்குப் புஷ்ப மாலைகள் போட்டு வரவேற்றார்கள். அம்மாதிரிப் போடுகையில் பங்கிம் சந்திரரும் ரவி நுழைவதற்குள் முன்னால் நடந்து வந்தார். அவருடைய கழுத்தில் அணிய வந்த ஆரத்தை, அவர் பக்கத்தில் வந்த இளைஞரான

ரவியின் கழுத்தில் இட்டுப் பின்வருமாறு சொன்னார்: 'இனி இவருக்குத்தான் இம்மாலைகள் உரியன!'

சிறுவருடைய உள்ளம் எவ்விதம் இச்சொற்களால் பெருமித மடைந்தது என்று தெரிய வேண்டியதில்லை. இலக்கிய உலகில் வேறு எவ்வித லாபத்தைக் காட்டிலும், எழுத்தாளர்களின் இனத்தைச் சார்ந்தவர்களுடைய பகுத்தறிவுடன் கூடிய பாராட்டு-மொழிகளே சிறந்த பரிசாகக் கருதப்படும். பாராட்டும் பழக்கம் என்றுமே உயர்ந்தது. உருவாகாத கவிதையைக்கூட உயிர் பெறச் செய்வது மற்றெதுவும் இல்லை.

ரவீந்திரருடைய சிற்றப்பாவின் பிள்ளைகளில் ஒருவரான குணேந்திரர் மிகவும் இலக்கியப் பற்று உடையவர். அவருடைய புதல்வர்களே, ஓவிய மணிகளான ககநேந்திரரும் அவநீந்திரரும். குணேந்திரர் சிறு வயசில் காளிதாஸருடைய 'விக்கிரமோர்வசீயம்' என்ற அரிய நாடகத்தை வங்காளத்தில் மொழிபெயர்த்திருந்தார். மற்றும் பல சொந்தக் கற்பனைச் சிருஷ்டிகளையும் இயற்றியிருந்தார். தேசீய கீதங்கள் பல அவரிடமிருந்து உற்பத்தியாயின. மேலும் நாடகம் தயாரிப்பது மட்டு மல்லாமல், அவைகளுக்கு உரிய சகல ஏற்பாடுகளையும் தாமே செய்து, சங்கீதம், வேஷ அமைப்பு முதலியவை களில் மிகுந்த அனுபவம் பெற்றுவிட்டார். அவருடன் பழகியது ரவிக்கு அநேக விதங்களில் உபகாரமாயிற்று.

ஒன்று மட்டும் மறக்காத அனுபவம் எனலாம். ஒரு நாள் ரவி தம்முடைய சகாவான சத்தியம் என்ற பையனுக்குப் பள்ளி-வகுப்பில் பரிசு அளிக்கப்பட்ட பொழுது அதைத் தம் கைகளில் ஏந்திக்கொண்டு வந்து குணேந்திரரிடம் காண்பித்தார். 'சத்தியம் பெற்ற பரிசு!' என்று களிப்புடன் கூறும் சிறுவரைப் பார்த்துக் குணேந்திரர் 'உனக்கு ஒன்றுமில்லையா?' என்றாராம். சிறுவர் யோசியாமல், 'எனக்கில்லை பரிசுகள்; எல்லாம் சத்தியம் பெற்றவை' என்றதும்,



சுதேசி இயக்கத்தின்போது
கவி ரவீந்திரர்

களங்கமற்றதொரு உற்சாகமும், பாராட்டும் குணமும் நிலைத்திருப்பதைச் சிறுவரிடம் கண்டு அவர் உளம் பூரித்தார். குணேந்திரர் என்ற பெயருக்கேற்றபடி அவர் குணசாலி என்பதில் சந்தேகமில்லை. அவர் கொண்டாடிய பாராட்டும் பழக்கம் உலகிலேயே சிலரிடம்தான் காணப்படுகிறது.

எல்லாம் ரவிக்கு நன்மையையே உண்டாக்கின. ரவியின் கவி-ஊற்றுத் தடைபடாமல் பெருகுவதற்கு வழி செய்தன, அண்ணன்மார்களுடைய கலை-ருசிகளும் கவி இயற்றும் ஆற்றல்களும். த்விஜேந்திரர் வாசல் தாழ்வாரத்தில் உட்கார்ந்து, எழுதி எழுதி, வேண்டாத தாள்களைக் காற்றில் மிதக்கச் செய்வார். மாம்பூ, மல்லிகைப் பூ முதலியவைகளைப்போல், எழுதிய காகிதங்கள் வாசலில் உதிர்ந்து கிடக்கும் காட்சி விநோத மளித்தது. சுற்றுணர்ச்சி கவி மயமாய் இருப்பது கண்ணில் நேருக்கு நேர் தென்பட்டதை யார் இனி மறுத்துக் கூற முடியும்?

# 3. புதிய அனுபவங்கள்

பதினேழு வயசு யுவாவை வெளிநாடுகளுக்கு அனுப்பப் பயந்த குடும்பமல்ல டாகுருடையது. ஏற்கெனவே அண்ணனை ஸத்யேந்திரருடன் ஆமதாபாத்தில் இவர் வசித்து வந்ததுண்டு. தமையன் வீட்டிலில்லாத சமயம் தம்பி தனிமையில் பொழுது போக்குக்காக அலமாரிகளில் அடுக்கி வைத்திருந்த சிறந்த ஆங்கில நூல்களைச் சிறிது சிறிதாக வாசிக்க முற்பட்டார். அகராதியின் உதவி கொண்டு அர்த்தமாகாத பதங்களுக்குப் பொருளும் தெரிந்துகொள்வார். ஆனால் ஒரு பழக்கம் மட்டும் அப்பொழுது முதற் கொண்டு இவரைப் பின் பற்றியது: வாசிக்கையில் புரியாதவைகளைப் புரிந்து கொண்டுதான் மேலே செல்வது என்பதை இவர் நம்பவில்லை. தம்முடைய கற்பனைத் திறனுக்கு ஏதாவது வேலை வைக்கவே போலும், புஸ்தகம் தந்த அறிவில்

இடைவெளிகள் ஏற்பட்டால் அவைகளைத் தம் கற்பனையினால் அழகாகப் பூர்த்தி செய்து கொள்வார். இப்பழக்கம் நன்மையையும் கொடுக்கும்; சில சமயம் கெடுதலையும் விளைவிக்கும்.

'அமரு சதகம்' என்ற வடமொழி நூலை ஆமதாபாத்தில் தனித்திருக்கையில்தான் இவர் வாசிக்க நேர்ந்தது. கம்பீரமான பதப் பிரயோகங்களை அதில் கண்டு மிகவும் சந்தோஷத்துடன் அவைகளைத் தம் வாயால் சொல்லிப் பார்ப்பார்.

மற்றொரு அனுபவம் ஆமதாபாத்தில் இவருக்கு ஏற்பட்டது. இவரது அண்ணன் தங்கிய வீடு பெரிய நவாபுக்கள் பண்டைக் காலத்தில் வசித்த அரண்மனையைச் சார்ந்தது. ஆகையால் இந்திய சரித்திர நிகழ்ச்சிகளில் ஊறிய இவரது ஞாபகங்கள் மொகலாய அரசாட்சியின் காலங்களுக்கு விரைந்து செல்லும்.

அண்ணனுடன் சீமைக்கு இவரையும் கூட அனுப்புவதென வீட்டில் தீர்மானமாகியது. அதற்கு முன், வெள்ளைக்காரர்களின் நடை உடை பாவனைகளில் இவருக்கு ஏற்பட வேண்டிய தேர்ச்சிக்காக அண்ணனால் பலமான பல ஏற்பாடுகள் நடந்தேறின. இவருக்கு எல்லாம் உடம்பிற்கு ஒவ்வாததாயும், மனத்தில் கலக்காத விதமும் தோன்றின. இருப்பினும், சீமை சென்று வர ஒரு தனி உற்சாகம் இருந்ததென்பதில் ஐயமில்லை.

சீமையில் காலை ஊன்றியதுமே, திக்குத்திசை தெரியாமல் மனம் கலங்கி விட்டது. பழமையான தேசத்திலிருந்து புது நாகரிக வெள்ளம் கரை புரண்டோடும் இடத்திற்கு ஒருவர் கப்பலேற்றப் பட்டால், தீவாந்தர சிட்சை பெற்ற குற்றவாளிபோல் தம்மை நினைத்துக் கொள்வதில் என்ன தடை? நல்ல காலம், இவருடைய மதனியும் அவள் குழந்தைகளும் அங்கு

இருந்ததால் சிறிது ஆறுதல் அடைந்தார் என்று தெரிகிறது.

சீமைக்கு வந்தும் கல்வி கற்காமல் முடியுமா? ஆகையால் இவரைச் சிறந்த பள்ளியில் சேர்த்தார்கள். சேர்த்தென்ன பயன்? ரவிக்கும் ஆங்கிலக் கல்விக்கும் இடையே காதங்கள் குறுக்கிட்டன. ஆங்கில இலக்கிய அபிருசிகள் இவரிடம் பூர்ணமாயுள்ளன என்பதை ஒருவரும் சந்தேகிக்க இடமில்லை. ஆங்கிலக் கவிகள் பல இவருக்கு ஏற்கெனவே மனப்பாடமாயிருந்தன. தமக்குள்ள பகுத்தறிவை உபயோகியாதவரும் அல்ல இவர். ஆங்கில இலக்கிய நிதிகள் எவ்வளவு நேர்மையுடன் விளங்கிய போதிலும், மனித வாழ்க்கையின் சாமானிய லக்ஷ்யங்களையே போஷிக்கின்றன. ஆத்ம குணங்களையும், சிறந்த நெறி தவறாத ஞானத்தையும் கட்டுப்பாடாய் அவை உணர்த்துவதில்லை. மற்ற ஐரோப்பிய இலக்கியங்களில் கூட எங்காவது பரலோகத்திற்கான அறிவைக் குறிக்கும் விஷயங்களைக் காணலாம். ஆங்கில இலக்கியக்காரர்கள் எல்லோருமே இகலோக சுகத்தையும், சாமானிய ஒழுக்க வாழ்க்கையையும் மட்டுமே தங்கள் சிறந்த நோக்கங்களாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். மற்றப்படி முத்தி அளிக்கும் முத்திரை பெற்ற ஒருவித சாஹித்யச் செல்வமும் அவர்களிடம் கிடையாது என்பது இவருடைய அனுபவ சித்தாந்தம்.

ரவீந்திரர் சீமையில் இருக்கையில் நாஸ்திக வாதங்கள் செழித்துக் கொண்டிருந்த சமயம். நாஸ்திக வாதம் என்ன செய்யும்? இந்நாட்டில் நாஸ்திக வாதம் இல்லையா என்றால், அங்குள்ளதற்கும் இங்கிருப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. நாஸ்திக மதஸ்தர்களும், சார்வாகப் புரட்டுக்காரர்களும் இங்கும் கிரந்தங்களை எழுதினார்கள். ஆனால் கேவலம் புத்தியைச் சாணை தீட்டவே இவை உபயோகமாகின்றன. சாஸ்திரம் படித்த பெரியவர்கள் பூர்வ பக்ஷங்களுக்கு உபயோகமாவதற்கு அவ்வித நாஸ்திக வாதங்களை நன்கு பரிசீலனை செய்வார்கள். மற்றப்படி

அவர்களில் கூடப் பலர் உண்மையில் தொன்றுதொட்டு வந்த மரபிற்கு விரோதமாய் வாழ்க்கை நடத்தவும், கடவுளை வழிபடாமல் இருக்கவும் துணியார்கள்.

சீமையில் சங்கீதத்தைப் பயில ரவிக்குப் புத்துணர்ச்சி எழுந்தது. மேலை நாட்டுச் சங்கீத சம்பிரதாயங்களும் கீழை நாட்டுச் சங்கீதக் கலை மரபுகளும் வேறுபட்டுள்ளன. இவருக்கு ஒன்று மட்டும் தீர்மானமாக அங்கிருக்கையிலேயே பட்டது. எவ்வளவோ வித நுணுக்கங்கள் மேலை நாட்டினர்களின் கலைப் பயிற்சியிலுள்ளதாயினும், நம்முடைய சங்கீத அமுதமும் அவர்களுடைய கலையின் சாரமும் ஒரே அளவில் நம் இதயங்களை ஆட்கொள்ள மாட்டா என்று தெரிந்தது.

வாழ்க்கை இன்பங்களுடன் நன்கு பிணைக்கப்பட்டுள்ளது மேலை நாட்டுச் சங்கீதம். இங்குள்ள இசையோ எனில், அநேகமாய் ஆவியையும் உடலையும் கூடச் சேர்த்து எங்கோ ஒரு நிர்மானுஷ்ய உலகில் கொண்டு விடுகின்றது. தெய்வ வழிபாட்டிற்கும், கலையையே தெய்வமாகக் கொண்டாடுவதற்கும் இங்குச் சங்கீதத்தை உபயோகப்படுத்துகின்றோம். சங்கீதக் கலையின் வாயிலாக, காணாத பேரின்ப சுகத்தைப் பெற்று விடுகிறோம். ரவீந்திரர் நம்முடைய அருங்கலையைப்பற்றிக் கூறுவதைக் காது கொடுத்துக் கேட்போம்: "நம்முடைய இனிய கானங்கள், எண்ணிறந்த சுடர்கள் ஒளிரும் வானத்தைக் குறிக்கும்; அல்லது செவ்வெனப் பிரகாசிக்கும் அருணோதயத்தை மனக் கண்ணில் தோற்றுவிக்கும். கார்மேகங்கள்போல் துயரம் வானத்தைப் படலம் படலமாக மறைப்பதைக் காணவைக்கும்; அல்லது, மது உண்டு மனக் கிளர்ச்சி பெறவே வசந்த கால வரவை இதயத்தில் ஊட்டும்."

மேலை நாட்டுச் சங்கீதக் கலையின் அநேக உயர்ந்த அம்சங்களை இவர் போற்றியே வந்தார். அயர்லாந்து தேசத்துத் தனிச் சிறப்புப் பெற்ற சில பாட்டுக்களை அடிக்கடி பாடத் தொடங்குவார். எளிமையும் இனிமையும்

அவைகளில் தென்படுவதை மிகவும் பாராட்டுவார். சொந்த ஊர் வந்ததும் இம்மாதிரி ஆங்கில தேசத்துச் சங்கீதங்களை இவர் அப்பியசிக்கத் தொடங்கவும், பலர் இவரிடம் 'ஐயோ! உன் தொண்டைக்கு என்ன வந்து விட்டது? முன்னெல்லாம் கேட்பதற்கு இன்பமளிக்குமே?' என்று பரிதவித்தார்கள்.

'அவர்கள் அப்படித்தான் சொல்லுவார்கள். கேட்டுக் கேட்டுத்தான் எதுவும் பரிசயத்தின் பயனுல் சாதாரணமாய்த் தோன்றும்; முதலில் இப்படித்தான் எதுவும் இருக்கும்' என்று நம்பிக்கை இழக்காமல் மேலை நாட்டுச் சங்கீதப் பயிற்சி செய்துவந்தார். தாம் இயற்றிய இசையுடன் கூடிய நாடகங்களிலும் பல வித அழகிய மேலை நாட்டு இசை வெள்ளங்களின் திவலைகளை நிறையத் தெளித்திருந்தார். பழையது என்பதால் கௌரவமும், புதியது என்பதால் அலக்ஷ்யமும் வரலாகாது என்பது இவரிடமுள்ள ஒரு கொள்கை. காளிதாஸர் ஓர் இடத்தில் 'பழையது என்பதால் எல்லாம் உயர்ந்ததாய் இருப்ப தில்லை; புதியதாயிருப்பதால் குற்ற மில்லாதிருப்பதும் கிடையாது' என்று வெளியிட்டுள்ளார். ஒருகால் ரவீந்திரரும் அதன் உண்மையை மெய்ப்பிக்கவே இவ்வித மெல்லாம் சீர்திருத்தங்களைச் செய்து பார்த்தாரோ, என்னவோ?

"**வால்மீகிப் பிரதிபா**" என்ற சங்கீத நாடகத்தை எழுதி மேடையில் போட்டுக் காட்டினர். வால்மீகி மஹரிஷியின் வரலாறுகளே என்றும் மனத்தைக் கவரும். ஆதி கவியினுடைய கவிவாக்கு விடுதலை பெற்ற வரலாறு மிகவும் காவியச் சுவை கொண்டதாயிற்றே! ஆகையால் ரவீந்திரர் அதையே கருத்தாக வைத்துத் தயாரித் திருந்தார் ஒரு அழகிய நாடகத்தை.

கள்ளர்களின் தலைவராம் **வால்மீகி**. காளி தேவியை அவர்கள் உபாசிக்கிறர்கள். ஒருநாள் ஒரு அழகிய பெண்ணைக் கண்டு அவளை அவர்கள் சிறையாக்கிக்

காளிக்குப் பலியிடத் தலைவரிடம் சேர்க்கிறார்கள். மனம் இளகியவராய்த் தலைவரும் கட்டுக்களை அவிழ்த்து விட்டு, அப்பெண்மணியைச் சுயேச்சையாய் விட்டு விடுகிறார். பிறகு மனத்தில் வேதனையுடன் தனியே காட்டில் சஞ்சரிக்கிறார். அப்பொழுது அவருடைய ஆட்களில் ஒருவன் பக்ஷி ஒன்றைக் குறிவைத்து எய்கிறான். அது இறந்து விழவே, தலைவருடைய துயரம் கரை கடந்து ஓடத் தொடங்குகிறது. பண்ணுடன் செய்யுளாக அவர் வாக்கு வெளியாகிறது. தாமே தம் கவித்வ சக்தியைக் கண்டு பிரமிக்கையில், எதிரில் ஸரஸ்வதி தேவி தோன்றுகிறாள். அவளே சிறைப்பட்ட கன்னிகை என அவருக்குத் தெரிவிக்கிறாள். தன் கையில் ஏந்தியுள்ள வீணையை அவரிடம் கொடுத்து விட்டு மறைகிறாள்.

இச்சிறு நாடகத்தின் உட்கருத்தை அறிவது சிரமமல்ல. வாணியானவள் விடுதலை பெற்று, சந்தஸ் வடிவத்தில் கிளம்பி விடுகிறாள். இனி அவளுடைய இனிய-கீதம் இசை-அலைகளாகவே நாடு முழுவதும் பரவி மோதும். மேலும் ஸரஸ்வதியின் வீணை வால்மீகியின் கைகளில் வந்து விட்டது சாமானிய நிகழ்ச்சி இல்லை அல்லவா? நாடகத்தைத் தயாரித்தவரே முக்கிய வேஷம் பூண்டார். அதைப் பார்த்தவர்களுக்கு இந்த நாட்டுக் காவியங்களுள் முதன்மையான வால்மீகியின் 'அநுஷ்டுப்' விருத்தத்தின் பிறப்பைப்பற்றிய உயர்ந்ததோர் கருத்துப் பூர்ணமாய் விளங்கியது. மேலும் அந்நாடகத்தில் சங்கீதமும் சாகித்தியமும் மணந்து மாலையிட்ட திறன் சாமானியமல்ல.

எதிர்பாராத பாராட்டு இதனால் இவருக்குக் கிடைத்தது. சந்தோஷ மிகுதியால் மறுபடியும் ஒரு புராதன விஷயத்தை வைத்தே நாடகமொன்றைத் தயாரித்தார். 'கால மிருகையா' அல்லது 'விதி வசமான வேட்டை' எனப் பெயர் கொண்ட நாடகம் விளம்பரமாகியது. தசரதர் 'சப்த வேதி' என்னும் பாணத்தினால் தெரியாமல் இரவில் ரிஷிகுமாரன் ஒருவனை எய்தார்.

ரிஷிகுமாரன் கீழே விழுந்து கொண்டே அழுகிறான். தன் தவறுதலைத் தெரிந்த அரசன் அவன் உடலைக் கண் இழந்த அவனுடைய பெற்றோர்கள் சமீபம் கொண்டு செல்லுகிறான். குருடர்களான தாய் தந்தையர்கள், பிள்ளை தான் தங்கள் சமீபம் வருவதாக எண்ணி அவனை, 'எதனால் நாழிகை ஆயிற்று?' என்றெல்லாம் கேட்பதும், பதிலுக்கு என்ன சொல்வதென்று திண்டாடும் தசரதரும், நாடகத்தின் சோக ரஸத்தைப் பெருக்குகின்றார்கள். இவ்விரண்டு நாடகங்களினால் வங்காள தேசத்தில் ரவீந்திரருடைய புகழ் பலமாக ஆயிற்று.

சங்கீதத்தின் அடிப்படையான தத்துவத்தையும் உணர்ந்தவர் ரவீந்திரர். வாய்ப்பாட்டைப் பற்றிய சிற்சில கருத்துக்களை இவர் வாயினின்றுமே அறிவோம்:

"வாய்ப் பாட்டைப் பற்றிய இன்றியமையாததான அம்சங்களும் உபயோகங்களும் சில உள்ளன. சங்கீதத்தைச் சாகித்யத்துடன் பிணைக்கும்பொழுது, சாகித்யத்திற்கு அதிகப் பிராதான்யத்தைக் கொடுக்கக் கூடாது. சங்கீதம், இசையின்பத்திற்காகவே போஷிக்கப்பட வேண்டும். வார்த்தைகளை வைத்துத்தான் அதனை மதிப்பிட வேண்டும் என்பது தவறான கொள்கை. வாஸ்தவத்தில் வார்த்தைகளுக்குச் சலுகை இல்லாத இடங்களில்தான், உண்மைச் சங்கீதம் உயிர் பெறுகின்றது. இசையின் சக்தி, வாய்ச் சொல்லையும் தாண்டிய இடத்தில்தான் அதிகம். வார்த்தைகளே எடுத்துச் சொல்ல முடியாததைச் சங்கீதம் ஒன்று மட்டும் மனத்தில் பதிய வைக்கின்றது."

கவி-இதயம் அனுபவிக்கும் ரீதியே தனிதான். புல்லும் பூண்டும், மேகமும் மரமும், மழையும் கானலும், கவியுள்ளங்களை என்னென்னவோ செய்கின்றன. எதிலும் மனித சக்திக்கும் மேற்பட்டதொன்றை உணருவதில் தான் சாரம் இருக்கிறது. ரவீந்திரரிடம் வறட்டு

வேதாந்தத்தை உபதேசிப்பதால் ஒருவிதப் பயனும் இல்லை. எல்லாம் மாயை என்று அனுபவம் பெருதவர்கள் கேவலம் வாய்ச் சொல்லுக்காக மட்டும் உரைப்பதை இவர் வெறுத்தவர்.

பக்குவ ஞானமடையாத உள்ளத்தைக் கருத்தாக வைத்து, மற்ருெரு நாடகம் எழுதியிருக்கிருர். 'பிரகிருதிர் பிரதிகேஷத' எனப் பெயர் கொடுத்திருக்கிருர். அதற்கு 'இயற்கையின் பழி வாங்குதல்' எனப் பொருள். கதா நாயகன் ஒரு அற்ப சந்நியாசி. உலகத்தை வெறுத்து, அதனுல் தனக்குக் கௌரவம் ஏற்பட்ட பெருமையுடன் அவன் தான் வசிக்கும் குகை வாயின் சமீபம் நின்று, உலகத்தையே தன்னைப்போல் இருக்க உபதேசிக்கின்ருன். தனக்குப் பயமென்பதே தெரியாது என்றும், உலகி லுள்ளவர்கள் சதா பொய்யும் புரட்டுமாய்க் காலம் தள்ளுவதாகவும் அவன் பேசுகிருன். மேலும் தன்னுடைய மனம் சிற்றின்பங்களில் செல்லாதிருப்பதைப் பலர் அறியவே, ஜனங்கள் நடந்துசெல்லும் பாதையின் ஓரமாய் வந்து உட்காருகிருன். ரஸ்தாவில் நடப்பவர்கள் என்னென்ன செய்கிருர்கள் என்பதை அவன் கவனித்திருக்கையில், வாஸந்தி என்னும் சிறு பெண், திக்கற்றவளாய் அங்கு வருகிருள். அவள் தந்தை ஒரு ஜாதிப் பிரஷ்டன் ஆனதால் ஒருவரும் அவளை அணுகத் தைரியங்கொள்ளவில்லை. சந்நியாசி மட்டும் அவளைத் தன் சமீபம் இருக்கச் செய்து, தன்னை அவள் ஸ்பரிசிப்பதையும் பொருட்படுத்ாதவனுய் விளங்குகிருன். ஒரு நாள் தன் பக்கத்தில் துயில் புரியும் அப்பெண்ணைக் கவனிக்கையில் உள்ளத்தில் ஒரு புதிய அன்பு குமிழியிட்டு வழியத் தொடங்குவதை உணருகிருன். வாஸந்தியும் விழித்த வுடன், அவன் கையை இறுகத் தழுவிக்கொண்டு, எதிரே ஒரு கொடி நீல நிறப் பூக்களுடன் மரத்தைப் பற்றிக் கொண்டு தொங்குவதைச் சந்நியாசிக்குக் காட்டுகிருள். திடீரென அவனுக்கு மனத்தில் பயம் ஏற்படுகிறது. ஒருகால் அப்பெண் தன்னையே வாழ்க்கையில் முக்கிய அவலம்பனமாக ஆக்கிக் கொள்ளப் பார்க்கிருளோ என்ற

கவலை வாட்டுகிறது அவனை. அவ்வளவுதான்; இவ்வளவு நாட்களாய் வெறுத்து வந்த உலகப் பற்றை மறுபடி பெறுவதா என்ற கேள்வி நியாயமாக அவன் மனத்தில் எழுகிறது. ஒருகாலும் முடியாதெனவே தீர்மானித்து, வாஸந்தியைத் தனியே விட்டுச் சென்றுவிடுகிறான். பிறகு சிறிது காலம் தனிமையை நாடித் தவமும் கிடந்து நிம்மதி பெற்றுப் புதியதோர் திட சித்தம் படைத்தவனாய்த் திரும்பி வருகிறான். ஏதோ ஒரு குழந்தை அவ்விடத்தில் 'அப்பா, அப்பா' என்று கதறிக்கொண்டு வரவும், பழைய ஞாபகங்கள் மேலிட்டு, வாஸந்தியைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறான். அவளைப்பற்றி அறிவார் ஒருவருமில்லை. போகிறவர் வருகிறவர்களை யெல்லாம் கேட்டுக் கேட்டு அலுத்திருக்கையில், ஒருவர் வந்து வாஸந்தி இறந்து விட்டாள் என்று கூறி விடுகிறார். காட்சி அதனுடன் முடிவடைகிறது.

நாடகத்தின் கருத்துக்களில் வேற்றுமையான அபிப்பிராயங்கள் சிலருக்குத் தோன்றலாம். சாஸ்திர முறைப்படி அறிய வேண்டிய அத்வைத நிலையை டாகூர் ஒருகால் ஒப்பவில்லையோ என்று இந்நாடகத்தைப் பார்க்கையில் படலாம். சிலருக்கு டாகூருடைய வேதாந்த மயமான கொள்கையில் ஒற்றுமைக்கே இடமில்லை என்று இவ்வித நாடகங்களினால் தோன்றக் கூடும். கவனித்தால் எவ்விதமான பயத்திற்கோ அறிவின்மைக்கோ நாடகத்தின் நிகழ்ச்சிகளில் ஆதாரம் இல்லை யெனவே வெளிப்படும். சந்நியாசி உலகத்தைக் கண்டு பயந்து கோழை நெஞ்சினால் ஓடி வந்தவனானதால், முதலில் அவனால் நிலைகொண்ட சுபாவத்துடன் இருக்க முடியவில்லை. அன்பைக் கண்டு பாசமாக அவன் நினைத்து விட்டான். உண்மையில் தன்னிடமே உள்ள நம்பிக்கைக் குறைவுதான் அவனுடைய சஞ்சலமான செய்கைகளுக்குக் காரணம். ஆனால் பிற்பாடு தவத்தினால் உள்ளத்தைத் திடப்படுத்திக்கொண்டு திரும்பி வந்ததும், வாஸந்தி என்னும் பெண்ணை, நிலைத்த அன்பைக் கொண்டே விரும்புகிறான். ஆனால் அவள் இறந்துவிட்டாள்.

உண்மையில் காம பாசங்களுக்கு இனி இடமில்லை. சந்நியாச ஆசிரமத்தை மேற்கொள்பவர்கள் ஆசிரமத்திற்கு அகௌரவத்தைத் தங்கள் பக்குவமாகாத மனத்தினால் எவ்விதத்திலும் சேர்த்து விடலாகாது என்பது இதனால் நன்கு புலனாகிறது.

கவிஞரானமையால் ரவீந்திரர் ஒவ்வொரு கோணத்திலிருந்தும் வாழ்க்கைத் தத்துவங்களை ஊன்றிப் பார்க்கிறார். உபயோகமற்ற மனிதர்கள் கேவலம் கோபத்தினாலும், அதைரியத்தினாலும் துறவறம் பூண்டால் அதைவிடக் கெடுதல் தங்களுக்கும், தங்கள் இனத்திற்கும் செய்ததாக ஆகாது. இவ்வுபதேசம் வாஸ்தவத்தில் நாடகத்தில் எவ்வளவு அழகாய் உருவாகியுள்ளது! அதையன்றோ வாசகர்கள் கவனிக்க வேண்டும்?

சாதாரணமாய்ப் பலர் **காளிதாஸரைச்** சிருங்கார ரஸத்தை நன்றாய்க் கையாண்ட கவிஞர் என்றும், அவருக்கும் வைராக்கியத்திற்கும் வெகு தூரம் உள்ளது என்றும் சொல்லுவார்கள். மேகராசிகள் மலைப் பிராந்தியங்களில் வந்து கூடுகின்றன. அதனால் கவர்ச்சி அளிக்கும் காட்சிகள் கண்ணைக் கவர்கின்றன. ஆனால் மலை உச்சி என்னவோ நிமிர்ந்து நின்றுகொண்டு சூரிய கிரணங்களைச் சதா அனுபவித்துக் கொண்டுதான் தனித்திருக்கிறது. அதேபோல், **காளிதாஸரும்** உலக சுகங்களை ஊட்டும் காவிய ருசிகளைப் பொழிந்து சிருங்கார ரஸத்தின் மேம்பட்ட இன்பத்தைக் கவிகளில் புகுத்தியவராயினும், ஆங்காங்கே நிவிர்த்தி நோக்கங்களை அருமையான வழிகளில் காட்டி நம்மையும் சுவைக்க வைப்பார். **சாகுந்தல** நாடகத்தை எடுத்துக் கொள்வோம். ரிஷி கன்னிகைகள் செடி கொடிகளுக்கு ஜலம் விடுவதும், அரசன் ஆவலுடன் சகுந்தலையைக் காதல் புரிவதும், காட்சியின் ஆரம்பத்திலேயே கவர்ச்சி அளிக்கும் நிகழ்ச்சிகளாக அமைக்கப்பட்டுள்ளன. சகிகளைப்போலவே செடியும் கொடியும் சகுந்தலையின் அந்தரங்கத்தில் இடம் பெற்று இருப்பதை எவ்வளவு

திறனுடன் கவிஞர் எடுத்ததுமே நம் மனத்தில் புக வைக்கின்ருர்! நாடகத்தின் இடையே எவ்வளவோ வித உலக இயல்புகளேயும், அவைகளே நீக்கி விமோசனம் அடைய வேண்டிய மார்க்கங்களேயும் போதித்திருக்கிருர் காளிதாஸர்.

இவையெல்லாம் கவிஞர்களுக்கு மட்டுமே உள்ள சுதந்திரம். அவர்கள் உலகை உள்ளே நின்று பார்த்தும், வெளியே நின்று நிராகரித்தும் உள்ளார்கள். ஆனுல் கலேக்கென எழும் சிருஷ்டியில் சூக்ஷ்மமான வேதாந்த வாதங்களே நேருக்கு நேர் சொல்லப் புகுவது காவிய லக்ஷ்யங்களுக்கே முரணுன கொள்கை. இக்காரணமே ரவீந்திரரையும், இவர் இயற்றிய நாடகக் காவியங்களில் வேதாந்த ரகஸ்யங்கள் நிறைந்திருப்பினும், பலவித ரஸங்களுடன் பாத்திரங்களேத் தயாரிக்கவும், கதைப் போக்கை உருவாக்கவும் தூண்டியிருக்கவேண்டும்.

## 4. சொந்த நாடும், சுற்றுலகமும்

இல்லறத்தில் ரவீந்திரர் உயர்ந்த அநுராகத்திற்குப் பாத்திரமானவராய் இருந்ததையும், வாழ்க்கைத் துணேவியுடன் இவருக்கு விதிக்கப்பட்ட காலம் மேன்மை தங்கியதாய் விளேந்ததையும் விவரிக்க வேண்டியதில்லே. யௌவனத்திலிருந்து சமயப் பற்றுடன் கூடிய தந்தையாருடன் நெருங்கிப் பழகியவரானமையால், கொஞ்சமும் கடவுள் ஞாபகமில்லாதவர்களே நல்வழியில் திருப்ப முதலிலிருந்தே ஆர்வம் இவரிடம் ஏற்பட்டது. அதற்கு அநுகுணமாய்ப் பிரம்ம சமாஜம் என்றதோர் சங்கம் இருந்ததால், அதில் சேர்ந்துகொண்டு தமக்குத் தோன்றிய விதங்களில் பலருக்குத் தொண்டுகள் ஆற்றினுர். பிரம்ம சமாஜத்திற்கு முக்கியத் தூண்கள் போன்றவர்களில் தேவேந்திரநாத டாகுர் ஒருவர். உபநிஷத்துக்களில் காணப்படும் வித்துக்கள் போன்ற சமயக் கொள்கைகளில் தான் அப்பெரியாருக்கு மோகம். அதனுல் மற்றப் படி

புராதனமான மரபில் தோன்றிய தெய்வ வழிபாடு சம்பந்தமான காரியங்களை இவர் நம்பவில்லை. அவைகளை வேண்டாதவைகள் எனத் தள்ளி, முக்கியமாய் ஹிந்து தர்மக் கொள்கையில் மற்ற மதத்தினர்களுக்கும் வித்தியாசமாகத் தோன்ருத அம்சங்கள் இருப்பின், அவைகளையே போஷிப்பதென்றும் கங்கணம் கட்டிக் கொண்டார். ரவீந்திரரும் தமக்கு உவந்த விதங்களில் அச்சமாஜத்தில் தொண்டுகள் புரிவதும், பிரசங்கங்கள் செய்வதுமாய் முதிர்ந்த அனுபவங்களைத் தேடலானுர்.

சமரஸக் கோட்பாடுகளை வேண்டிய அளவில் அங்குள்ளவர்களுக்குப் புகட்டினுர். மத வேற்றுமையினுல் ஏற்படும் தீங்குகளை ஒழிக்கவும் பாடுபட்டார். தாய் மொழியில் இவைகளுக்காக இவர் ஆற்றியுள்ள சொற் பொழிவுகள் கணக்கில் அடங்கா. தாய்மொழியைச் சொந்த ஜனங்களுடன் கூடிப் பேசுகையில் வளர்க்காமல் வெளிநாட்டாரிடமா காட்ட முடியும்? மாகாணக் கூட்டங்களிலெல்லாம் தாய்மொழியிலேயே சர்வ உபந்யாஸங்களும் காரிய நிர்வாகங்களும் நடைபெற வேண்டும் என்று கொஞ்சங்கொஞ்சமாய் வற்புறுத்தவும் தொடங்கிவிட்டார்.

முதலில் கொஞ்ச நாட்கள் வரையில் இடைஞ்சல்களே இவருக்கு அதிகரித்தன. இவர் தாய்மொழியின்பால் காட்டிய ஆவேசத்தை வெறுத்த தேசாபிமானிகளே அதிகம். இன்று மற்ற மாகாணங்களில் தாய்ப் பாஷையின் வளர்ச்சியில் உண்டாயிருக்கும் பெருத்த மனக் கிளர்ச்சிக்கு ஆதி காரணம், வங்காளம் ஐம்பது வருஷ காலமாய்த் தாய்மொழியைப் பல விதங்களிலும் சிறப்பிக்க வழிகள் செய்திருப்பதே. தாய்ப் பாஷையில் தான் கவி இயற்ற வேண்டும்; கதை வடிவு கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால் சிருஷ்டிக்கப்பட்டது அவ் வளவும் வீணுகிவிடும். வேறு பாஷையினுல் கவிதையை வளர்ப்பது காதலியை மணக்க வேருெருவரை அனுப்புவது போல்தான் என்பர் ரவீந்திரர். அதன் கருத்து கவனிக்கக்

கவனிக்க நாம் அடைந்திருக்கும் தற்கால வெட்கக் கேட்டை வெளிச்சமாய்ப் பரிகசிப்பது மாதிரித் தோன்றும். இன்று எவ்வளவோ தமிழ்ப் பத்திரிகைகளும், தமிழ் எழுத்தாளர்களும் நிரம்பி யிருக்கையில், சிலர் மட்டும் ஆங்கிலத்தையே தங்கள் மன எழுச்சிகளுக்கெல்லாம் தகுந்த கருவியாகக் கொண்டிருப்பது விந்தையினும் விந்தையே! ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன் ஆங்கில மோகம் எவ்வளவோ அதிகம். அக்காலத்தில் ஒருவர் விடாமல் 'தாய்மொழி, தாய்மொழி' என்று கூட்டம் தோறும் சொல்லித் தாமும் தம்முடைய அரிய கவிகளையும் கட்டுரைகளையும் வேறு பாஷையில் எழுதாமல் இருந்த பெருமை சாமானியமல்ல.

வங்காள பாஷையின் எழுத்தாளர்களுக்கே குன்றிலிட்ட விளக்குப்போல் நேர்மை மார்க்கத்தைக் காட்டியவர்கள் டாகுரும், இவருக்கு முன் இருந்த பங்கிம் சந்திரரும். சரித்திர சம்பந்தமான நவீனங்களை எழுதிய பேராசிரியர் பங்கிம் சந்திரர், தாய்ப்பாஷையின் வளத்திற்காக எவ்வளவோ பாடுபட்டவர். ஏற்கெனவே வங்காள இலக்கியத்தில் கணக்கில்லாத படாடோபமான வார்த்தைகளும், வாக்கியங்களைப் பின்னிப் பின்னிச் சொல்லும் நடையும் இருந்தன. அவைகளைச் சிறிது மாற்றியவர் பங்கிம் சந்திரர். டாகுரோ எனில் பேச்சு நடையை அழகாகக் கதை, கட்டுரைகளில் புகுத்தியவர். வங்க சாகித்திய பரிஷத் என்றொரு இலக்கிய ஸ்தாபனத்தை ஆரம்பித்தவர்களில் டாகுரும் ஒருவர். அப்பரிஷத்தில் செய்யாத தொண்டுகள் இல்லை எனலாம். இப்பொழுது எவ்வளவோ புதிய சொற்கள், விஞ்ஞான வளர்ச்சி நம்மையும் ஆட்கொண்ட காரணத்தினால், வேண்டியுள்ளன. அநேகக் கலைச் சொற்களுக்கு இடமே அன்று வரையில் வங்காள பாஷையில் கிடையாது. வசனம் என்ற பெயருக்குப் பாத்திரமாய் ஒரு பண்டைப் புஸ்தகமும் இல்லை. புதிய நவீனங்களைப் புது மலர்ச்சி எழுத்தாளர்கள் உண்டாக்க வேண்டுமானால், இவைகளுக்கெல்லாம் முதலில் வழி செய்யவேண்டுமே,

என்று ரவீந்திரருக்குப் பட்டது. சிலரைப்போல் பேசி விட்டுக் காரியத்தை நடத்தாதவரல்ல. ஆகையால் எழுத்தாளர்களின் சௌகரியங்களுக்கென நினைத்து ஒவ்வொன்றாய்ப் புதிய வார்த்தைகளை உண்டாக்கியும், மாற்றியும், வேண்டாததைத் தள்ளியும் இவர் இலக்கிய சம்ரக்ஷணார்த்தம் உயிருள்ளளவும் பரிஷத்தில் கலந்து கொண்டவர். வங்காளத்தில் இன்று எத்தனையோ எழுத்தாளர்கள் நல்ல வன்மையுடனும், அதற்கு உரிய செல்வாக்குடனும் இலக்கிய உலகில் உயிர் பெற்றிருப்பதற்கு, வங்க சாகித்திய பரிஷத் ஒன்றே சிறந்த உபகாரி. உலகப் புகழ் கொண்ட எழுத்தாளராகத் தாமே ஆன பின்னரும், ரவீந்திரர் வங்க சாகித்தியத்தின் உயர்ந்த லக்ஷ்யங்களை ஓங்க வைக்கும் தொண்டுகளில் சற்றும் தம் பங்கைக் குறைத்துக் கொள்ளவில்லை. இதுவே ஒருவருக்குத் தேசாபிமானம் வலுப்பதற்கு முக்கிய சாதனம்.

தாய்மொழி மட்டும் வளம்பட்டு விட்டால் ஏழைக் குடிகளுக்கு க்ஷேமம் ஏற்பட்டுவிடுமா? அவர்களுடைய துர்க்கதிக்கு மூல காரணங்களை அறவே ஒழிக்க வேண்டாமா? ஆம்; ரவீந்திரருக்குச் சிறிய வயசிலிருந்தே ஏழை மக்களிடம் காரணம் தெரியாத ஒரு அன்பு நிலைத்திருந்தது. '**சோனார் பங்களா**' என்ற பாட்டுக்களை இவர் இயற்றிய பொழுது உண்மையில் நெஞ்சில் வந்து வந்து அடைத்த எண்ணங்களையும் உணர்ச்சிகளையுமே அவைகளில் கொட்டி யிருந்தார். '**ஷெலிடா**' என்னும் நாட்டுப் பிரதேசங்களில் வெகுகாலம் இதற்காக வசித்து வந்தார். நேருக்கு நேர் கிராம வாழ்க்கையையும், குடியானவர்களின் உழைப்பின் பலனை யெல்லாம் களவாடும் இரக்கமற்ற அதிகாரிகளின் சுயநல ஆளுகையையும், நெற்றி நீர் நிலத்தில் விழுந்து உழைக்கும் உழவர்களின் நேர்மை நெறியையும் இவர் கவனித்தார். ஆஹா! இவர்களில்லாவிட்டால் பாரத பூமியின் புராதன கௌரவம் எப்படி ஆயிருக்குமோ? இவை போன்ற எண்ணங்களே வரவர இவரை வாட்டின. மேலும்

எவ்வளவு சிறந்த கைத்தொழில்கள் விவசாயிகளின் ஓழிவு நேரங்களில் ஒரு காலத்தில் உண்டாக்கப் பெற்றன! அவைகள் எல்லாம் இப்பொழுது எங்கே? இங்கிலாந்து நம்மை உண்ணும் உணவுக்கும், உடுக்கும் வஸ்திரத்திற்கு மல்லவா வெளி நாடுகளை யாசிக்கச் செய்துவிட்டது! இனி, சும்மா இருப்பது தவறு என்று இவருள்ளம் சொல்லியது.

கிராமப் புனருத்தாரணக் காரியம் அவ்வளவு சுலப்மானதா? தடைகள் பல நம்மிடமிருந்தே வரும். சில அரசாங்க அதிகாரிகளின் சிறிதும் அனுதாபமில்லாத செயல்களில் வெளியாகும். மகாத்மா காந்தி இன்று செய்திருக்கும் கணக்கற்ற இயக்கங்களிலெல்லாம் இக் கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியது ஒன்று மட்டுமே அவரை என்றும் நன்றியுடன் நோக்க வைக்கிறது. டாகுரும் கவி பாடிக் கொண்டிருப்பதை விட்டுத் தாமும் உழவைக் கையில் எடுத்தார் என்பதல்ல, இங்கு நாம் எதிர் பார்ப்பது. இவரோ கவிஞர். இவருடைய மனம் மேகங்கள் சஞ்சரிக்கும் வானத்தை அளாவி நிற்கையில், உழுது பண்படுத்தும் மண்ணிலும் லயித்ததென்றால் இவருடைய உள்ளக் கிளர்ச்சியை மற்றவர்களின் வேகங்களுடன் சமமாக்கிக் கூறுவது புத்திக் குறைவைக் காட்டும். கதையிலும், கட்டுரையிலும், கடிதத்திலும் வங்காள தேசக் கிராம வாழ்க்கைக் காட்சிகளை நிறைய அச்சந்தர்ப்பத்தில் தான் வெளியிட்டுள்ளார்.

கிராமங்களின் சீர்குலைந்த தன்மையை நினைந்து உருகியவருக்குக் கடவுளிடம் நம்பிக்கை சிறிதும் குறையவில்லை. அச்சமயத்தில் 'நைவேத்தியம்' என்ற செய்யுட்களைத் தொகுத்து உலகிற்கு அளித்த பெருமை இவருடையதே. அவைகளில் காணப்படும், கடவுளிடம் கொண்ட, பக்தியும் பெருமிதமும் இவரை மேலே தூக்குகின்றன. துயரத்தை வரமாகப் பெறுவதுதான் சுலபம். துக்கங்களைத் தள்ளி மனத்தை மேல்நோக்க வைப்பது கடினம். அதற்கு வேண்டிய திடசித்தம் எல்லோரிடமும் காணப்படாது. டாகுருடைய

வாழ்க்கையின் சாராம்சம் என்றுகூடச் சொல்லிவிடலாம், இவர் பெற்றிருந்த திட சித்தத்தைக் குறிக்குங்கால். இவர் அதிகக் கஷ்டப்படாததற்குக் காரணம், இவருக்கு வறுமைப் பிணி இல்லாததே என்பர் சிலர். வறுமைப் பிணி இல்லாதவர்கள் உலகில் மனத்தைத் தெளிவாய் வைத்துக்கொள்ள முயல்கின்றார்களா? அவர்களுடைய புத்திக்குத் தெளிவு ஏற்படாத தோஷம், வறுமையின் கொடுமையைவிட அதிகமாகவே அவர்களைப் பாதிக்கும். ஒன்று சரீரத்திற்கு வேண்டிய பாதுகாப்பைக் குறைத்து, அதனால் மன வேதனையை உண்டாக்குகின்றது. மற்றொன்று மன வேதனையினால் ஒருவருக்கு எவ்வளவு சுகங்கள் இருப்பினும் அவைகளை உடம்பில் ஒட்டாமல் செய்து தேக ஆரோக்கியத்தையும் சிதைய வைக்கின்றது. ஆகையால் ரவீந்திரருடைய திட சித்தத்தை வெளிச் சௌகரியங்களினால் ஏற்பட்டதெனக் கொள்வது, இவருடைய வாழ்க்கையை நன்கு பரிசோதிக்காததாகும். இவருடைய தைரியமெல்லாம் புலன்கள் வசப்பட்ட காரணத்தினால் அன்றோ?

தேவேந்திரர் அப்பொழுது உயிருடன் இருந்தார். 'நைவேத்தியம்' என்னும் பாட்டுத் தொகுதியை வாசித்துத் தம் மகனுடைய உயர்ந்த காரியத்தை மெச்சிச் சொன்னார். "அப்பா, பழைய காலத்து அரசர்களாயின் உன் விலை மதிக்கத் தகாத கவித் திறனுக்கு வெகுமதிகள் வழங்கி யிருப்பார்கள். இக்காலத்தில் யார் கவியைக் கவனிக்கிறார்கள்? நானே உன்னைக் கௌரவிக்கிறேன்" என்று கூறி அக்காவியத் தொகுதியைப் பிரசுரிக்கத் தகுந்த பணத் தொகையைப் பிள்ளையிடம் கொடுத்தார். இவை போன்ற சமயமறிந்த அரும் பாராட்டுக்களே ஒரு கவிஞனுடைய உள்ளப் பெருக்கை உயர்த்திக்கொண்டே போகும். சதா குற்றங் குறைகளையே எடுத்துக் காட்டி மற்ற நல்ல அம்சங்களைத் தள்ளித் தராசில் வைத்து நிறுத்துப் பார்க்கும் குண சாலிகளை யன்றோ எங்கும் நம் நாட்டில் நாம் சதா காண்கிறோம்?

தந்தை தேவேந்திரர் தம் வாச ஸ்தலமான போல்ப்பூரைச் சார்ந்த சாந்தி நிகேதனம் என்ற இடத்தில் தனியே கடைசிக் காலங்களில் இருந்து வந்தார். ரவீந்திரரும் அங்குச் சென்று கொஞ்சகாலம் அங்குள்ள வனப்பிரதேசத்தின் வனப்பில் தோய்ந்த இதயத்துடன் நிம்மதியைப் பெற்றார். சாந்த மயமான ஆசிரம பதத்தில் அல்லவா பண்டைக் கால ரிஷிகள் தம் இருப்பிடங்களைக் கட்டிக்கொண்டு, சிஷ்யர்களுக்கு உயர் தத்துவங்களில் மனத்திற்கு வழி காட்டிச் சென்றார்கள்? ரவீந்திரருக்கு இவ்வெண்ணம் தோன்றவே, மேலும் மேலும் இது அதிகரித்து விட்டது. சிறந்த கல்வியை நம் நாட்டுச் சிறுவர்களுக்கு இம்மாதிரி வனங்களில் அல்லவா போதிக்க வேண்டும்? உண்மையான கருத்தாயின், அதனை வலுக்க வைக்க உழைப்பும் உதவியும் தாமாகத் தேடி வரும்.

அன்றே சிறு பிள்ளைகளுக்கென ஒரு பள்ளியை அவ்விடத்தில் ஆரம்பித்தார். கட்டடமும் பாட புஸ்தகமும் மட்டுமே இன்று பட்டணங்களிலும் கிராமங்களிலும் கல்வியின் அங்கங்களாகி விட்டன. ஆனால் ரவீந்திரர் விரும்பியவை உபநிஷத்துக் காலத்தின் வித்தியாப்பியாச சாதனங்களே. மரங்களின் நிழல் நிறைய வேண்டும்; குருவாக ஏற்பட்டவர்களின் இதயங்களில் அன்பு நிறைய வேண்டும். இவ்வளவேதான் இவர் ஆரம்பித்த பள்ளியின் மூலதனம். ஐந்தே மாணுக்கர்கள் வந்தார்கள். அவர்கள் சீக்கிரமே எவ்வளவோ மாணுக்கர்களை அங்குச் சேர்க்க வழி செய்து விட்டார்கள். புராணக் கதைகளைச் சொல்லிச் சொல்லிக் குழந்தைகளின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டார்கள் அங்குள்ள ஆசாரியர்கள். சிறுகக் கட்டிப் பெருக வாழ வேண்டுமென்பார்கள் சான்றோர். அவ்விதமே சாந்தி நிகேதனப் பள்ளிக்கூடம் இன்று விசுவ பாரதி சர்வ கலாசாலை நிலையமாய் உலகத்திலுள்ள பல நாட்டுப் பிரதிநிதிகளின் உறவுடன் சிறப்பாய் நடத்தப்பட்டு வருகிறது.

தபோவனங்களில் கவிஞருக்குப் பெருத்த பிரமை. அவைகளைப்பற்றிய எவ்வளவோ உண்மைகளை இவர் பிரசங்கங்களில் வாரி இறைத்திருக்கிறார். 'காடுகள் செய்யும் உபதேசம்' என்ற சொற்பொழிவுகளில் இவர் தபோவனங்களின் பெருமையையும், அங்கே சர்வ ஜீவராசிகளும் ஒன்றாய் வாழ்ந்திருக்கும் நேர்மையையும் விவரிக்கின்றார். காளிதாஸர் காடுகளை மனிதனுடன் உறவாடவே பார்க்கின்றார் என்பார். இல்லாவிட்டால் சகுந்தலையின் மாசில்லாத் தூய்மைக்கு வேறு ஒருவிதக் காரணமும் இல்லை. மாசு படிவது நகர வீதிகளின் புழுதியால் அல்லவா? காட்டில் மலர்ந்த மலரின் இதழ்களில் தூசி வந்து தங்குவதற்கு வழி இல்லை. துஷ்யந்தன் வாழ்ந்தது நகரங்களில். அவனுடைய சகவாசத்தினால் சகுந்தலையும் தனக்குரிய பரிசுத்தத்தை இழக்க நேர்ந்தது. "காளிதாஸர் நகரத்திலும், அரசர் ஆஸ்தான மண்டபங்களிலும் தம் வாழ்க்கையைக் கடத்த நேர்ந்ததைச் சாபத்தின் விளைவாக நினைத்தார்போலும்" என்பார் டாகுர். யக்ஷன் புலம்பலில் சாபத்தைக் குறிப்பிடுகிறான் அல்லவா? "தபோவனங்களைத் தாம் விட நேர்ந்த துக்கமே சாபமாகியது காளிதாஸருக்கு", என்றெல்லாம் கவி-இதயத்தை டாகுர் எடுத்துக் காட்டுவார். காளிதாஸருக்குத் தபோவனங்களில் ஆசையிருந்தது பலருக்குத் தெரியா விட்டாலும், டாகுருக்கு அவைகளில் ஏற்பட்ட பிரமை உண்மை என்பதில் சந்தேகம் வேண்டாம்.

சாந்தி நிகேதனப் பள்ளிக்கூடத்தில் வகுத்திருந்த தினசரித் திட்டங்களே, கவிஞருடைய உணர்ச்சிகளுக்கெல்லாம் ஏற்றபடி எழுந்த ஏற்பாடுகள் என நினைக்கச் செய்யும். காலையில் விடியும் நேரத்தில் உறங்குகிறவர்களை எழுப்பத் தம்புரா சுருதியுடன் இன்னிசைகளைக் கிளப்பச் செய்திருந்த ஒரு ஏற்பாடு போதும், ரவீந்திரருடைய கலை கசியும் உள்ளம் உருவாக்கிய அழகிய வழக்கங்களைக் காட்ட. தம்முடைய தெய்வ பரமான கீதங்களையே அவ்விடத்தில் சிறுவர்களைக் கொண்டு பாடச் சொன்னார். அஸ்தமனமாகி அவரவர்கள்

தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்லுகையிலும், சயனத்திற்கு அவரவர் போகும் பொழுதும், சங்கீதம் காதில் ஒலித்த வண்ணமே யிருக்கும். சுகமான வழியில் பரம்பொருளை மனத்தில் நிலைநாட்ட நம்மவர்கள் செய்துள்ள சூழ்ச்சி அல்லவா இக்கீதங்களும்?

ருதுக்களைப் போற்றவும், கொண்டாடவும், இயற்கையின் அழகில் மனத்தைப் பறி கொடுக்கவும் ரவீந்திரர் பையன்களுக்கும் பெண்களுக்கும் ஒன்றுகக் கூடிச் செய்யச் சில களியாட்டங்களைத் தயாரித்திருந்தார். விழாக்களையும், ஜாத்திரைகளையும் சிறுவர்கள் வெகு உற்சாகங்கொண்டு நடத்துவார்கள். அவர்கள் சுகமாய்ப் பாடுவதற்காகவே தனிப் பாடல்கள் பல இவரால் இயற்றப்பட்டுள்ளன. "சரத்தோத்ஸவம்" "பால்குனி" போன்ற கீதங்களின் கொத்துக்கள் தோன்றுவதற்கும் இம்மாதிரிச் சந்தர்ப்பங்களே பயன்பட்டன. "நாக்-கர்" அல்லது "தபால் ஆபீசு" என்ற நாடகத்தைச் சிறுவர்களைக் கொண்டே வேஷம் போட்டு ஆட வைத்திருக்கிருர். சிறுவர்கள் மற்றப்படி சுயேச்சையாய் இயற்கையின் செழித்த இடங்களில் திரியவும், வேண்டிய அளவு உலாவி வரவும் கட்டுப்பாடுகளை வைக்காமல் அனுமதி கொடுத்திருந்தார். ஒன்றில் மட்டும் இவர் நிச்சயம் தம் கட்டளையை மீறச் சகியார். அதாவது, ஒவ்வொருவரும் தனியாகச் சிறிது காலம் கடவுளை மனமார வணங்கவும் தியானம் செய்யவும் அன்றுடம் தவறவே கூடாது. கடவுள் வாழ்த்து, வணக்கம் முதலியவைகளுக்கு என்றே தனியான தோத்திரத் திரட்டுகளைச் செய்திருக்கிருர். இன்றும் சாந்தி நிகேதனத்தில் அவைகளைப் பாடாதவர்களே இல்லை எனலாம்.

கவி-இதயம் தேசீயப் போராட்டங்களில் கலப்பதை எதிர்பார்க்க முடியாது. ஆனல் கவிஞனயினும் அடிமை நாட்டில் பிறந்த காரணமாக, விடுதலைத் தாகத்தை மற்றவர்களுடன் பெறுவதில் ஆச்சரியமில்லை. சுதேசி இயக்கத்திலும், வங்காளப் பிரிவினை இயக்கத்திலும்

அக்காலங்களில இவரும் முன்னணியில் நின்று போர் தொடர்ந்தார். எவ்வளவு ஊர்வலங்களிலும் அரசியல்-பிரசங்கங்களிலும் இவர் சேர்ந்திருந்தார்! இன்னும், சுதேச நிதிக்கென ஐம்பதினுயிரம் ரூபாயும் தம்முடைய சொந்தச் செல்வாக்கை உபயோகித்துச் சேகரித்துள்ளார் என்று தெரிகிறது.

அரசியல்-துறைக்கும் கவி பாடும் சுபாவத்திற்கும் சம்பந்தமே கிடையாது. ஆகையால் சீக்கிரமே அரசியல் வாதங்களிலும், அங்குள்ளவர்களின் ஒற்றுமை காணுத செயல்களிலும் சலிப்பு ஏற்பட்டது இவருக்கு. உயர்ந்த நோக்கங்களைச் சிந்திப்பது ஒன்று; பிரகிருதத்தில் எல்லாவித ஏற்றத் தாழ்வுகளின் இடையேயும் மனம் தளராத விதம் சிற்சில குணங்களை மட்டும் வைத்துக் கொண்டு தொண்டுகள் செய்வதென்பது வேறு. இதில்தான் பெருத்த சோதனைகளும் மூண்டு விடுகின்றன சாமானியர்களுக்கு. ஆனால் பெரியவர்கள் இவைகளையே தங்களுடைய பலத்திற்கு ஏற்ற பரீக்ஷைகளாகக் கருதி வெற்றியும் பெறுகிறார்கள். டாகுர் இவ்விதப் பரீக்ஷைக்குத் தம்மைத் தயாரித்துக் கொள்ள முழுவதும் இணங்கவில்லை. ஒரு சமயம் மகாத்மா இவரை ஏளனம் தொனிக்கும் வார்த்தைகளில், "பசி என்று வாடிய சமயம் ஒருவனிடம் தண்ணீர் அருந்தக் கிண்ணியை நீட்டாமல், இனிய காணுமிர்தத்தை ஊட்டுவது போல் இருக்கின்றன தாங்கள்சொல்லும் அழகிய கருத்துக்கள்!" என்றார். கவிஞருடைய தர்மம் பேனவைக் கையிலேந்தி நிறுத்தாமல் கடைசி வரையில் எழுதுவதே. சண்டைக்குச் சென்ற வீரனுக்குக் கத்தி எவ்விதம் உபயோகமாகுமோ, அவ்விதமேதான் கவிஞனுக்கும் எழுதுகோல். ஆகையால் ரவீந்திரர் மனம் தளராமல் தம் காரியத்திலேயே முழுகி யிருந்தார். மகாத்மாவும் தம்முடைய செயலில் ஈடுபட்டிருக்கிறார். அவரவர் செய்யும் செயல் அவரவர் பிறந்த காரியத்திற்காக அல்லவா? மற்றெவரும் அதனை மாற்ற முன் வரக் கூடாது. அவ்விதம் மாற்றுவது எழுத்தாளனை அறிவுக்

தினமணி வெளியீடு



1926-ல் கோப்பன்ஹேகனில் இருந்தபோது

கண்ணை இழக்கச் செய்வதாகும். யுத்தவீரனைச் சங்கீதப் பயிற்சி செய்யச் சொல்வது அவன் புஜபலத்தை வெருட்டி அடிக்கவே வழி செய்வதாகும்.

ரவீந்திரர் சீமைக்குப் பல தடவை போயிருந்தார். ஆனால் ஒரு சமயம் தான் எங்கிருந்தோ எதிர்பாராதவாறு இவர் வாழ்க்கையில் மாறுதல்கள் உண்டாயின. சீமையில் சில நண்பர்கள் இவரைப்பற்றி ஏற்கெனவே அறிந்திருந்தும், இவருடைய கவிச் சக்தியை முழுவதும் தெரியாதவர்களாகவே யிருந்தார்கள். முக்கிய காரணம் டாகுருடைய ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் இன்னும் வெளிவந்த பாடில்லை. தம்முடன் சில சொந்த மொழி பெயர்ப்புக்களை எடுத்துச் சென்ற சந்தர்ப்ப மானதால்; நண்பர்களிடம் தாமே அவைகளை வாசித்துக் காட்ட ஒப்புக் கொண்டிருந்தார். இச்சமயம் அறிவாளிகளில் பொறுக்கிய சிலர் அவைகளைக் கேட்க வந்திருந்தார்கள். ராதென்ஸ்டீன், ஈட்ஸ் போன்ற ஆங்கிலக் கலை அபிமானிகள் டாகுரை மிகவும் பாராட்டத் தயாராக இருந்தார்கள். மற்றச் சிலரும் கூர்மையாகப் பாட்டுக்களைக் கவனிப்ப தென்றே அன்று வந்திருந்தார்கள்.

எல்லோருக்குமே எதிர்பாராத கவிதைச் சுவையைச் செவிகளில் வாங்கிக் கொள்ள அவகாசம் உண்டாயிற்று. ரவீந்திரரின் குரலழகும், இவருடைய சொந்த ஆங்கில பாஷையின் இனிப்பும், காம்பீர்யமும், செய்யுட்களில் உள்ள சப்த சுகங்களின் வாய்ப்பும் பிரமாதமான பாராட்டைக் கிளப்பிவிட்டன. முதலில் எல்லோருமே வாய் பேசாமல் இன்ப ரஸத்தில் முழுகிக் கிடந்தார்கள். வாயில் வார்த்தை வந்து டாகுரை அவர்கள் துதி செய்யச் சற்றுத் தாமதம் ஆனதனால், டாகுரும் மனம் தவித்துவிட்டார். ஒருகால் தம்முடைய மொழிபெயர்ப்புக்கள் தாம் கொண்டிருந்த கலை-வடிவத்தை யெல்லாம் பாஷாந்தரத்தில் காட்டாமல் கெடுத்து விட்டனவோ என்றுதான் போராடினார் தம்முள்ளே.

"கீதாஞ்சலி"யின் சில அருமையான கவிகளைத்தான் அன்று இவர் சிறு கூட்டத்தினருக்குப் பாடிக் காட்டினார். சீமையிலுள்ளவர்கள் உடனே இவரைக் கொண்டாடத் தொடங்கினார்கள். அவ்விடத்தில் புதிதாக எவை தோன்றினும் அவைகளில் உடனே தனிப் பக்ஷபாதத்தை ஜனங்கள் அளவு கடந்து காண்பித்து விடுவார்கள். நிதானம் தவறாதவர்களும் அவர்கள் மத்தியில் அன்று இருந்தார்கள்; ஆயினும் கீழை நாட்டுக்குரிய தனிச்சோபையுடன் விளங்கும் வருணனைகளும், புலன்களுக்கு அப்பால் உள்ள ஒன்றைத் தட்டி எழுப்ப முயன்ற கருத்துக்களின் விசேஷமும், சிறிது அவர்களுக்கும் வெளியாயின. எங்கும் இந்திய நாட்டின் காவியச் சுவையைப் பருக ஒரு வேட்கை பலருடைய இதயங்களில் முளையிடத் தொடங்கியது.

மறுவருஷம் நோபெல் பரிசு இலக்கியத் திறனுக்காக அளிக்கப்படவே, கேட்க வேண்டியதில்லை இவரைப்பற்றிய பிரமிப்புக்கு. எங்கும் ஜனங்கள் இவருடைய புகைப் படங்களை வாங்கினர். உயர்ந்த உருவத்துடன், தாடியினால் ஏற்பட்ட தனிக் கௌரவம் ஒன்று முகத்தில் துலங்க, அழகிய கண்களுடன், கவிஞனின் வடிவம் உணர்த்த வேண்டிய கவர்ச்சியுடன் காணப்பட்டார். பிற நாட்டினர் மோகங் கொண்டார்கள் எனவுமே, பலர் நம் நாட்டிலும் இவரை வாசிக்கத் தொடங்கினர். எல்லா ஆங்கில மொழி பெயர்ப்புக்களும் இவராலேயே செய்யப் படாததால், "கீதாஞ்சலி" "சிசு" "பலாகா" போல் மற்றக் காவியங்கள் ஒரே மாதிரி எல்லோர் மனங்களையும் கவர வில்லை. சிலர் சலிப்பைக் காட்டினர். சிலர் அதிகமாய்ப் புரிந்த மாதிரி புரியாத இடங்களிலெல்லாம் வேண்டாத அர்த்தங்களை எடுத்துச் சொல்லத் தொடங்கினர். டாகுர் மட்டும் ஏற்கெனவே வங்காள தேசத்தில் தமக்கு நிலைத்திருந்த மதிப்பை நினைத்து இப் புது வெள்ளத்தைக் கண்டு மயங்கவில்லை.

நோபெல் பரிசின் பெருந் தொகையும், மற்றும் மாக்மில்லன் பிரசுராலயம் இவர் மொழிபெயர்ப்புக்களுக்குக்

கொடுக்க ஒப்புக்கொண்ட தங்கள் லாபத்தின் பங்கும், எல்லாமே சாந்தி நிகேதனத்தின் செலவுக்காக உபயோகப்பட வேண்டும் என்று தீர்மானித்து, வேண்டிய விதங்களில் பணத் தொகைகளைப் பெற்றுக் கவனமாய்த் தம் பள்ளிக் கூடத்திற்காகச் சேகரித்த நிதியுடன் கூட்டிவந்தார்.

விவேகானந்தர் ஓர் இடத்தில் சொல்லியுள்ளார், தமக்கு மேலை நாடுகளில் ஏற்பட்ட நிலைத்த சிநேகிதங்களே தம்பால் அத்தேசம் கொண்ட நன்மதிப்புக்கு அத்தாட்சி என்று. அன்று சிறு கூட்டத்தில் பாட்டுக்களை வாசித்து வருகையில், தாடி வளர்ந்த மற்றொருவருடைய முகத்தில் இரு கண்களும் இடையிடையே டாகூருடையவை களைச் சந்தித்தன. பிற்பாடும் வெளியே உலாவுகையில் விநயத்துடன் டாகூரை அந்த வெள்ளைக்காரர் அனுசரித்து நந்தவனத்திலும் இவருடன் கூட உலாவினார். மறுபடியும் மறுபடியும், அவர் டாகூரைப் பாடக்கேட்ட அடிகளை நாமும் சற்றுக் கேட்டு இன்புறுவோம்:

அவர் வருகையைக் குறிக்கும் காலடிச் சப்தத்தை
நீங்கள் செவிசாய்த்துக் கவனிக்கவில்லையா ?
அவர் வருவார், வருவார், என்றும் வருவார்.
வசந்த ருதுவின் இளம் வெப்பத்தினிடையே
வனப்பிரதேசத்தில் நடந்து வருவார்

..................................................

அவர் வருவார், வருவார், என்றும் வருவார்.
வர்ஷா காலத்தின் இருட்டில் இடியோசையுடன்
திரண்டு உருண்டு வரும் மேகமாகிய
ரதத்தில் ஏறிவருவார்.

அவர் வருவார், வருவார், என்றும் வருவார்.
துயர அலைகள் மேன்மேலும் மோதுகையில்,
அவருடைய தாள்களே என் இதயத்தை
அழுத்துகின்றன ;

அவருடைய பாத கமலங்கள் என்னைத் தொடவுமே,
என் உள்ளத்தே உதிக்கும் உணர்ச்சி
பொலிவுடன் மலர்கிறது.

அந்த வெள்ளைக்காரர்தான் ஆண்ட்ரூஸ் என்னும் பரம தீனபந்து. அன்று அவ்விருவர்களுக்கும் ஏற்பட்ட நட்பு வாழ்க்கையில் பெருமணம் பெற்று, வாழ்க்கை முடிவடைந்த பிற்பாடும் மறையாத வாசனையாய் இன்றும் உலவுகிறது.

அன்று தொடங்கி டாகுர் உலகிலுள்ள பல நாடுகளுக்குப் பிரயாணம் செய்து வந்தார். எங்கும் வரவேற்பு, பலமாய் நடந்தது. கவிஞன் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதற்கு ஒப்ப, உலகிலுள்ள சுதந்திர நாடுகளெல்லாம் இவர் கருத்துக்களில் பதிந்து கிடந்த உண்மையைக் காணத் தொடங்கின. இவர் செல்லாத இடங்களே இல்லை எனலாம். ஆனால் தென் ஆப்பிரிகா, ஆஸ்த்ரேலியா, நியூ ஜீலண்டு இவைகளுக்கு இவர் செல்லவில்லை. மற்றப் பிரதேசங்களை வருஷந் தோறும் பிற்காலங்களில் தம் சுற்றுப் பிரயாணங்களின் லக்ஷ்யமாகக் கருதி வந்தார்.

அமெரிக்காவின் புதுப் பணச் செருக்கைக் கண்டு இவர் மருண்டு விடவில்லை. நிலையற்ற பொருளாசைகளைக் காணவும், நிலையுள்ள செல்வமொன்று 'வா வா' என்று நம்மைக் கூப்பிடுவதை அமெரிக்கர்களிடமே உணர்த்த இவருக்கு வேகம் பிறந்தது. "சாதனு" என்னும் அரிய கட்டுரைத் தொகுதியை உலகம் பெற்றதற்கு அமெரிக்கர்களே காரணமானூர்கள். டாகுருடைய இலக்கியச் செல்வங்களில் வகைக்கு ஒன்ருய்ப் பொறுக்குவதாயின், கட்டுரைகளின் உயர்வை எடுத்துக் காட்டச் "சாதனு" என்னும் புஸ்தகமே இலக்காகும்.

இதற்கிடையில் உலக மகாயுத்தம் புரளத் தொடங்கி விட்டது. ஒருவரை யொருவர் ஆட் கொள்ளவும், பிறருடைய சுதந்திர வேட்கையை நசுக்கிக் கொல்லவும் நாகரிகச் செழிப்படைந்தவர்களே முனைந்து விட்டார்கள். டாகுருடைய அந்தரங்கத்தில் வேதனை, பெரும் புயல் போல் அடிக்கத் தொடங்கியது.

தமக்குள்ளே பெருத்த போர் ஒன்று புரிவதைக் கண்டார். தேசீய மென்று தலை விரித்தாடும் நோக்கம் உலக சுகத்தை இடம் தெரியாமல் செய்வதைப் பார்த்தார். எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம் என்ற பண்டை ரிஷிகளின் உயர்ந்த கருத்துக்கள் அல்லவா இனி நிலை நாட்டப்பட வேண்டுமென்ற விருப்பம் இவரிடம் அதிகரித்து விட்டது. பொன்னைப் பரிசுத்தப்படுத்துவது நெருப்பில்காட்டி அதனை வாட்டியெடுப்பதாலே அன்றோ? போர் முனையில் உண்மை வேதாந்தங்கள் உருவாகியதைப் பகவத்கீதையில் நன்கு பார்த்திருக்கிறோம். ரவீந்திரரும் தம் மனப் போரினின்றும் உள்ளம் தெளிந்தவராய் வெளிக் கிளம்பினார். சண்டை முடிந்ததுமே உலகில் சிறிது அமைதி குடிகொள்ள எதிர் பார்த்தவர், விசுவ பாரதி என்னும் நிலயத்தை ஸ்தாபிக்க முற்பட்டார். எல்லா அறிவாளிகளும் அங்குத் தங்கள் தங்கள் நாட்டின் சிறப்பைப் பற்றிய போதனைகளைச் செய்ய வழி செய்தார். சீனம் பழம் பெரு நாடு. அதன் பண்டைத் தர்மங்கள் பாரதத் தாயின் சிறந்த நோக்கங்களை ஒத்திருக்கின்றன. இவ்விரண்டு பழைய தேசங்களும் மறுபடியும் ஏன் தங்கள் தங்கள் பண்பாடுகளை யெல்லாம் ஒருவரோ டொருவர் ஒப்பிட்டுப் பார்த்துச் சேர்ந்து பல வகை நற் காரியங்களில் உழைக்கலாகாது? இம்மாதிரி எண்ணங்களி னிடையே மற்றப் பெரிய ராஜ்யங்களையும் இவர் மறக்க வில்லை.

ஜப்பான் சமீப காலத்தில் உலகமே எதிர்பாராத விதத்தில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. கீழை நாடுகளில் இவ்வளவு தூரம் மேலை நாட்டாரைப் போல் யுத்தத் தளவாடங்களைப் பெருக்கி மற்றத் தேசங்களை வலுப் போருக்கு அழைக்கக் கூடியவர்களே யில்லை. ஆனால் ஜப்பான் அழகிய கலை-அபிருசிகளையும் போஷித்தது. கீழை நாடுகளில் மிகவும் தலை தூக்கி யிருப்பதால், டாகூர் அதையும் கண்டு வரச் சென்றார். பிற்பாடு அங்குள்ள அநீதிகளைக் காணவுமே மனத்தினுள் அதிர்ச்சி அடைந்து விட்டார். தொழிற்சாலைகளுக்குக் குறைவே

இல்லை. அந்நாட்டில் வேலை யில்லாதவர்களே மிகக் குறைவு. ஆயினும் எவ்வளவு வித ஹிம்ஸைகளைப் பொறுத்தார்கள் கீழ் ஜனங்கள்? ஊதியமும் குறைவு; வேலையும் இடை விடாமல் உள்ளது. கேட்க வேண்டுமா அவர்களின் தவிப்புக்கு? அவைகளைக் காணவே டாகுருக்குக் கோபம் பொங்கி எழுந்தது. "தேசியம்" என்ற தலைப்புடன் பல அரிய சொற்பொழிவுகளைச் செய்தார். சீனதேசத்தைக் கைப்பற்ற ஜப்பான் செய்யும் சூழ்ச்சிகளை யெல்லாம் வெறுத்து நல்ல உபதேசங்களைச் செய்தார்.

பிடிக்குமா இவ்வார்த்தைகள் கொழுப்பேறிய அதிகாரிகளுக்கு? அவ்வளவு தான்; டாகுருக்கு முதலில் வரவேற்பை நன்கு செய்தவர்கள், வர வர இவரைக் குற்றம் கூறத் தொடங்கி விட்டனர். இவைகளைப் பொருட்படுத்தாதவ ரானமையால், தம் நாட்டை நினைந்து ஆறுதல் படத் தொடங்கினர். பாரதத் தாய் மட்டும் தன் இன்னல்கள் பலவற்றைச் சரியாக அவ்வப்பொழுது விலக்கிக்கொண்டால், எவ்வளவு உயர்ந்த நாடாக உலகிற்கே திலகமாய்ப் புராதன காலங்களில் உள்ளதைப் போலவே வாழலாம் என்று நிச்சயித்துக் கொண்டார்.

இங்குள்ள பொருளாதார நெருக்கடிக்கும், வியாபாரத் துறையில் செழிக்காததற்கு நம் நாடு முக்கிய இலக்காக ஆனதற்கும், கைத்தொழில் அபிவிருத்திக்கு ஏற்பட்டிருக்கும் தடைகளே காரணம். தேசீய வாதிகள் தற்கால நிலைமையைப்பற்றிக் கூக்குரலிட்டதை இவருடைய செவிகளும் நன்கு கேட்டன. தம்முடைய பார்வையில் வளர வேண்டிய கைத்தொழில் வேலைகளை ஆரம்பிக்க ஓர் ஏற்பாடு செய்ய முன் வந்தார். ஸ்ரீ நிகேதனம் என்ற கைத்தொழில் நிலயத்தையும் விச்வபாரதி ஸ்தாபனத்துடன் தொடங்கி விட்டார். 'சுருள்' என்ற இடத்தில் இந்நிலயம் நிலைத்து விட்டது. சுகாதார முறைகளும், வைத்தியத் தொழில் அபிவிருத்தியும், கூடவே கற்றுக் கொடுக்கப்பட்டன. மேலும் தற்கால யுவர்கள்-இயக்கங்களையும் அவ்விடத்தில்

காலப் போக்கை ஒட்டி ஆரம்பம் செய்திருக்கிருர். சில்ப பவனம் என்பது கலைகள் தனியாகப் போதிக்கப்படும் இடம். இந்தியச் சித்திரம், சிலை-சாஸ்திரம் முதலிய பண்டைக் கலைகளை உயிர்ப்பிக்க அவநீந்திரர், நந்தலால் போஸ் போன்ற ஓவிய மணிகள் இவ்விடத்தில் தான் முயற்சிகளைச் செய்து வருகிருர்கள். வங்காள நாட்டில் பஞ்சம் என்று கேள்விப்பட்டால், ஸ்ரீ நிகேதனத் தொண்டர்களின் கூட்டம் உடனே ஓடி வந்துவிடும்.

இந்திய நாட்டில் கிராமங்கள் நிறைந்துள்ளன. மகாத்மாவும், டாகுரும், இன்னும் தென்னிந்திய எழுத்தாளர்களில் கா. சி. வேங்கட ரமணி முதலியோரும், கிராமப் புனருத்தாரணத்தின் பொருட்டுப் பலவிதக் கட்டுரைகளை அவ்வப்பொழுது எழுதியுள்ளார்கள். தங்கள் தங்கள் மேற்பார்வையில் பெரியதோ சிறியதோ, கிராமச் சீர்திருத்தங்களுக்கென ஏற்பாடுகள் நடந்தேறியதையும் அவரவர்கள் சொந்தப் பொறுப்பாக வகித்துவருகிருர்கள். கவிஞரானவருக்கு அழகுத் தெய்வம் ஊட்டும் ஆற்றல் மற்றெல்லாவற்றைக் காட்டிலும் அதிகம். நாடு முழுவதிலுமே ஒழுங்கும், உயர்வும் ஏற்பட வேண்டுமானுல், சிறு கிராமங்கள் ஆங்காங்கே சுக ஜீவனத்திற்கும், இந்தியப் பண்பாடுகளுடன் நிறைந்திருப்பதற்கும் வழி யொன்றைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

## 5. கவிதைக் காதலி

பிற பாஷையில் எழுதவும், பாட்டுக்கள் கட்டவும் பலர் மனங் கூசாமல் ஆரம்பிக்கின்ருர்கள். நிஜமான கவிப் பண்புகளும், இதய உணர்ச்சிகளும் பிரதிபலிக்க வேண்டுமாயின், சொந்த மொழியில்தான் எவராலும் கவிதையின் உச்சியை எட்ட முடியும். சொந்த பாஷையில் மட்டும் எழுதுகிறவர்களெல்லாம் உயர்ந்த எழுத்தாளர்களாகவே உண்டாகி விடுகிருர்களா? எவ்வளவோ மட்ட



நோபெல் பரிசு பெற்ற
**கவி ரவீந்திரர்**

ரகத்தைச் சார்ந்த உழைப்பாளிகளும் இருக்கிறார்களே என்றால், அதற்குப் பதில் இல்லாமல் இல்லை. எழுதத் தெரிந்து கொண்டவனாயின், தாய்ப் பாஷையிலுள்ள பல விதச் சௌகரியங்களும், சுபாவமான அம்சங்களும், எவ்வளவு பயின்றவனுக்கும் மற்ற மொழியில் உண்டாகாது என்பதைச் சந்தேகமற அறிவான். வாஸ்தவத்தில் மனோ தர்மமும் அறிவும் கலந்து உருவாகும் இலக்கிய சிருஷ்டிகளிலே அவரவர் தாய்மொழியிலுள்ளவைகளைப் போலத் தாமே வேறு பாஷையில் எழுதியுள்ளவைகளும் இரா. சிலர் தாய்மொழியைப் பயிலாததனால், வேறு பாஷையில் தங்கள் சக்தியைக் காட்டி, சொந்தப் பாஷையில் எழுத முடியாமல் தவிப்பதைப் பார்த்தால், அவர்களுடைய விதிப்பயனை நொந்து கொள்வதைத் தவிர வேறு எக்காரணத்தையும் குறிப்பது சாத்தியமில்லை.

எழுத்தாளர்கள் மறக்காமல் செய்ய வேண்டியது மற்றொன்று. ஏற்கெனவே கடைகளில் தயாராக வைத்துள்ள வஸ்துக்களை வாங்கிச் சொந்தச் சரக்காகப் பிறருக்கு மோசம் காட்டி விற்பனை செய்யலாகாது. அபிப்பிராயங்கள் மட்டும் பரிசீலனையினால் தெளிவு பட்டு விட்டால், ஓரளவு வளம் பெறாத பாஷையிலும் அதன் அழகு இழிவாகக் கருதப்படாது. ஏனெனில் உள்ளத்தின் உண்மையொளி வாக்கில் ஒளியிடாதிருப்பது எதிர்பார்க்கக் கூடியதல்ல. பாஷை ஒன்றாயினும், அவரவர் கையாளும் வழியில் தனிப்பட்டதாக உருவெடுத்துக் கொள்ளவும், தனி முத்திரையை முகத்திலே அணியவும் தொடங்கிவிடும்.

மனித இதயத்தின் ஆழத்தில் கவிதை-ரஸத்தை அனுபவிக்கத் தகுந்த சக்தியொன்று பதுங்கிக் கிடக்கிறது. சிலர் அதனைச் சதா நோண்டி நோண்டி எடுத்து அதன் சலசலப்பைக் கிளப்பத் தாமாகவே தொடங்கிவிடுகிறார்கள். சிலர் அதை மூடியிருக்கும் புல் பூண்டுகளைக் கழித்தெறியாமல், ஊற்றுக்கால் எங்கு

உள்ளது என்பதைக்கூட அறிந்துகொள்ளாமல், நாளடைவில் அதன் பசையெல்லாம் உலர அடித்து விடுகிறார்கள். இலக்கியத்தை அனுபவிக்கும் ஆற்றலைச் சிறுபிராயம் முதற்கொண்டு வளர்க்கவும் வற்றடிக்கவும் அவரவர் பழக்கங்களே மூலகாரணங்களாய் விடுகின்றன. பாஷையின் தூண்டுகோல் ஒன்றே உள்ளே கிடக்கும் கவிதையைத் தோண்டி வெளிக்காட்டச் சாதனமாகிறது. பாஷையும் வேண்டிய அளவு வளைந்து கொடுத்துக் கொண்டு, புதிய கருத்திற்கும் இணங்கிய கருவியாக வேண்டும். எங்காவது நவீன முறையில் சில அபிப் பிராயங்களைக் காட்ட மனம் தூண்டினால், மொழிகள் சுகமாய் அவைகளுக்கு உரிய வாகனங்களாக வேண்டும். அவ்விதம் ஆவதை விட்டுக் குடைசாய்வதற்குத் தொடங்கினால், அதைவிடக் குறைவு வேறு வேண்டிய தில்லை. உயிரற்ற பிராணிகளை அலங்காரத்திற்காக உள்ளே பஞ்சடைத்துக் கொலுவில் வைப்பதுபோலவே வாக்கியங்களும் வரிசையாய்க் காட்சி அளிக்கும்.

ரவீந்திரர் கவிதைக் காதலியை ரகசியமாய்ச் சந்தித்துக் காதலிக்க, சகிஜனங்களின் உதவியை நாடியவரே அல்ல. இவர் எழுதப் புகும் நாட்களில் ஆங்கில பாஷையைக் கற்ற புதுக் கல்வியாளர்கள் நவீன முறையில் ஆங்கிலக் கட்டுரைகளையும், ஆங்கில இலக்கிய மரபை அனுசரித்துச் சிற்சில நூல்களையும் இயற்றி யிருந்தார்கள். தாராளமாய் மேலை நாட்டு இலக்கிய நிதிகளிலிருந்து கடன் கேட்டும், அல்லது திருடியும் தாய்மொழியை வளம்பெறச் செய்தவர்களும் உண்டு. ரவீந்திரர் சென்ற பாதை நேர்முகமாய் நோக்கியது. பாட்டுக்களை இயற்றும் காரியத்தில் பண்டை மரபை அவர் முழுவதும் பின் தொடரவில்லை என்பதால் கருத்துக்களிலும் சொந்த நாட்டின் காவிய லக்ஷயங்களைக் கைவிட்டார் என்று சொல்வதற்கு இல்லை. புது மார்க்கங்களைச் செய்வதற்கு அபார தைரியம் வேண்டும். அம்மாதிரி வீரர்களில் டாகுர் சிறந்தவர். காளிதாஸர் உயிருடன் இருந்த காலத்தில் அவர் வரையிலும் சில புது

வழிகளில் காவியங்களை இயற்றினர் என்பது நம்பக் கூடியது. ஸந்தேச காவியங்களை அதற்கு முன் வடமொழி இலக்கியம் பெறவில்லை. ராமாயணக் கதையில் ஹனுமான் தூது சென்றதை வைத்துக்கொண்டு காளிதாஸர் மேக ஸந்தேசத்தை ஆரம்பித்தார் என்பவர்களுக்குக் கூட, காவியத்தின் உயர் நோக்கமே பிரிவாற்ருமையை நினைத்துப் புலம்புதல் என்பதை இலக்கிய மரபில் சேர்த்த பெருமை அம்மகாகவிக்கு மட்டும் உரியது என்று காட்டலாம். அதே விதம்தான் ரகுவம்ச காவியமும். அதற்குமுன் அரசர்கள் வரலாற்றை வைத்து ஒரு வரும் காவியம் எழுதியதில்லை. என்றுமே கற்பனைக் களஞ்சியங்களான புலவர்கள் மற்றவர்களையும் தங்களைப் பின்பற்றச் செய்வார்களே தவிர, எல்லா வகையிலும் பிறரைத் தாங்கள் அனுசரிப்பதில்லை. கற்பனைச் சிகரங்கள் என்றதினுல் சாமானியர்களுக்கு உவந்த காரிய மல்ல இது என்பதையும் உணர வேண்டும். அப்படி உணராதவர்கள் செய்யும் இலக்கியத் தொகுதியைச் சுவைக்காமலே அப்புறம் செல்ல உலகமும் தயாராகவே தான் இருக்கும்.

ரவீந்திரர் இளைஞராக இருக்கையில் எழுதியவைகளில் திணற அடிக்கும் வருணனைகளைக் கொட்டி, சிருங்கார லஹரியாய்க் காவியங்களைச் செய்துவிட்டார். வைஷ்ணவ சமயாசாரியர்கள் சிலர் வங்காளத்தில் கடவுளை நினைந்து உருகும் காவியங்களில் நாயகநாயகி பாவங்களை முறையாக வகுத்து, அவைகளைச் செழிக்கச் செய்யவே சிருங்கார மயமான வருணனைகளை வைத்தெழுதி யிருக்கிறார்கள். அவைகளை டாகூர் தம்முடைய சிறு வயசு முதல் அனுபவித்த காரணமாகத் தாமும் சற்றும் தயக்கம் கொள்ளாமல் அவ்வழியே சென்ருர். தெவிட்டும் இன்ப ரஸம் சிலருக்கு அவ்வளவாக மனத்திற்குச் சந்தோஷத்தை உண்டாக்குவதில்லை. அவர்களே டாகூரைக் குறை கூறினார்கள். மற்றப்படி கவி யுருவமும், சொற்களில் தேங்கிய இனிப்பும் பிரமாதமாய்த்தான் இவரிடம் இருந்தன.

இயற்கை அனுபவத்தைச் சதா நட்பின் உரையாணியைப்போல் தம்முடன் காப்பாற்றி வந்தார் என்று அறிவோமல்லவா? இயற்கையில் காணாத விநோதங்களா? ருதுக்களின் மாறுதல்களும், செழிப்பினால் உண்டாகும் வித்தியாசங்களும் தேசத்துக்குத் தேசம் தனிப்பட்டு இருப்பதை இவர் யாத்திரைகளில் குறித்திருந்தார். மனித இயல்பையும் இவர் கவனித்தவர். அன்பு என்பது ஒரு விதப் பிரதிப் பிரயோஜனத்தையும் எதிர்பாராதது. உலகில் அதனை நன்கு அறிந்தவர்கள் குறைவாயினும், அக்குறைவான இனத்தாரிடம் கனிந்து ஓடும் வெள்ளத்தில் மிதந்து நீந்துவார் கவிஞர். தமக்குப் பட்டவைகளையே எழுதவும், எழுதியவைகளில் ஒவ்வொரு நோக்கத்தையே கட்டுப்பாடாய்ப் பிடித்துக்கொண்டு மேலே ஏறவும் இவர் தவறியதில்லை.

தாமே சிறந்த பாடகரானதால் சொந்தச் சாகித்தியங்களை அளவு தெரியாமல் செய்திருக்கிறார். முன் சென்றவர்களைத்தான் தொழவேண்டும் என்ற நம்பிக்கை இல்லாததால், இதுவரையிலும் கேளாத வழிகளில் சங்கீதக் கட்டுக்கோப்புகளை அமைத்துப் பாடியிருக்கிறார். அபாரமான திடசித்தம் படைத்த காரணத்தால் எதையும் தமக்கு நேர்மையெனத் தோன்றும் மார்க்கத்தில் செய்யவும், அதனால் ஏற்படும் லாப நஷ்டங்களுக்குத் தாமே உத்தரவாதமாயிருக்கவும் இவர் தெரிந்து கொண்டார். கலை உலகில் ஒருவர் சுயேச்சையாய்த் தமக்கென்றே பாடியவராகக் கருதப்பட்டால், அவரிடம் மிகையான அம்சங்கள் இருப்பினும் பிறர் அனுபவியாதிருக்க மாட்டார்கள். ரவீந்திரரை வாசிப்போர் எல்லோருமே இந்த உண்மையை மறக்கமாட்டார்கள்.

கவிதையை உள்ளங் குளிர நேசிக்கையில் இடையிடையே சந்தேகங்கள் தோன்றாமலும் இருப்பதில்லை. ரஸிகர்கள் இல்லாமல் உலகமே அற்றுப்போய் விட்டால் என்ன செய்வது? வாஸ்தவத்தில் அம்மாதிரி ஆய்விட்டால் கவலைக் கிடந்தான். அரஸிகர்கள் மத்தியில் தம்மைச்

சிருஷ்டித்தானே பிரம்மா என்று தம்மை ஒரு கவிஞர் நொந்து கொண்டாராம். ஒன்றிரண்டு பேர்களாவது ரஸிகர் இருப்பினும் சரி, அல்லது அவர்களும் இல்லாவிட்டால் பாதகமில்லை, கவிதை இன்பத்தை எழுத்துக்களில் எழுதியே தீர்ப்பேன் என்பார் நீலகண்ட தீக்ஷிதர். ரவீந்திரர் தம் கவிதையை அனுபவிக்கப் பண்டிதர்களின் கூட்டங்களை எதிர்பார்க்கவில்லை. சாஸ்திரம் வாசித்து, வாக்கியார்த்தங்களை நன்கு செய்யும் பெரியோர்களை அவர் வேண்டவில்லை. தனிகர்கள் வீட்டில் அழகான அலமாரிகளில் புஸ்தகங்களை வைத்துக் கோச ஸ்தானங்களாகக் கொண்டாடும் இடத்திலும் கவிதையை அனுபவிப்பார்கள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. மாணவன் தினம் இன்பக் கனவுகள் காண்கின்ற பொழுதும் கவிதையைப் பருகத் தகுந்த நிம்மதியைப் பெறுவான் என்று அவர் விரும்பவில்லை. மணமகள் கணவனை நினைந்து பரவசமாகி யிருக்கையில் கவிஞன் பாடிய அருமையை எங்கே உணரப் போகிறாள்? அங்கு மில்லை. ஆனால் கவிதைக்கு இருப்பிடம் பின் எது? அடர்ந்து செழித்த இயற்கைத் தேவியின் மடியில், புள்ளினங்கள் பாடித் தாலாட்ட, சிற்றோடை சலசல வெனச் சிரித்து விளையாட, ஐக்கிய சுகத்தை அனுபவிக்கும் இரு உள்ளங்களே அறியும் கவிதைக் காதலியின் வரம்பற்ற தன்மையை என்று முடிவு கட்டியுள்ளார்.

கவிதையின் அழகைப் பன்மடங்கு பெருக்குவதற்கு அவளுக்கு எவ்வளவோ அலங்காரங்களைச் செய்து பார்த்திருக்கிறார் கவிஞரும். விருத்தங்களைக் கவிதையில் இவர் கையாண்ட முறையே தனிச் சிறப்புடன் கூடியது. புதிய விருத்தங்களை வங்காள பாஷைக்கு அருளிய கியாதி ரவீந்திரருக்கே உண்டு. ஏற்கெனவே உள்ள பண்களைப் பதனிட்ட பெயரும் இவரைப்பற்றிய வரலாறுகளில் காணப்படுவதுண்டு. வங்காளிகளும், அதிலும் வங்காளக் கவிகளைப் பற்றிய ஆராய்ச்சியாளர்களுமே இவ் விஷயத்தை நன்கு பரிசீலனை செய்து குண தோஷங்களை வெளியிடவேண்டும் என்பதில் ஐயமில்லை.

கவி என்றதுமே சிலருக்குப் பயம் உண்டாகி விடும் "சரி; ஆரம்பித்தனவா மலையும் மேகமும், பனியும், புள்ளினமும் நம்மைத் தொந்தரவு செய்ய?" என்பார்கள். அப்பேர்ப்பட்டவர்களை என்றுமே டாகுருடைய பூஜா கிருஹத்தின் சமீபம் கொண்டு வரக்கூடாது. அடுத்த தாகச் சிலர் சிறிதளவேனும் புத்தியை உபயோகிக்கும்படி நேரிடினும், உடனே 'இதென்ன கவிதையா?' என்று கூப்பாடு போடத் தொடங்குவார்கள். அவர்களைச் சுக சாலிகள் என்று விடவேண்டியதுதான். மற்றும் சிலர் ஒவ்வொன்றாய்ப் பதங்களை எடுத்துப் பிரித்துப் பார்த்து அதனுள் எதையோ தேடுவதுபோல் கவலையைக் காட்டு வார்கள். இவர்கள் இலக்கணப் பைத்தியங்கள். ஒரு சாரார் மட்டுமே கவியைக் கண்டதும், உளம் அதில் ஊன்றி வாய்ச்சொல்லும் விளக்காத அறிவொன்றைக் கவிஞன் தெள்ளத்தெளிய, சப்த மயமான பதங்களில் புகுத்தி யிருப்பதைக் கண்டு கண நேரம் தங்களையே மறப்பார்கள். அவர்களைத்தான் டாகூர் என்றும் வேண்டுவார். பாஷை யாகிற அன்னிய உலகிற்குப் போகவேண்டாம் என்றுகூட, பதங்களின் வெளிப்படையான அர்த்தங்களை மட்டும் வைத்து ஆராயும் ஆன்மாக்களை வேண்டிக் கொள்வார். இம்மாதிரி எவ்வளவோ எழுதிக்கொண்டு போகலாம். நம்மையும் ஓரளவு வாசகர்கள் அறிவதன் பொருட்டு அதிகம் இங்கு எழுதாமல் விட வேண்டியிருக்கிறது.

இவரை வங்காள மொழியில் அனுபவித்தவர்கள் ஒன்று மட்டும் சதா கூறுவார்கள். "வசனத்தில் சோபிப்பதைவிடக் கவிதைத் திரட்டில்தான் ரவீந்திரர் கவர்ச்சி அளிப்பார்; செய்யுட்களைவிட இவருடைய கீதங்களே மிகவும் இன்ப மயமானவை" என்பார்கள். ஆங்கில பாஷையில் உள்ள மொழிபெயர்ப்புக்களைப் படித்துவிட்டுப் 'புரியவில்லையே கருத்து' என்று கையை விரிப்பது இவருடைய பெயருக்கு உரிய மரியாதை யாகாது.

'பாஷை மட்டும்தானா கவியில், கருத்தொன்று இருக்கிறதே கவனிக்க' என்று கேட்போருக்குத் தடை

யின்றிப் பதில் கொடுத்துவிடலாம். உண்மையில் காவியத்தின் ஆத்மாவாக நினைக்கப்படுவது 'த்வனி'யாயின், வேண்டிய இடங்களில் இவருடைய கற்பனைகளில் த்வனிப் பொருத்தம் சிறந்து காண்பதைக் காட்டிவிடலாம். மற்றதெல்லாம் நன்கு பொருந்தி யிருந்தும், லாவண்யம் இல்லாவிட்டால், எப்படிப் பெண்ணொருத்தியை நாம் நிஜமான அழகு வாய்ந்தவளாக நினைக்க இயலாதோ, அம்மாதிரியே த்வனியின் அம்சம் பெறாத காவியம் மற்ற அவயவங்களை நன்கு பெற்றிருப்பினும் பிரயோஜனமில்லை என்பார்கள் வடமொழி ஸாகித்திய ஆராய்ச்சியில் சிறந்தவர்கள். யோசித்தால், எல்லாக் கலைகளிலுமே இம்மாதிரி ஒன்று உள்ளே இருப்பதால்தான் அவைகளை அனுபவிக்கச் செய்கின்றன நம்மை. அதையே தேடிக் கண்டெடுத்து அனுபவிப்பவர்கள் ரஸிகர்கள் என்பதில் வேற்றுமையான அபிப்பிராயமும் கிடையாது. ஓவிய மொன்றில் உருவத்திற்கு வேண்டிய எல்லா வர்ணங்களைத் தீட்டிய பிறகும் கண்களைத் திறவாமல் முகத்தை வரைந்து வைத்துவிட்டால், அப்பொழுது தெரியும் ரஸிகர்கள் படும் பாடு. சங்கீதத்தில் மற்ற அம்சங்கள் பலித்திருப்பினும், உணர்ச்சியொன்று குறைவுபடின், கேவலம் ஸ்வரங்களைப் பந்தலாகப் பரப்பிய உணர்ச்சி தான் கேட்கின்றவர்களிடம் ஊர்ஜிதமாகும். ஆனால் இவ் விடத்தில் குறிக்கும் உணர்ச்சி, கலை உணர்ச்சி என்பதை மறக்கலாகாது. ஸாகித்தியத்தின் அர்த்தத்தில் மட்டும் உணர்ச்சியை எதிர்பார்ப்பது சங்கீத அனுபவமல்ல.

கவிதையுடன் கொஞ்சிக் குலாவிப் பல நாட்கள் டாகுர் சுகித்திருந்தார். இவர் வாயினின்றும் சிந்திய முத்தங்கள் போலுள்ள சிலவற்றைக் கவனிப்போம்:

> தாம் பிறப்பித்த விடியும் நேரங்களில்தான் கடவுளுக்குப் புதிய புதிய ஆச்சரியங்கள் தோன்றுகின்றனவாம்.
>
> பக்ஷி, தான் மேகமாக இருக்கலாகாதா என்று எண்ணுகிறது;
>
> மேகம், தான் பறவையாக மாறலாகாதா என்று வேண்டிக் கொள்கிறது.

நீர்வீழ்ச்சி சொல்லுகிறது :

"எனக்கு எப்பொழுது சுயேச்சை கிட்டுகிறதோ, அப்பொழுதெல்லாம் நான் பாடுகிறேன்."

ஜலத்தில் மீன் சும்மா இருக்கிறது, பூமியில் மிருகம் கத்துகிறது, வானத்தில் பறவை பாடுகிறது.

மனிதனே எனில் கடலின் அமைதியையும், பாரின் பேரொலியையும், வானத்தின் கீத வெள்ளத்தையும் தனக்குள்ளேயே அடைத்து வைத்திருக்கிறான்.

* * * *

இறைவன் சொல்லுவான் :

"உங்களுக்கு ஆறுதல் தருபவனானதால் நான் சிரமத்தையும் தருகிறேன்; உங்களை நேசிப்பதாலேயே சிக்ஷிக்கவும் முற்படுகிறேன்."

* * * *

மரத்தினிடமே கோடரி தன் காம்பிற்காகத் தானம் வேண்டியது. மரம் அதைக் கொடுத்துவிட்டது.

* * * *

மூலையில் மேகமொன்று வினயத்துடன் நிற்கிறது.

காலைக் கதிரவன் அதனைப் பொற் கிரணங்களினால் முடி சூட்டினான்.

* * * *

ஆதித்தியன் சுத்த மயமான ஒளியை அணிந்து நிற்கிறான்.

மேகங்களோ எனில் கண்ணைப் பறிக்கும் பற்பல வர்ணங்களுடன் தங்களை அலங்கரித்துக் கொள்ளுகின்றன.

* * * *

தம் நீண்ட வாழ்நாட்களில் டாகுர் இயற்றியுள்ள பாட்டுக்களின் தொகை இரண்டாயிரத்திற்கு மேல் உள்ளனவாம். இவைகளைத் தவிரவும் கதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், கடிதம், கீதம் இம்மாதிரி இலக்கிய உலகில் எவ்வளவு வகைகள் ஒருவரால் சிருஷ்டிக்க முடியுமோ அவ்வளவையும் இவர் செய்திருக்கிறார். பண்டை முனிவர்கள் தாம் ஆயிரக்கணக்கான சுலோகங்களை இயற்றியுள்ளார்கள். அவர்கள் இனத்தையே சேர்ந்தவராக இவரையும் நினைப்பதுதான் உசிதம்: காளிதாஸர், வால்மீகி, இவர்களுடைய கவி பரம்பரையைச் சார்ந்தவரும் கூட. ஏனெனில் எவைகளில் வால்மீகியும் அவரைப் பின்பற்றியவர்களும் மனம்

திளைத்தார்களோ, அவைகளே ரவீந்திரருக்கும் உவகையைக் கிளப்புகின்றன. ஆனால் வால்மீகியின் பெயரைச் சொன்ன மூச்சில் டாகூருடைய நாமத்தை உச்சரித்ததற்காகச் சிலர் கடுஞ் சினம் கொள்வார்கள். வாஸ்தவத்தில், ஒரு விதமான மன ஆயாசத்திற்கும் ஹேது இல்லை. பக்ஷபாதங்கள் இருப்பது எங்கும் சகஜம். தெளிவான தீர்மானத்திற்கும் ஒருநாள் வரவேண்டும் அல்லவா? ஒருகால் வால்மீகியையும், காளிதாஸரையுமே சரியாக உணராத அறிவாளிகள் இங்கு இருக்கலாம். அவர்கள் டாகூரைப் படித்தும் படியாதவர்களாகவே இருப்பார்கள். அல்லது சமீப காலத்தில் இவர் இருந்த காரணமே, டாகூரைப் புராதனக் கவிஞர்கள் இனத்தில் சேர்ப்பது சிலருக்கு அபசாரமாகப் படலாம். நீலகண்ட தீக்ஷிதர் சொன்னாராம்: "ஒருவன் உயிருடன் இருப்பதாலேயே அவனுடைய கவிதைக்கு உரிய பாராட்டு வருவதில்லை" என்று. மிகவும் வாஸ்தவந்தான்.

## 6. பழமையின் மணம்

இரண்டு துறவிகள் ஒருநாள் எதிரே வரவும் ரவீந்திரர் அவர்களைப் பார்த்துக் கேட்டார்: "உங்கள் சமயக் கொள்கையின் தனி அம்சங்கள் யாவை?" என்று. ஒருவர் சும்மா இருக்க, மற்றவர் மட்டும் "சர்வ சுலபமாய்க் கூறலாம்" என்றார். "பின் ஏன் பிறருக்கு அதை உபதேசிக்காமல் இருக்கிறீர்?" என்றார் கவிஞர். பதிலுக்கு அந்தச் சாது சுறுக்கென்று தைக்கும் மொழிகளில், "யாருக்குத் தாகம் எடுக்கின்றதோ, அவன் தானாகவே ஜலமிருக்குமிடம் வருவான்" என்று சொன்னார். "ஆனால் அம்மாதிரி வருகிறவர்களும் இருக்கிறார்களா?" என்று கவிஞர் கேள்வியை விடாமல் கேட்டார். துறவியானவர் சற்று நிதானித்துவிட்டு, புன்முறுவல் முகத்தில் விளையாட, முடிவாகச் சொன்னார்: "ஒரு நாள் வந்துதானே ஆகவேண்டும், எவனாக இருப்பினும்" என்று.



மகாத்மா காந்தி—ரவீந்திரநாத டாகூர்

இச்சம்பவத்தைக் கவிஞரே தம்முடைய சிறந்த ஆராய்ச்சிக்கு உரிய முகவுரையாக எடுத்துக்கொண்டுள்ளார். உண்மையில் நிதானமாய் ஆராயவேண்டிய கருத்து ஒன்று கடைசி வாக்கியத்தில் இருக்கிறது. ஏனெனில் புத்திக்கு எட்டாத பொருளான சத்தியமொன்று உலகில் உள்ளது; அதனை வழிபடவேண்டுமாயின், அதற்கு முன்னால் சத்திய வேட்கையை மனிதன் நிச்சயம் பெற வேண்டும். அதனால்தான், தாகமெடுத்தால் தானாகவே வருவான் என்று அந்தச் சாது உரைத்தார் போலும். ஹிந்துக்களுடைய வேதாந்த விசாரங்கள் தோறும் சத்தான பொருள் நிலைத்திருப்பதைச் சந்தேகமில்லாமல் கூறியுள்ளார்கள். திகைக்க வைக்கும் சொல்வன்மையாலும், யுக்தி வாதங்களாலும் (ஆத்மா என்பதுதான் கடைசியில் உள்ளது; மற்றவைகளுக்கு நித்தியமான நிலை கிடையாது; பிரம்மத்திற்கு ரூபமில்லை, குணமில்லை) என்றெல்லாம் காட்டியுள்ளார்கள். ஆத்மா ஒன்றே எப்பொழுதும் உள்ளது என்பது அவர்கள் முடிவு.

ஒன்றான ஆத்மாவே இவ்வளவாகப் பிரிந்து பிரிந்து நம்மை வேற்றுமை உலகில் பிரமிக்கச் செய்கின்றது. அறிவுக் கண்ணை மலர வைத்தவர்கள், ஒருநாளும் வேற்றுமைகளை அதிகமாக்க மாட்டார்கள். ஜீவித யாத்திரையே மனிதன் பெறவேண்டிய சிறந்த ஞானத்திற்காக ஏற்பட்டது என்பது மறையோர்கள் சொன்ன கருத்து. எவ்விதம் முக்தி அடைவது என்பதற்காகவே உபநிஷத்துக்கள் எழுதப்பட்டன. உபநிஷத்துக்கள் பல இருப்பினும், எல்லாம் இந்தப் பிரம்ம சாக்ஷாத்காரம் என்று சொல்லப்பட்ட கருத்தையே அடிக்கடி உரைக்கின்றன. இதை அடைவதற்கு மனனம், தியானம் முதலிய சாதனங்களையும் குறித்துள்ளார்கள். தியான யோகம் சித்திப்பதற்கு அடவிகளைத் தேடவேண்டும். தபோவனங்களே ஜீவாத்மாவும் பரமாத்மாவும் கலப்பதற்குத் தகுந்த அமைதியைப் பெற்றிருக்கிறது என்பது பண்டை

ரிஷிகளின் அனுபவம். இவ்விதப் பழக்கங்களைப் புகழ்ந்து வால்மீகி சொன்னது இவ்வளவு தடவைதான் என்பதற்கில்லை. காளிதாஸரும் இனிய சுலோகங்களில் தபோவனங்களை அரசர்களும் அடைந்தார்கள் என்பதை அடிக்கடி கூறியுள்ளார். டாகுருக்கும் இவைகளே உண்மையாக விளங்கின. நியாயத்தில் மேலைநாடுகளைப் பார்த்துவிட்டு அங்குள்ள போகங்களை நன்கு உணர்ந்த பின்னும், நித்தியமான அமைதி குடிகொண்ட தபோவனங்களில் பரம்பொருளை நினைந்து சமாதியில் திளைத்திருப்பதே உயர்வு என்று இவர் சொல்வது நம்பத் தகுந்ததாக இல்லை. கவனித்தால் டாகுர் வெளி வேஷங்களைத் தள்ளி உள்ளே காணும் உண்மையின் ஒளியையே எதிலும் பின்பற்றினர் என்பது விளங்கும். எத்தனையோ விதங்களில் மேலைநாடுகளிலுள்ள உயர்ந்த சுகாதார வாழ்க்கை வழிகளையும், அவர்களிடம் காணும் தேச சேவையின் மணத்தையும் போற்றியவர். இருப்பினும், 'இவைகளையெல்லாம் தாண்டி ஒன்று உள்ளே கல்லையும் பொன்னுக்கும் தன்மை வாய்ந்தது உளதே; அதனைத் தேடிப் பிடித்து அழிவற்ற வரம் பெற வேண்டாமா?' என்றுதான் இவரும் பண்டைக் கருத்துக்களின் ஆழத்தில் இறங்கிவிடுகிறார் :

"இயற்கையை அடக்கி ஆளுவதாகவே மேலை நாட்டார்கள் மார்தட்டுவார்கள். ஏதோ பகைவர்கள் மத்தியிலுள்ளவன் வேண்டிய தவ்வளவையும் அவர்களிடமிருந்து பலாத்கரித்துப் பிடுங்கிக் கொள்வதைப்போல இயற்கையினிடமிருந்து மனிதன் வேண்டியதைப் பிடுங்கிக் கொள்ளுகிறான். இக்கருத்து நகர வாழ்க்கையின் விளைவு என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் நகரத்தில் மனிதன் தன் ஞாபகத்தையே வைத்துக்கொண்டு, தனக்கும் மற்றவைகளுக்குமுள்ள இடைவெளியை மேலும் மேலும் அகற்றிக் கொண்டே போகிறான். தான் வாழும் காரணத்தையும் உணர அசக்தனுகி விடுகிறான். இந்நாட்டில் திருஷ்டியை உபயோகித்த விதமே வேறு. உலகையும் மனிதனையும் ஒன்றாகப் பிணைத்து, ஒரே ஆத்மா

நிலைப்பதாய் நினைக்கின்றோம். நம்மைச் சுற்றியுள்ளவை களுக்கும் நமக்கும் யாதொரு விதமான பந்தமும் இல்லா திருப்பது சரியில்லை என்பதே இங்குள்ள கருத்து. சாதாரணமாய் மனிதன் தனக்கு இயற்கையின் உதவியே இல்லாமல், தானாக வேண்டியதைத் தன் கையினால் அடைவதாக நினைத்து இயற்கையின்மேல் புகார் செய் கிறான். அவனுடைய லாபம் சுய முயற்சியால் ஏற்படுவ தாயின், மேலும் அது நாளுக்கு நாள் விருத்தி அடைவ தாயின், தொடர்பு ஒன்று இயற்கைக்கும் அவனுக்கும் இடையே இருந்தாலொழிய வேறு எவ்விதத்திலும் அது சாத்தியமில்லை என்பது கவனிக்கையில் புலனாகும்."

"இம்மாதிரிக் கருத்துக்களே நம் நாட்டைக் கீழே இருத்திவிட்டன; மற்ற நாடுகள் வேண்டாத வேதாந்தங்களைப் பின்தொடராததால் செழிக்கின்றன" என்பது ஒரு சாரார் செய்யும் கட்சி. ரவீந்திரர் எவ்வளவு தற்காலத்துக் கொள்கையில் ஊறியபோதிலும், பண்டைத் தர்மங்களைக் கைவிட மறுத்துவிடுகிறார்: "இத்தேசம் காட்டிய வழி, தபோவனங்களின் தனிமையை நாடவும், தியானத்தினால் உலக மர்மங்களை விளக்கவும், மேலும் உலகமெல்லாம் ஒன்றாய்ச் சமையச் செய்யும் பொருள் ஒன்றிருப்பின் அதனை நேருக்குநேர் காணவும், மனிதன் முயலவேண்டும்" என்பார் அடிக்கடி.

ச்வேதாச்வதர உபநிஷத் கூறும்: "ஞான வடிவான இறைவனே எல்லா வஸ்துக்களிலும் தென்படுகிறார். அவரே மனிதனிடமுள்ள அந்தராத்மாவாகவும் தோன்றுகிறார். இதயம் அவரை உணர நேரிடில், அழிவற்ற நிலையைப் பெறும்." இதே தத்துவத்தைத் தம் கவிப் பண்புகளுடன் டாகூர் கூறியுள்ளார்:

'என்னுள்ளே இரவும் பகலும் பாயும் ஆவியூற்றின் ஓடை உலகம் முழுவதுமே சென்று தனி லயத் துடன் தாண்டவமிடுகிறது.

இதே ஜீவன் மண்ணில் ஊடுருவிச் சென்று, குதூஹலத்துடன் பூமியையும் பிளந்துகொண்டு

மேல் கிளம்பி, புல்பூண்டுகளாகவும், அலைமேல்
அலையாய்த் தெரியும் இலைகளும் புஷ்பங்களுமான
கடலாய்க் கொந்தளித் தெழுகிறது.

இதே உயிர்நாடி இறப்பும் பிறப்புமாகிற தொட்டிலில்
தாலாட்டப்பட்டு, உயர்வும் தாழ்வுமாகிய நிலையில்
மாறி மாறித் தோற்றுகிறது.

இதே ஜீவன் உலகினில் பாயும் உணர்வினால் தொடப்
பட்டுப் புதிய புதிய சோபையுடன் தோன்றுகிறது.
பழமையான சக்தியே என் ரத்தத்தில் கலந்து
இன்று என்னைப் பெருமிதம் பெறச் செய்கிறது.

ரவீந்திரர் வாழ்க்கையைப்பற்றிச் சொல்வது ஒரு தனி இனத்தைச் சேர்ந்ததாகவே நமக்குத் தோன்றும். "நதியின் ஜலம் உடம்பை அலம்பிச் சுத்தப்படுத்துவது மட்டுமல்ல, உள்ளத்தையும் ஒருங்கே புனிதமாக்குகிறது. பூமி உடலைத் தாங்குவது மட்டுமல்ல, இதயத்தையும் இன்புறச் செய்கிறது. அதன் ஸ்பரிசம் உடலோடு மட்டும் நில்லாமல், உள்ளத்தையும் தொடுகிறது" என்பார் சில சமயங்களில். கங்கை ஸ்நானத்தை இவ்வளவு காலமாய்ப் புனிதமான காரியமாகச் செய்தோர் பரம்பரையில் வந்த நமக்கு டாகுர் சொன்ன உண்மைகளில் சந்தேகங் கொள்ள முடியவே முடியாது.

அடுத்தது, பெண்மையின் தத்துவத்தை விளக்கும் பொழுது டாகுர் நம்மிடம் பழைய காலம் தொட்டு வந்துள்ள ஞாபகங்களையே உணர்த்துவார். சித்திரா என்னும் ஒற்றை அங்க நாடகம் இவர் செய்துள்ளவை களில் அபூர்வமானது. மிகவும் அரிய விஷயத்தை ஒற்றை அங்கத்தில் மிகச் சிறப்புடன் அமைத்திருக்கும் சாமர்த்தியம் உலக இலக்கியங்களில் கிடைப்பது சுலப மல்ல. கதையில் அர்ஜுனனைச் சித்திரா என்னும் அரசிளங் குமரி காதல் கொண்டுவிடுகிறாள். அவனை வசீகரிக்க மன்மதனுடைய சகாயத்தைப் பெற்று, அர்ஜுனனுடைய விரதத்தைப் போக்கடிக்கும் ஆற்றல் பொருந்திய எழிலுடன் தோன்றுகிறாள். அர்ஜுனனுடைய விழிகளில் கன்னிகையின் லாவண்யம் அசாதாரணமாய்ப்

படவே, அவனும் அவளை மணப்பதற்கு இணங்குகிறான். ஆனால் அவன் தேடிய இன்பமெல்லாம் சில நாள் ஆவதற்குள் சலிப்பையே அவனிடம் உண்டாக்கின. அவன் சித்திராவின் ஆத்ம குணங்களை நாடவில்லை. அவளோவெனில், அர்ஜுனனுடைய உண்மையான ஆண்மையிலும் அன்பிலும் நம்பிக்கை வைத்தவளாய் மோசம் போகிறாள். ஆனால் தன்னிடம் அன்பை வளர்த்ததால், அர்ஜுனன்பால் அளவுகடந்து தயை காட்டுகிறாள். இதோ அவளுடைய உயர்ந்த சுபாவத்தைக் காட்டும் மொழிகள் நம் செவியில் விழுகின்றன :

"நான் தங்கள்பால் அர்ப்பணம் செய்வது ஒரு பெண்ணின் களங்கமற்ற இதயமே. இவ்விடத்தில் தான் எல்லாத் துயரங்களும், இன்பங்களும் கலந்து கிடக்கின்றன ; இங்கே தான் என் ஆசைகளும், கவலைகளும், அவமானங்களும் ஒன்றாய்ச் சேர்ந்து மண்ணில் தோன்றிய மடந்தையை உருவாக்கியுள்ளன. ஆம், இந்த இடத்திலேயே அன்பென்னும் ஊற்றுப் பெருக்குக் கிளம்பி அழிவில்லா வரம்பெறவே ததத்தளிக்கிறது.........உம்முடைய பக்கத்தில் மட்டும் என்னை ஆபத்திலும் தீரச் செயலிலும் கூடவே வைத்துக் கொள்ளச் சற்று மனமிரங்கி உம்முடைய வாழ்க்கை விரதங்களில் எனக்குமொரு பங்கை அளிப்பீராயின், அப்பொழுது அறிவீர் என் நிஜத் தன்மையை."

கனிவு பெருகி வருவதிலும் காம்பீர்யத்தைக் காண்கிறோம். ஒவ்வொரு பெண்ணும் தன் இனத்திற்குக் கௌரவம் அளிப்பதானால், இம்மாதிரிச் சுபாவத்தைப் பின்பற்றுதல் அவசியமாகும். பெண்மையின் கௌரவம் சிறப்படைவதற்குக் காரணம், தியாகமும் அன்புடன் கலந்து, அதன் வெற்றியை நிலைக்கச் செய்வதுதான். அர்ஜுனனைக் கடைசியில் சித்திரா எவ்வாறு தனது அன்பினால் வெட்கமடையச் செய்கிறாள் என்பதைப் பார்ப்போம் :

"என் கர்ப்பத்தில் உயிர் பெற்றிருக்கும் சிசு ஆண் மகவாய் மட்டும் பிறந்தால், நானே அவனுக்கு வித்தைகளைப் புகட்டி இரண்டாவது அர்ஜுனனுகச் செய்வேன். உம்மிடமும் தகுந்த காலத்தில் அவனை அனுப்புவேன். அப்பொழுது அறிவீர் என்னை."

என்ன சுயநம்பிக்கை அவளிடம் தெரிகிறது! அன்பை அள்ளிவிட்டு அர்ஜுனனைத் திணற அடிக்கின்ருள். ராமாயணத்தில் சீதையை ராமன் காட்டில் இரண்டாம் தடவை கொண்டு விடும்படி சொன்னபொழுது, அவளும் கருத்தரித்திருந்த சமயம். சீதையும் ராமனிடம் ஏமாற்றத்தைக் காட்டினுலும், தன்னைக் கொஞ்ச நேரத்தில் நிதானம் செய்துகொண்டு, மறு பிறப்பிலும் ராமனையே கணவனுய்ப் பெறும் பாக்கியம் தனக்குக் கிட்ட வேண்டுமென்று கூறுகிருள்.

டாகூர் மேலைநாட்டுப் பெண் குலத்தையும் பார்த்திருப்பவர். அங்கும் எவ்வளவோ உயர் நோக்கங்களைக் கடைப்பிடித்துள்ளார்கள் உத்தம பத்தினிகள். ஆயினும் நம் நாட்டு நாகரிகச் சிறப்பிற்குக் கற்பும், காதல் கொள்வதில் அன்பின் எல்லையை எட்டிப் பிடிக்கும் மரபும், வெகுநாட்கள் சம்பிரதாயமாகிவிட்டன. அவைகளையே ரவீந்திரர் குறிக்கின்ருர். காளிதாசருடைய சகுந்தலையும் புருஷனுல் நிராகரிக்கப்பட்டுக் கருத் தரித்த சமயம் வருத்தத்திற்குள்ளாகிருள். அவள் அனுபவித்த துக்கங்களெல்லாம் தானுகத் தேடியவையே என்பதை டாகூர் நமக்குக் காண்பிப்பார். காமம் செய்த விளைவு காந்தர்வ விவாகம். ஆனுல், பச்சாத்தாபத் தீயில் வாட்டப்பட்ட பின்னர், சகுந்தலையும் துஷ்யந்தனும் நிலைக்கக்கூடிய அன்பையே பெற்றதாக ரவீந்திரர் முடிவு கட்டுவார்.

கலைத் தத்துவத்தையும் பண்டை நாட்களில் பார்த்த விதமே ரவீந்திரர் நோக்கினுர். இயற்கையைக் கேவலம் கலையில் நகல் செய்வது நியாயமில்லை. கலையின் உயர்

நோக்கம் அது அல்ல. கலையின் காரியம் யாதெனில், இயற்கையிலுள்ள சூக்ஷ்மங்களை அலசிப் பிறருக்கு எடுத்துக் காட்டுவதாம். அலைகளினிடையே கடலில் முழுகிக் கீழேயுள்ள நல்முத்தைத் தேடிக்கொண்டு வருவதுபோல், மனித இயல்புகளினிடையே பிரபஞ்ச ஸாகரத்தில் நுழைந்து, ஆழ்ந்த தத்துவங்களை மேலே கொண்டுவந்து காண்பிப்பதுதான் கலைஞன் செய்ய வேண்டிய தொண்டு. பிரகிருதியை அதற்காக விடவே கூடாது. கலை தன் காலை ஊன்றும் இடம், கண்ணின் எதிரிலுள்ள நேரான காட்சி என்பதில் ஐயமில்லை. ஆனால் ஆகாயத்தையும் தனது கற்பனையினால் கலை எட்ட முடியாதென்று யாரால் கூற இயலும்? கலையும் வாழ்க்கையும் சுகம்பெறுவது சமயமென்னும் மணப் பந்தலில் தான். பரம்பொருளை நினையாத எண்ணங்கள் எவ்வளவு தான் உயர்ந்ததாயினும், காலதேச வர்த்தமானங்களுக்கு உட்பட்டவைகளே. ஆனால் சமய மணம் நிரம்பிய கலை மலர்ச்சியும், காவிய மகிழ்ச்சியும், பேரின்ப சுகத்திற்குச் சமமானவை. நிலையுள்ளதை நினைப்பதாலேயே நிலை பெற வேண்டிய அம்சங்களை அவை உள்ளே வைத்துள்ளன போலும்.

"எல்லாம் அநித்தியமென்று தெரிந்துகொண்ட கவிஞர், கேவலம் வேதாந்தியாகி யிருப்பதைவிட்டு, இயற்கையிலுள்ள அழகிய விஷயங்களில் ஈடுபடுவானேன்?" என்று கேட்கத் தோன்றும். வாஸ்தவம். ஆனால் அழகைக் கடவுளின் தன்மையென நினைத்து வியப்பதொன்று, இந்திரிய சுகங்களை மட்டும் பருகுவதென்பது மற்றொன்று. இடையே இரண்டிற்குமுள்ள வித்தியாசம் மிகவும் லேசானது. "என்னையே பார்ப்பதால் அல்லவா ஒளிமயமான உன்னிடமும் பல நிறம் கொண்ட என் நிழலைக் காண்கின்றேன்! இதுவும் உன் மாயை அல்லவா?" என்பார் ஓர் இடத்தில் கவிஞர். எவ்வளவு தூரம் வஸ்துக்களையும், அவைகளில் தென்படும் பாஹ்ய அம்சங்களையும், உள்ளே பார்த்துணர வேண்டிய பரமாத்ம ஸ்வரூபத்தையும் நினைந்து இவர் பேசியுள்ளார்

என்பது வேதாந்த சாஸ்திரத்தை நன்கு பரிசீலனை செய்தவர்களே புரிந்து நமக்கு ஓதுவார்கள்.

டாகுரின் வைராக்கியம் இவருடைய கவிகளில் தெள்ளத் தெளியக் காண்கின்றது. சிலர் இவருடைய வெளி வேஷங்களைக் கண்டு சிற்றின்பங்களில் தோய்ந்த இதயம் என ஏமாந்து போனதுண்டு. கலைகள் இவ்விதமே ஒருவரை நினைக்க வைக்கின்றன. வெளித்தோற்றத்தினுல் கலையைக் காண முடியும். இல்லாவிட்டால் எதைக் கலைக்கு உருவமாய்க் காட்ட முடியும்? ஆனுல் ஒவ்வொரு கலையுமே இந்நாட்டில் சமய வழிபாட்டை ஆரம்பம் முதல் உச்சிவரையில் வைத்துள்ளது. சங்கீதம், சிற்பம், நாட்டியம், சித்திரம், காவியம் எல்லாம் நிலைத்த பரமனையே பாடித் தேடி, ஆடிக் கூவி அழைக்கின்றன. டாகுரும் அத்திசையேதான் தம் கற்பனைக் கடல் அலைகளையும் மடிந்துவிழச் செய்துள்ளார்.

# 7. புதுமை காட்டிய வழி

டாகுர் வசித்த காலம் நேற்றுவரையுள்ளது. விஞ்ஞான வெள்ளம் அடித்து வந்த எத்தனையோ அதிசயங்களை இவர் கண்கூடாக நேரில் கண்டார். மேலை நாட்டு நாகரிகத்தை முழுவதும் அனுபவியாதவருமல்ல. ஆனுல் தம்முடைய கலைச் சிருஷ்டிகளில் எவை மேலை நாட்டின் மரபைப் பின் பற்றுவது, எவை சொந்த நாட்டுப் புராதன சுகத்தை நினைப்பு மூட்டுவது என்றெல்லாம் மனத்தினுள்ளே வகுத்துக் கொண்டார் போலும். இல்லாவிட்டால் இந்நாட்டு இலக்கியங்களில் சொல்லப்படாத நவீன சிருஷ்டிகளையும், புதுமையான கட்டுக் கோப்புக்களுடன் உருவாகும் சிறு கதைகளையும் இவர் தாமும் ஆர்வத்துடனே செய்து வெற்றிக் கொடியையும் நாட்டுவாரா?

தம்மை அறியத் தம்முடைய வாழ்க்கை வரலாறுகளில் நுழைந்து பார்க்க வேண்டாம் என்று கவிஞர்

கூறியதாகச் சொன்னேம். ஆயினும் கவிதையைப் பற்றிய வரையில்தான் அவ்வுண்மை நிலைக்கும். மற்றப்படி சிறு கதை, நாவல், இவைகளில் இவருடைய வாழ்க்கையின் அனுபவங்களும், மனம் ஆராய்ந்து சொன்ன தத்துவங்களும் சிதறிக் கிடக்கின்றன. சிலருக்கு நவீனம், சிறு கதைகள் எல்லாமே கற்பனையினுல் ஆக்கப் பெற்றுல்தான் சிறப்பாக விளங்கும் என்று தோன்றி விடும். அவரவர் வாழ்க்கை அனுபவங்களை எங்காகிலும் வைத்து அமைப்பதாயின் அவை உயர்ந்ததாக ஆக மாட்டா என்று கூறுவார்கள். இது வாஸ்தவமா என்று கவனிப்போம். முதலில் கதையின் நிகழ்ச்சிகள் கற்பனையினுல்தான் அழகு பெறும் என்பது உண்மை. ஆனல், அக்கற்பனை ஆதாரம் பெற ஒரு வாழ்க்கை அனுபவத்தையோ அல்லது கடந்த மன நிலையையோ எடுத்துக்கொள்வதில் தீங்கில்லை. கலைக்குக் கேட்டை ஒரு நாளும் அது விளைவிக்காது. சாதாரணமாய், எழுத்தாளர்களை எடுத்துக் கொண்டால், அவர்களுடைய முதல் புஸ்தகங்களில் உள்ள கதைகள் தோறும் சொந்த அனுபவங்களின் பயனே அதிகமாய்த் தோன்றும். சில அசௌகரியங்கள் இவ்வித முயற்சியில் இருப்பினும், அனுபவத்திற்கும் சுபாவத்திற்கும் ஒட்டிய அம்சங்கள் சிறு தோஷங்களையும் மறைத்து நிற்கும் என்பதில் ஐய மில்லை. உலகத்திலுள்ள உயர்ந்த கதாசிரியர்களின் அரிய நவீனங்களை யெல்லாம் நோக்கின், மேலே குறித்த அம்சம் பூர்ணமாய்க் காணப் படும். விக்டர் ஹியூகோ, டிக்கென்ஸ், டால்ஸ்டாய் முதலிய பேராசிரியர்கள் எழுதாத உயர்தர நவீனங்களே உலகில் இல்லை என்லாம். ஆனல் அவர்களில் ஒவ்வொருவரும், தத்தம் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களையாவது, மன எழுச்சிகளையாவது, அல்லது நிகழ்ச்சிகளையாவது வைத்தே சுவாரஸ்யமான புஸ்தகங்களை எழுதி யுள்ளார்கள். ரவீந்திரரும் மேலே குறித்தவைகளுக்கு விலக்கானவரல்ல. ஏனெனில் இவரே தமக்கு ஏற்பட்ட வாழ்க்கை அனுபவங்களைக் கதை வடிவில் உருவாக்கியதாக 'ஜீவனஸ்மிருதி' என்னும் சுய சரித்திர வரலாற்றில் கூறி யுள்ளார். உதாரணமாக,

காபூலிகளைப் பற்றிக் கவிஞர், தம் சிறு பிராயத்தில் தந்தையிடம் வேலை பார்த்த ஆட்களின் ஞாபகத்தினுல் எழுதியிருக்கிருர். 'காபூலிவாலா' என்ற கதையில் வரும் சிறு பெண் கற்பனையில் மட்டுமே உண்டானவள். காபூலிவாலாவின் அருமைப் பெண் தூர தேசத்தில் இருந்ததை அவன் தெரிவிக்கும் முறை, உலக இயல்பை யறிந்து அதிலுள்ள சோக அம்சத்தை ரஸமாக்கிக் கவிஞர் நமக்குத் தரும் பொழுது விளங்குகிறது.

அண்ணனுடன் ஆமதாபாத்தில் தாம் வசித்த விடுதியை நினைக்க நினைக்க, அதனை ஒரு கதைக்குக் காலாக ஆக்கவே இவருக்கு அவா ஏற்பட்டது. ஏற்பட்ட உற்சாகத்தை வீணுக்காமல் சிறு கதையொன்றில் புகுத்திவிட்டார். ஆனால், டாகூர் கவிதைக் காதலியுடன் எங்கும் செல்லுபவரானதால், பசையற்ற நிகழ்ச்சிகளையும் பிறர் இன்புறத் தனிச் சோபையுடன் கொடுப்பார். 'கிரிபாலா' என்ற கதையில், பக்கங்களைத் திறக்கும்பொழுதே பெண் உருவம் களிப்பின் அவதாரமாக மனக் கண்ணில் படுகிறது. கவிதை வசன நடையிலும் உடையிலும் நம்மை ஏமாற்றப் பார்க்கிறது. சிறு கதைகளின் சிகரம்போல் சொல்லக்கூடியது 'திருஷ்டிதானம்' என்னும் கதையே என நினைப்பவர்களுமிருக்கிருர்கள். கதையின் நடைக்குப் புது அழகு கொடுப்பது 'நான்' என்று ஆரம்பிக்கும் வரலாறு அன்றே? இன்னும், குருடியாய் இருந்த கதாநாயகி, தன் செவிகள் கேட்டவைகளை அவ்விதமே நமக்குச் சொல்லும் விதம் ஆசிரியரின் சக்தியைப் பன் மடங்கு பாராட்டச் செய்கின்றது. சோகமும் பரிகாசமும் கலந்து கலந்து கதையின் உட்கருத்தை அலங்கரிக்கின்றன. ஆனால், கதையை முடிக்கையில் நம்மையும் மீறி இந்தத் தேசத்தின் தனி உயர்வு எனக் கொண்டாடத் தூண்டும் முக்கியக் கருத்து ஒன்று இதில் விளங்குகிறது. புறக் கண்ணை இழந்தவளுக்கு அறிவுக் கண் நாளடைவில் வளர்வதைக் கவிஞராயிருப்பதால் சிறு கதையில் விஷயமாக வைக்க முடிகிறது. இக்கதையை ஆங்கில மொழிபெயர்ப்பில்

நம்மால் அனுபவிக்க முடிந்தபோதிலும், ஒரே ஒரு சந்தேகம் ஏற்படுகிறது: எத்தனை மேலை நாட்டார்களுக்கு இதன் அற்புத அமைப்பைக் கண்டு பிரமிப்பு ஏற்படக் கூடும்? எத்தனை பேர்கள் இங்கும் இம்மாதிரியுள்ள கதையை உண்மையில் ரசிப்பார்கள்? கதை எழுதுவது சுலபமாகிக் கொண்டிருப்பதைத் தினம் பத்திரிகைகளில் காண்கிறோம். டாகூர் எழுதிய 'திருஷ்டிதானம்' என்பதற்குச் சமமாக இலக்கியங்களிலேயே வேறு இடங்களில் காண முடியுமா என்பதுதான் கேள்வி.

சிறு கதை எழுதுவதே சிரமம் என்பார்கள். கட்டுக் கோப்பும், கருத்தும் அமைவது முதலில் பிரம்மப் பிரயத்தினம். அதிலும் கவிதையைக் கொண்டு உருவாகும் சிறு கதையை உலகிற்குத் தருவது எல்லோராலும் முடியாது. டாகூருடைய சிறு கதைகளை வாசித்தவர்கள் அவருடைய கலைச் சிருஷ்டிகளிலேயே அவைதாம் சிறந்தவை என்று கூட மிகைப் படுத்துவார்கள். கவனித்தால் எல்லாத் துறைகளிலுமே வெற்றிகரமாய் எழுதியவருக்குப் புகழைப் பிரித்துத் தருவது என்பது சுலபமல்ல. சிலருக்குக் கதையாக உள்ளவைகளில் சுவாரஸ்யம். காரணம் மற்றவைகளில் தங்கள் புத்தியைச் சற்று ஆயாசப்படுத்த வேண்டி வருவதுதான். ஆயினும் டாகூர் தம்முடைய கதைகளில் புத்திக்கு வேலை வைப்பதில்லை என்று சொல்வதற்கில்லை. 'பாசமோசனம்' என்ற கதையில், ஒரு பெண், காதலன் ஒருவனைத் தான் அடையத் தன்னை நேசித்த மற்றொருவனைப் பலி வாங்கியதையும், அதை அறிந்த பிறகு அவளை அடைந்த வாலிபனுக்கு அவளை வெறுப்பதற்கே மனம் இடம் கொடுத்ததையும் காண்கின்றோம். கதை முடியும் விதமும் நம்மை யோசனையில் ஆழ்த்திவிட்டு, மனத்தில் முடிவடையாத வேதனையைக் கிளப்பிவிடுகிறது. மந்திரக் கோலை டாகூர் சுழற்றி விடுகிறார். நாம் இவர் சொன்னபடியே ஆடுகிறோம். நமக்கே அப்படி இவர் இஷ்டம் போல் ஏன் நடந்து கொண்டோம் என்று பிற்பாடும் புரிவதில்லை.

பெரிய கதைகளுக்கு வருவோம். ஒன்றைவிட ஒன்று பிரபலமான கதைகள்தாம் இவருடையவை. பங்கிம் சந்திரர் வங்காள பாஷையைத் தனிச் சிறப்புடன் செய்தற்கு அவருடைய சரித்திர சம்பந்தமான நவீனங்கள் தான் காரணம் என்று கூறியுள்ளோம். ரவீந்திரர் செய்தவை சமூக வாழ்க்கையை வைத்து உண்டாக்கிய கதைகளே. 'கோரா' என்ற அரிய நவீனம் வாசிப்போர் உள்ளங்களைக் கதையில் வரும் பற்பல பாத்திரங்களின் வேறுபட்ட தன்மைகளில் லயிக்கச் செய்யும். தேசீய இயக்கமும், புரட்சிகளும் சேர்ந்து கதையைத் தற்கால அனுபவங்களை நினைப்பு மூட்டும் இனத்துடன் சேர்த்து விடுகின்றன. கடைசி வரையில் கோரா ஆங்கிலேயர்களின் வயிற்றில் பிறந்தவன் என்பதை வாசகர்களுக்குத் தெரிவிக்காமல் வைக்கும் சாமர்த்தியமும், கோராவின் அந்தரங்கத்தில் திடீரெனப் பாரத நாடு தன்னுடைய சொந்த நாடு அல்ல என்ற அதிர்ச்சி உண்டாவதும், சாமானியக் கதை எழுதுபவர்களின் வழியைப் பின் பற்றியன அல்ல. தாய் நாடென்னும் புத்துணர்ச்சியை நம்மிடையே வளர்க்க வழி காட்டியவர்கள் ஆங்கிலேயர்கள் என்பதில் என்ன சந்தேகம்? இக்கருத்து கோராவில் பூரணமாய் விளங்கும்.

இப்பொழுது 'குமுதினி' என்ற கதை தமிழில் வங்காளத்திலிருந்து நேரில் தர்ஜமா ஆக்கப்பெற்றுள்ளது. அதைத் தமிழ்நாட்டார் நன்ருய் அனுபவித்திருப்பார்கள். 'புயல்' என்பது வங்காளத்தில் 'நௌகாதூபி' எனப் பெயர் கொண்டது. ஒரு குடும்ப வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. ஸ்திரீபுமான்களின் சேர்க்கையில் ஒழுக்கமும் மரியாதையும் எவ்வளவு அவசியம் என்பதைக் காட்டு கிறது. கமலாவின் கற்பும், நளினக்ஷனுடைய அடக்கமான சுபாவமும் முதலிலிருந்தே நம்மை ஆட்கொள்ளுகின்றன. மேலே நாட்டு நாகரிகம் பெருகிய காலத்தில் இவ்விதக் கதையின் உற்பத்தியே ஒரு அதிசயமெனத்தான் சொல்ல வேண்டும். இன்னும் தமிழில் மொழி பெயர்க்கப்படாத இவருடைய கதைகளும் இருக்கின்றன. மூன்றே

பாத்திரங்களை வைத்தமைத்த அதிசயம் 'வீடும் உலகமும்' என்ற கதையில் தெளிவாகிறது. அவரவர் மனத்தினுள்ளே பெறும் அனுபவங்களையே சித்திரித்துக் காட்டி, கதையின் ஜோடனையில் சிறிதும் குறைவில்லாமல் செய்திருக்கிறார் ஆசிரியர்.

மடல் பெரிது தாழை என்பதற்கொப்ப நாவல்கள் ஒருவித உணர்ச்சியைக் கிளப்புகின்றன. ஆனால் மகிழ் இனிது கந்தம் என்பதைப்போல் சிறு கதை மிகவும் இனிதாய்த் தோன்றுகின்றது. ஒரு முக அசைப்பு, ஒரு கண்பார்வை, இவைபோதும் சிறு கதை வடிவம் கொள்ள. மொத்தத்தில் ஒன்று கூறாமல் நம்முடைய ஆராய்ச்சியை முடிப்பது நியாயமில்லை. ஆங்கில மொழிபெயர்ப்பில் டாகூருடைய கதைகள் சோபிப்பதைக் காட்டிலும், தமிழ் மொழியில் அழகாய் அவை அமைந்துள்ளன. வங்காள பாஷையிலுள்ள தாயினும், இந்திய தேசம் முழுவதிற்கும் பொதுவான பண்பாட்டின் சாராம்சமே கதைகளில் சிற்சில வேறுபாடுகளுடன் தோன்றுவதால், மற்ற இந்திய பாஷைகளில் நன்றாகக் கருத்துக்களைக் காண்பிக்க இயலும். அடுத்ததாக, டாகூரின் வங்காள பாஷையின் நேருக்கு நேர் பேசும் வன்மை மொழி பெயர்ப்புக்கு மிக்க உதவியாகின்றது.

நாடகங்களைச் சிறு சிறு துணுக்குக்களாகவும், அழகிய சம்பாஷணைகளாகவும் அமைத்துக் காட்டுவதில் ரவீந்திரருக்குப் பரம திருப்தி. 'பிராயச்சித்தம்' 'முக்ததாரா' போன்ற நாடகங்கள் தற்காலம் நம்முடைய நாட்டின் பற்பல துர்க்கதிகளை வைத்துப் புதிய விதங்களில் எழுதப்பட்டுள்ளன. நாடகத்தின் உட்கருத்துத்தான் விசேஷம். பேச்சில் ஹாஸ்யமும், விளையாட்டும், மற்ற அழகுகளும் தென்படுவதால் வாசகர்கள் காட்சிகளைப் பின்பற்றுவதில் சிரமமிருப்பதில்லை.

'பிராயச்சித்தம்' என்ற நாடகத்தில், அரசன் கேட்ட வரியை ஜனங்கள் கொடுப்பது அநீதி என்பதே உபதேசிக்கப்படுகிறது. ஜனங்களை வரி கொடாமல்

செய்பவர் ஒரு சன்னியாசி. அவருடைய தைரியமும், கவனிக்கக் கவனிக்கப் புலப்படும் நியாய வாதங்களுமே, எதிர்க்க முடியாத அரசாங்கங்களையும் சற்று நிதானிக்க வைக்கும் விதம் இருக்கின்றன. ஒரு காட்சியில் அரசனும் தனஞ்சயன் என்ற சன்னியாசியும் சம்பாஷிக்கிறார்கள். கவனிப்போம் அவர்கள் பேச்சை :

அரசன் :—துறவியே, இதோ பார், பைத்தியம் மாதிரி வேஷம்போடாதே! நான் ஏமாற மாட்டேன். நடக்க வேண்டியதற்கு உடனே வருவோம். மாதவபுரத்து ஜனங்கள் வரி செலுத்தாமல் தொந்தரவு கொடுக்கிறார்களே! ஏன்? நீங்கள் தரப் போகிறீர்களா இல்லையா?

தனஞ் :—இல்லை, மஹாராஜா, நாங்கள் தரமாட்டோம்.

அரசன் :—கொடுக்க முடியாதா? என்ன அயோக்கியத்தனம்!

தனஞ் :—உமக்கு உரியதாக இல்லாததை நாங்கள் உம்மிடம் சேர்க்க மாட்டோம்.

அரசன் :—எனக்கு உரியதில்லையா?

தனஞ் :—எங்கள் பசியைப் போக்கும் உணவை நீர் தரவில்லையே! உணவைத் தந்தவன் உயிரையும் தந்தவனன்றோ! நாங்கள் உம்மிடம் எவ்விதம் இதைச் சேர்ப்போம்!

அரசன் :—நீர்தானா வரி செலுத்தாமல் செய்தவர்?

தனஞ் :—ஆம், மஹாராஜா, நானேதான் செய்தேன். அவர்கள் முழுமூடர்கள், புத்தியற்றவர்கள். வரி வசூல் செய்பவனைக் கண்டு பயந்து, சர்வத்தையும் கொடுத்து விடப் பார்க்கிறார்கள். நான் அவர்களிடம், "வேண்டாம், நிறுத்துங்கள், இனிச் செய்யாதேயுங்கள் இம்மாதிரி; உங்களுக்கு உயிரளித்தவனுக்கு மட்டும் உயிரை அர்ப்பணம் செய்யுங்கள். உங்கள் அரசனைக் கொலைகாரன் என்ற வீண் அபவாதத்திற்கு ஆளாக்காதீர்கள்" என்றேன்.

மஹாத்மா நடத்திய வரி கொடா இயக்கத்திற்கு வெகுநாட்கள் முன்னமேயே டாகுரும் இவ்வழியைக் குறித்திருக்கிறார். இவ்விருவர்களின் தேசசேவை வெவ்வேறு மார்க்கங்களில் சென்றிருப்பினும், ஒரே விதக் கொள்கைகளைப் பல இடங்களில் கடைப்பிடித் திருப்பதையும் காண்கிறோம்.

'முக்ததாரா' என்பது, தற்கால வெள்ளைக்காரர்கள் ஆட்சியில் விடுதலை நமக்கு அளிக்காதிருப்பதையே மறை பொருளாக வைத்து அமைத்த நாடகம். நீர்வீழ்ச்சியின் ஓட்டத்தை அணையிட்டு அரசன் தேக்குகிறான். அதனால் மலை அடிவாரத்திலுள்ள ஜனங்களுக்குச் சிரமங்கள் பல ஏற்படுகின்றன. அரசனுடைய மூளை உயர்ந்த யந்திர மொன்றைச் சிருஷ்டிக்கச் செய்து, ஓடும் ஜலத்தை அணை யிட்ட பெருமை பிரமாதப்படுகிறது. அரச குமாரன் மட்டும் தகப்பனை எதிர்க்கிறான். அவனுடைய உண்மைச் சுபாவம் அணையை உடைக்க வழியைத் தேடுகிறது. பிறகு அணை உடைந்து ஜலமெல்லாம் பிரவாகமாய் அடித்துக் கொண்டு ஓடி, கீழ் நிலங்களை முழுக வைக்கின்றன. நாடகத்தில் வரும் பாத்திரங்களும் நிகழ்ச்சிகளின் அமைப்பும் வெகு நேர்த்தியாக உள்ளவை.

டாகூர் மனம் செல்லாத விஷயங்களே இல்லை. அரசியல், விஞ்ஞானம், சரித்திரம், ரசாயனம், பௌதிகம் போன்றவைகளில் அவருடைய புத்திப் பிரவேசம் சுலபமாய் உள்ளது. உவமைகளின் மூலம் தம்முடைய கல்வி ஞானங்களை யெல்லாம் புகட்டிவிடுவார். காளிதாஸர் இவைகளுக்கெல்லாம் வழி காட்டியாய் உள்ளவர். அவருடைய அரிய கிரந்தங்களில், அவர் நாளில் தோன்றிய சாஸ்திரங்களின் அறிவும், விஷய பரிசீலனைகளும் நிறைந்திருப்பதைக் காணலாம். வேண்டு மென்று தாம் கற்ற வித்தைகளைக் காட்டக் கிளம்ப மாட்டார் அவர். டாகுரும் அவ்விதமே உவமைகளில் விஞ்ஞான அறிவை, அல்லது பௌதிக ஞானத்தை, அல்லது இன்னும் இம்மாதிரியுள்ள பற்பல விஷய

பரிசயத்தைக் காட்டுவார். மேலும் வான சாஸ்திரம் போன்றவைகளில் இவருக்கு என்றுமே பெரிய அவா. தந்தை தமக்கு இள வயசில் ஆகாசத்தைக் காட்டிக் கணக்கற்ற சுடர்களின் தன்மைகளை விவரித்துள்ளதை மறந்தவரே அல்ல. அன்று முதல் இரவில் ஜோதி மண்டலங்களை ஆராய்ந்து பரமனுடைய மகிமையை உணர்ந்து பரவசமடைவார். அதனுடன் நில்லாமல், இறப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் 'விச்வபரிசய'என்ற அழகிய நூலை விஞ்ஞானப் பயிற்சிக்கென எழுதிப் பிரசுரித்தார். அதை வாசித்தவர்கள் இவருடைய பல துறைப்பட்ட அறிவைப் பாராட்டாமல் இருப்பதில்லை.

கதைக்கும், கட்டுரைக்கும், காவியத்திற்கும், நாடகத்திற்கும், இவருடைய இலக்கிய நிதிகளில் பஞ்சமில்லை. சம்பாஷணை ரூபத்தில் புராணங்களிலிருந்து எவ்வளவோ சம்பவங்களை வைத்து நம்மை இன்புறச் செய்திருக்கிறார். 'கசதேவயானி' என்பது காதல், பொறுமை, ஞானம், தியாகம், இவைகளை ஒரு பேச்சுத் தொடரிலேயே வெளியாக்கச் சாதனமாயுள்ள சம்பாஷணை. 'குந்தியும் கர்ணனும்' என்பது பாரதக் கதைகளில் மனத்தை நன்கு கிளறக்கூடிய கருத்துக்கள் படைத்தது. உண்மையில் குந்தி கர்ணனை மகன் என மறந்ததைக் கர்ணன் எடுத்துக் காட்டும் காம்பீர்யம் வியக்கத் தக்கதாய் அமைந்திருக்கிறது. 'துரியோதனனும் திருதராஷ்டிரனும்' என்ற சம்பாஷணை வெகு சுவாரஸ்யமாய்ப் போகிறது. நடுவில் ஓர் இடத்தில் துரியோதனன் தந்தையிடம் சொல்லுவான் : "அரசர்களுக்குப் பொறுமையும் அவசியம்.........வானத்தில் விண்மீன்கள் கூட்டங் கூட்டமாய்ப் பிரகாசிக்கின்றன ; ஆனால் சந்திர சூரியர்கள் என்றைக்காவது தனித்திருப்பதைத் தவிர வேறு விதங்களில் தோன்றுகிறார்களா ? வனத்தில் உயர்ந்தோங்கிய மரங்களே கிளைகளை ஒன்றோடொன்று மாட்டிக் கொண்டு சண்டையிடுகின்றன ; மண்ணில் கிளம்பும் புற்கள் ஒன்றாய்ச் சேர்ந்து பூமியில் சாய்வதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?" துரியோதனன் தந்தை

யிடம் பாண்டவர்களுடன், அர்ச்சுனன் தான், நட்புடன் இருப்பது உயர்ந்த அரசாட்சித் தர்மத்திற்கே முரணான காரியம் எனக் காண்பிக்கிறான் போலும்.

இன்னும் இவருடைய எத்தனையோ நாடகங்களைப் பற்றியும் கூறிக்கொண்டே போகலாம். ஆனால் கிடைத்திருக்கும் அவகாசத்தையும், முக்கியமாயுள்ளவைகளில் அவரவர்க்குப் பட்டதை எடுத்துக் காட்டுவது ஒன்றுதான் நியாயமென்பதையும் முன்னிட்டு, அதிகமாக டாகுருடைய சிருஷ்டிகளைப்பற்றித் தனித் தனியாய்க் கூற வேண்டியதில்லை.

## 8. அஸ்தமனம்

அந்திய காலத்தில் கவிஞர்கள் முதிர்ந்த ஞானத்தைப் பெறுகிறார்கள் என்பது மேலைநாட்டார்களின் இலக்கிய ஆராய்ச்சிகளில் ஒன்று. நம் நாட்டிலும், இப்பொழுது இதை ஒரு சிறந்த கருத்தாக நம்பி ஆசிரியருடைய வய்சுக் கிரமத்தில் இவருடைய கலைச் சிருஷ்டிகளைப் பாகுபாடு செய்து விமர்சனங்களைச் செய்கிறார்கள். ஒன்று நிச்சயம். சிறுவயசில் எழுதியவைகள் பார்த்தவுடனேயே விளங்கிவிடும். மேலும் அம்மாதிரிச் சிறுவய்சு எழுத்துக்களை அச்சில் வைக்கவும் கவிஞர்களோ, ஆசிரியர்களோ ஒப்ப மாட்டார்கள். ஆனால் அவர்களுடைய அனுமதி பெறாமல் நூல்களைப் பிற்காலங்களில் பிரசுரிப்பதையும் பார்க்கிறோம். டாகுருக்கும் இம்மாதிரித் துர்க் கதி ஏற்பட்டது. இவர் சிறுபிராயத்தில் எழுதி அச்சில் ஏறாமல் வைத்திருந்த சிலவற்றை இப்பொழுது வெளியிட்டுள்ளார்கள் இவருடைய நண்பர்கள். மற்றப்படி டாகுருடைய சிறந்த நூல்களை வயசுக் கிரமத்தில் வைத்துப் பார்த்து, அவைகளிலுள்ள கருத்துக்களில் ஞானத்தின் முதிர்ச்சியைப் படிப் படியாய்க் காட்டுவது சாத்தியமில்லை, அவசியமுமில்லை.

நம் நாட்டின் இலக்கிய மரபில் இவைகளைப் போன்ற ஆராய்ச்சி இருந்ததாக அறிவதற்கு இடமில்லை. ஒன்று கூறலாம். நம்மவர்கள் என்றுமே சரித்திர உணர்ச்சி அற்றவர்கள்; ஆகையால், முதலில் ஆசிரியர்களுடைய எழுத்துக்களைத் தேதிவாரியாக வைக்கவே அறிந்து கொள்ளவில்லை எனலாம். அது போகட்டும். தெரியாத விஷயங்களை அநாவசியமாய்ச் சிலர் தெரிந்து கொண்டதாகச் சொல்வதைக் கவனிப்போம். காளிதாஸரைப் பற்றிய ஆராய்ச்சிகளில் ஒன்று, அவர் 'மாளவிகாக்னி மித்திரம்' என்ற நாடகத்தை முதலில் எழுதியிருக்கலாம் என்பது. ஏனெனில், அவருடைய சாகுந்தளத்தைப் போல் முதிர்ந்த அறிவை அந்நாடகம் உணர்த்தவில்லையாம். கவனித்தால், இம்மாதிரி இருப்பதற்கு ஆதாரமே இல்லை என்று தெரியவரும். ஏனெனில் 'மாளவிகாக்னிமித்திரம்' புது முறையில் தயாரிக்கப்பட்டதென நம்புவதற்கு அதன் ஆரம்பத்திலேயே கவிஞர் கூறியுள்ள வாக்கியங்கள் உபயோகப்படுகின்றன. அப்படிக்கில்லாவிட்டாலும் முதிர்ந்த நாட்டிய சாஸ்திர அறிவை அந்நாடகத்தில் காட்டிய காளிதாஸர் மற்றத் துறைகளில் மட்டும் குறைந்த அனுபவம் பெற்றிருக்க வேண்டுமென்பதற்குத் திருப்திகரமான அத்தாட்சிகள் இல்லை.

மேலும், ஒருவருக்கு வயசுக் கிரமத்தில்தான் உயர்ந்த ஞானம் முதிர்ச்சி அடைவதாக ஏன் வைத்துக் கொள்ள வேண்டும்? அறிவாளிகளில், அதிலும் சிறந்தவர்களில், சிலருடைய சிறு வயசிலேயே பிரமாதமான அறிவுப் புலன்களைக் கண்டுள்ளோம் அல்லவா? ஆதி சங்கராசாரியார் முப்பத்திரண்டு வயசிற்குள் உலகத்தைத் தம் தெளிவான புத்தியினால் பிரமிக்க அடித்துவிட்டார். அவரை யுக்திகளிலோ, தெய்விகச் சக்திகளிலோ ஜயித்தவர்களே உலகில் இல்லை. சமீபத்தில் ஐம்பது ஆண்டுகளுக்குள் உயிருடன் இருந்த விவேகானந்தர் நாற்பது வயசிற்குள் தெரிந்துகொண்டிருந்த சாஸ்திரங்களின் பரிசயமும், வேதாந்த விளக்கங்களின் நுண்ணிய விஷயமும்,

உலக இயல்புகளின் தத்துவமும் நம்பத் தக்கதாக இல்லை. பின் எதற்காக எழுபதாம் வயசில் ஒருவர் எழுதியதால் மட்டுமே முதிர்ந்த ஞானம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று சொல்லவேண்டும்?

காளிதாஸருடைய காவிய நாடகங்கள் எந்த ரீதியில் எழுதப்பட்டிருந்தாலும் நாம் சுவைப்பது என்னவோ ஒரே முறையில்தான். தனித்தனி ரசங்களை ஒவ்வொன்றிலும் ஊட்டும் கவிஞரை எதற்கு அவர் இயற்றியவைகளில் ஒன்றோடொன்று ஒப்பிட்டு முதிர்ந்த ஞானத்தை ஆராய்வதாகக் கொள்ளவேண்டும்? மேக ஸந்தேசம் எழுதியவர் ரகு வம்சத்தை எந்த வயசில் எழுதியிருக்கக் கூடும்? ஒருகால் மற்றவைகளுக்கு அப்பால்தான் ரகு வம்சத்தை எழுதினரோ? என்ன என்ன கேள்விகள் கேட்கலாமோ, அவைகளைக் கேட்கத் தெரிந்து கொள்வதில் ஒருவித ஆச்சரியமுமில்லை. ஆனால் கேள்வி கேட்பதற்கு முன் பதில் கிடைப்பதனால் லாபம் ஏதேனும் உண்டா அல்லது அவசியமா, என்று சிந்திப்பதுதான் முதற் கடமை.

சிலர், டாகூரைப்பற்றிய வரையில், இவர் எதற்காக இவ்வளவு நிறைய எழுதவேண்டும் என்று கேட்கிறார்கள். குறிப்பாக மேலைநாட்டுஅறிஞர்களில் ஒருவர், டாகூருடைய இலக்கியங்களை விமர்சனம் செய்கையில், ஒருகால் ஆசிரியர் இவருடைய பிரபலமான சிற்சில காவிய நாடகங்களுக்கு இடையில் எழுதியவைகளை எழுதிவிராவிட்டால், இன்னும் சற்று இவருடைய கவித்திறனை நம்மால் பாராட்டுவதற்குச் சௌகரியமாயிருந்திருக்கும் என்றார். அதாவது, இவர் நினைப்பது: நம்முடைய அறிவிற்கு டாகூருடைய எழுத்து வளர்ச்சி உச்சியை எட்ட வேண்டுமாயின், இவரே சிற்சில புஸ்தகங்களை இவருடைய உயர்தரக் காவியங்களுக்கு இடையே பிரசுரியாதிருத்தல் அவசியமாம். இப்படியும் ஒரு விமர்சனம் இருக்கலாமா என்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால், ஆழ்ந்து பார்ப்பவர்களுக்கு உள்ளடங்கிய கருத்து

விளங்காமல் இராது. விமர்சகர் வேண்டுவது, தமக்கு உதவியாக எழுத்தாளர் சில விதங்களில் சௌகரியத்தை அளித்திருப்பின், அவருக்கும் அதனுல் நன்மை வாய்த்திருக்கும் என்பதே.

சிலருக்கு மஹாபாரதத்திலுள்ள உபகதைகள் எவ்வளவு சுவாரஸ்யம் அளிப்பதாயினும், வாசிப்பதற்குப் புஸ்தகத்தை மிகவும் நீண்டதாய்ச் செய்வதினுல், பாரதக் கதையைச் செய்த வியாஸர் இவ்வளவையும் முதலில் செய்திருக்க முடியாது, பிற்காலங்களில் அநேகச் செருகு கவிகளும், சிறுகதைகளும் புகுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பார்கள். கவிகளை மட்டும் தட்டிப்பார்த்து எவை செல்லாத நாணயம் என்று அறிந்து கூறக்கூடிய மேதாவிகளை விட்டுவிடுவோம். அவர்கள் தங்கள் சொந்த அறிவையே மரபில் வந்ததைக் காட்டிலும் உயர்ந்ததாகக் கருதும் உத்தமர்கள். மற்றப்படி வாசிப்பதற்கு ஆயாசத்தைத் தருவதால் ஒருகால் வியாஸர் எல்லாவற்றையும் தாமே செய்திருக்க முடியாதோ என்று சந்தேகிக்கும் அறிவாளிகளுக்கு ஒன்றை மட்டும் நாம் சொல்லவேண்டும். அதாவது: எது வரையில் அவர்கள் வியாஸருடைய உண்மையான யோக்கியதை சென்றிருக்கும் என்று எண்ணுகிறுர்களோ, அந்த எல்லை எவ்வித அளவுகோலைக் கொண்டு கண்டறியப்பட்டது என்ற கேள்வியேதான். விமர்சனம் செய்பவருக்குச் சொந்தத்தில் முடியும், முடியாதென்று தீர்மானிக்கும் ஆற்றலைக்கொண்டு சொல்வதுதான் சாத்தியம் என முடிவு கட்ட வேண்டும். ஆனுல் ஒன்றை மட்டும் மறக்கலாகாது. ஒவ்வொருவரும் தாங்களே கலைப் பைத்தியம் படைத்தவர்களாக இருந்தால், இவ்வாறெல்லாம் சொல்வதற்கு முற்படமாட்டார்கள். கலைப் பயிற்சி செய்பவர்களைக் கவனித்தாலும் இவ்விஷயம் விளங்கும்; அவர்கள் பிறர் எடுத்துக் கொள்ளும் அவகாசத்தைக் காட்டிலும் எவ்வளவோ அதிகம் கலையின் அனுபவத்தில் எடுத்துக்கொண்டு அதில் திளைத்திருப்பார்கள். காலவரை என்று ஒன்றுண்டு

என்றுகூட அவர்களுக்குத் தோன்றுவது இல்லையோ என்று நமக்குக் கவலை பாதிப்பது சகஜம்.

ரவீந்திரர் இம்மாதிரியான விமர்சகர்களை நினைந்து அவர்களுக்குப் புத்தி புகட்டும் விதத்தில் ஒரு இயற்கை விநோதத்தைக் காண்பிப்பார். குயில் கூவுவது சிறந்த உதாரணம் போலும். சாமானிய மனிதர்களுக்கு அல்ல; கவிஞர்களுக்கு மட்டுமேதான். ஆனால் சாமானியர்கள் தான் இப்பொழுது அதைக் கவனிக்க வேண்டும். டாகூர் கேட்கிறார்: "குயில் மாத்திரம் தன் சுய ஞாபகமே இல்லாமல் கூவுகின்றது. எதற்காகக் களைப்பின்றிக் கூவுகின்றது, என்று நம்மால் அறிய முடியவில்லை...... ஆனால் அதற்கும் அதனால் ஒரு பிரயோஜனம் இருக்க வேண்டும். கிட்டாத எண்ணமாயிருப்பதால்தான் அது விடாமல் கூவுகின்றது. ஆனால், ஒரு சமயங்கூட மனச் சோர்வை அடைந்ததாகவே தெரியவில்லை. 'கூக்கூ' என்று உச்ச ஸ்வரத்தில் அழகாகவே எப்பொழுதும் பாடுகின்றது. என்னதான் அதன் எண்ணமோ?"

பொருத்தமான உதாரணம்: ஏனெனில் கவிஞனைக் குயிலுக்குத்தான் ஒப்பிடவேண்டும். ஆனால் குயிலையே கேட்காத காதுகளுக்கு ஒன்றுமே விளங்காது. அவர்கள் கவியையும் அனுபவித்திருக்க மாட்டார்கள். டாகூர் கேட்டிருக்கும் கேள்வியே பதிலுமாகிறது, மேலே நாம் விவாதித்த விஷயத்திற்கு. ரவீந்திரர் இவ்வளவு நிறைய எழுதுவானேன் என்றால், இவருக்கே தெரியாது. இன்றுள்ள மற்ற எழுத்தாளர்களை வைத்துப் பார்க்கையில் அல்லவா இவர் எழுதியவை அதிகமாய்த் தோன்றுகிறது? கவிஞனை எழுதாதிருக்கச் செய்வது, பிராணவாயுவை அடிக்கடி உட்கொள்ள வேண்டாம் என்று பிராணிகளைக் கட்டுப்படுத்துவதுபோல்தான் இருக்கும். விமர்சகர்களுக்காகக் கவிஞர் தம் பாட்டுக்களை இயற்றவில்லை. புரந்தர தாஸர் நான்கு லக்ஷங்களுக்குமேல் கர்நாடகக் கீர்த்தனங்கள் செய்துள்ளார் என்றால், அச்சில் பாட்டுக்களைப் பார்த்தால் நாம் நம்பப் பின்வாங்கு

கிறோம். தியாகையர் மூவாயிரம், நாலாயிரம் பெரிய கீர்த்தனங்கள் செய்துள்ளார் என்றாலும், அதைக் கண்டு இதே விதம்தான் எத்தனையோ நவீன ஆராய்ச்சி யாளர்கள் பின்வாங்குகிறார்கள். இவர்களுக்கு எதனால் பயம்? அதுதான் தெரியவில்லை. ஒன்றுதான் அவர்களால் சொல்ல முடியும். அதாவது, நேருக்கு நேர் தெரியாத இச் செய்திகளை மட்டும் நம்பலாகாது என்பதுதான். அவ் விதம் இருப்பின் ஒன்றையுமே நம்பக் கூடாது. அநேக ஆயிரம் கீர்த்தனங்கள் கட்டியிருப்பது சாத்திய மில்லை என்பதும் சரி இல்லை. அதைவிடக் கவிஞனுடைய அநாயாசமாய்ப் பாடும் பழக்கத்தை உணர்ந்தவர்கள், அவன் பாடும் நெறியில் எதை வேண்டுமானாலும் செய்யத் துணிவான் என்று ஒப்புவதே மேல். கணக்கில் அடங்கக்கூடிய எண்ணிக்கைகளைத் தாண்டுவது கவித் திரட்டுக்களில் சகஜம் என்பது நம் நாட்டு மரபில் வந்துள்ள கவிஞர்களைப் பற்றிய கதைகளுக்கு ஆதாரம். கவனிப்பவர்களுக்கு இவையே உண்மையைச் சொல்வதாகத் தோன்றும். ஆனால் கவனியாதவர்கள் தானே உலகில் அதிகம்! அவர்களுக்கு எதைப் பற்றியும் சரியான அபிப்பிராயம் இல்லாததால் உடனே மறுத்துக் கூறவே தோன்றுகிறது.

டாகூர் இறப்பதற்குள் செய்துள்ள பாட்டுக்கள் இன்னும் அநேகம் அச்சில் ஏறாமல் கிடக்கின்றன. இவருடைய சுவாசம் சிறிது சிறிதாக அடங்கும் வரையிலும்கூட இவருடைய கை நடுங்கிக்கொண்டே காகிதங்களின்மேல் பாட்டின் அடிகளைக் குறித்துக்கொண் டிருந்தன. ஏற்கெனவே இவருடைய நாடோடிக் கீதங்கள் வங்காள தேசத்தில் சர்வ ஜனங்களுக்கும் மிகவும் பரிசய மானவை. ஏனெனில் கிராமாந்தரங்களில் கட்டை வண்டிகளை ஓட்டுகிறவர்களும், நெல்லுக் குத்தும் பெண்களும், மற்றும் வழிப்போக்கர்களும் கூட, டாகூருடைய பாட்டுக்களைப் பாடிக் காற்றிலே மிதக்கச் செய்வார்கள். எவ்வளவு புண்ணியம் செய்தவர் கவி வாணர்? ஊரிலுள்ள சாமானிய ஜனங்களும், கீழ்

வகுப்பினர்களும், தாங்கள் சந்தோஷத்தில் பாடும் பாட்டுக்களை உற்பத்தியாக்கினவர் எவ்வளவோ உலகப் புகழ்களைப் பெற்று முடி சூட்டப்பெற்றவர் என்பதை அறியார்கள். ஆயினும், உள்ளே உண்டாகும் கிளர்ச்சிகளை அப்படியே இனிய சொற்களில் இசையுடன் கொட்டி யிருப்பதைக் கண்டு தாங்களும் பாடித் தங்களையே சற்று மறக்காமல் இருப்பது அவர்களால் சாத்தியமா? கவிஞ னுக்கு உண்மையில் இதை விடப் பெரிய பாராட்டு இல்லை.

தாய்மொழியை டாகூர் கௌரவித்தது தம் சொந்த அன்னையைக் கௌரவித்ததைக் காட்டிலும் அதிகம். வேறெவரும் செய்ய முடியாத காரியத்தை இவர் செய்து வழிகாட்டியும் இருக்கிறார். சர்வ கலாசாலைகள் ஆண்டுதோறும் பட்ட மளிப்பு விழாக்களை ஏற்பாடு செய்து, நாட்டிலுள்ள உயர்ந்த கனவான்களைக் கொண்டு ஆசிகளையும் அரிய மொழிகளையும் மாணவர்களுக்குச் சொல்லக் கேட்டுக் கொள்வார்கள். கவிஞரையும் கல்கத்தாவின் புராதன சர்வ கலாசாலை அதிகாரிகள் அழைத்தார்கள் ஒரு வருஷம். இவர் ஒப்புக்கொண்டார். ஆனால் நிபந்தனை யொன்றின் பேரில்தான். தாம் தாய்மொழியாகிய வங்காளத்திலேதான் பேச முடியுமென்றும், வேண்டுமானால் ஆங்கில மொழிபெயர்ப்பைச் செய்து வெள்ளைக்காரர்களுக்கும் மற்றப் பாஷைக்காரர்களுக்கும் பிரதிகளை அளிப்பது உசிதம் என்றும் கூறிவிட்டார். அப்படியே கல்கத்தா கவர்னர் உட்பட வீற்றிருந்த கனவான்கள் சன்னிதியில் வங்காள பாஷையில் கவிஞர் மாணவர்களுக்கு நன்மொழிகளை உபதேசித்தார். எதை மறந்தாலும் ஒரு வாக்கியம் மட்டும் நம் மனத்தில் இடம் பெற்றுவிடுகிறது: "ஒருவருடைய சொந்தப் பாஷையில் கல்விப் போதனையைப் பெறுவது, தேக ஆரோக்கியத்தின் பொருட்டு உணவுப் பண்டங்களைச் சொந்தப் பற்களினால் கடித்து மென்று விழுங்கி அவரவர் ஜீர்ணக் கருவிகளால் உடம்புடன் ரத்தத்தில் சேர வைத்துக்கொள்வதற்குச் சமமானது."

தமிழர்கள் இதைப் பெரிய தாரக மந்திரமாய் உச்சரிக்க வேண்டும். இன்றும் தென் இந்தியாவில் தமிழில் பேசுவது எழுதுவது முதலிய சுபாவமான விஷயங்களில் ஆர்வம் உண்டாகி யிருப்பது போதாது. இன்னும் இங்குள்ள இலக்கிய அபிமானிகள் ஆங்கில இலக்கியத்தையே மேம்பட்ட ரகத்தைச் சேர்ந்ததாக மதிப்பதைப் பார்க்கிறோம். தமிழையே முழுவதும் எழுதும் சாதனமாக வைத்துக் கொள்வது அவ்வளவு சரியல்ல என நினைக்கும் மனப்பாங்கு நம்மை விட்டு அகலவில்லை. கடிதங்களை ஒருவருக்கொருவர் எழுதுகையிலும் தவறுதல்களுடன் இருப்பினும் ஆங்கிலத்தையே உபயோகிக்கிறோம். காரணம், நாமே நம்மை ஏமாற்றிக் கொள்வதுதான். ஆங்கிலத்தில் எழுத வரும் அளவுக்குக் கூடத் தமிழில் சொல்ல வராதெனச் சொல்லிக் கொள்கிறோம். உண்மை வேறு விதத்தில் தான் இருக்கும். பிறர் பக்ஷபாத மில்லாமல் சொல்லுவதாயின், பிழைகளுடன் கூடிய தமிழ், உயர்ந்த முயற்சியினால் விளைந்த ஆங்கிலத்தைக் காட்டிலும் எவ்வளவோ விதங்களில் மேன்மை தங்கியது. குழந்தைகள் பேசும் பொழுது பிழையுடன் இருப்பதைத் தவறாக உணருகிறோமா? 'வயசு ஆனால் தெளிந்து விடும் சொற்கள்' என்கிறோம். அதுபோலவே நம் மொழியில் தவறுதல்கள் இருப்பினும், இலக்கணப் பொருத்தங்களுடன் இல்லாமல் ஒருகால் அமையலாமே ஒழிய, அர்த்தம் விளங்காத விதம் இருப்பதை எதிர்பார்க்க முடியாது.

இதிலிருந்து, தமிழில் தான் உயர்ந்த புஸ்தகங்கள் இருக்கின்றன, மற்றவைகளில் இல்லை என்று நம்பி மோசம்போவது தவறு. வடமொழி, வங்காளம் முதலிய பாஷைகளில் நம் நாட்டு அறிஞர்களின் இலக்கிய நிதிகளைப் பரிசோதித்துப் பெருமை அடைய வேண்டும். அவைகளைத் தமிழில் மொழி பெயர்த்தல் அவசியம். மேலை நாட்டு நூல்களை மொழிபெயர்ப்பதை விட, நம் தேசத்து இதர பாஷைகளிலுள்ள சிறந்த காவியம், நாடகம், கதை

முதலியவைகளைத் தர்ஜமாச் செய்வது பாராட்டத் தக்கது. சிலருக்கு இதில்கூட நம்பிக்கை இல்லை. அவர்கள் கேட்பது: "வங்காளிகள் நிறையக் கதைகளையும் சிறு கதைகளையும் எழுதினால் அவைகளை நாம்தானா வாசிக்கவேண்டும்? பதிலுக்கு, வங்காளப் பிரதேசங்களில், தமிழில் உள்ள வைகளை உணர்ந்து அனுபவிக்கப் பாடுபடுகிறார்களா?" இவ்வித வாதங்களுக்குத் திருப்தியாகப் பதில் அளிப்பது சாத்தியமில்லை. ஏனெனில் வங்காளிகள் நம்முடைய உயர்ந்த புஸ்தகங்களைத் தெரிந்துகொள்ளாததற்கு நாமேதான் காரணம். அவர்கள் மேலைநாட்டாரையும், மற்ற இந்திய மாகாணத்தார்களையும் உத்தேசித்து ஆங்கிலத்தில் முதலில் தங்கள் சிறந்த நூல்களை மொழி பெயர்த்துக் காட்டினார்கள். இன்று நாம் தமிழ் நாட்டில் உள்ள சிறந்த எழுத்தாளர்களைக் கவனியாததுமல்லாமல், ஆங்கிலத்திலும் அவர்களைத் தர்ஜமாச் செய்து உலகிற்கு அர்ப்பணம் செய்ய உற்சாகம் கொள்ளவில்லை. மேலும் நவீனம் எழுதுவதில் வங்காளிகள் நம்மைவிட நிறைய எழுத்தாளர்களைப் பெற்றிருக்கிறார்கள். வேண்டு மென்று மாகாண அபிமானத்தைக் காட்ட, மற்றப் பாஷைகளின் உயர்ந்த அம்சங்களையும், நூல்களையும் கவனிக்காமல் நம்மைச் செய்து கொள்வது நியாயமில்லை.

கிழவராயினும், பலவித பால்யச் சாவுகள் குடும்பத்தில் ஏற்பட்டு அதனால் உண்டான பிரிவாற்றாமையால் மனம் நொந்திருந்தவராயினும், டாகூரின் கண்கள் பஞ்சடையவில்லை. தோற்றத்தில் சற்றுக் கூனும், தும்பைப் பூவாய் நரைத்த கேசங்களும், தாடியும் இவரை வயசு முதிர்ந்தவராய்க் காட்டின. உள்ளத்தில் அன்றுபோல் என்றும் ஒரே விதமாய்ப் புதிய விஷயங் களில்கூட மனத்தை நுழையவிட்டுக் கொள்ளும் ஆற்றல் பெற்றவராய்க் கடைசி நாள் வரையில் இருந்தார். கவி-திருஷ்டி மங்கிய தினமே, உயிரையும் நீத்தார் போலும்.

மகாத்மா காந்தி துறவறத்தின் ஆழ்ந்த நிலையில் பற்றுள்ளவர். தம் சொந்த அனுபவங்களின் பொருட்டுச்

சத்திய சோதனைகளைப் பலமாகச் செய்து பார்த்தவர். ஒரு நாள்கூட இன்பத்திற்காகப் பொழுதைக் கடத்தியவரே அல்ல. அவரே கவி வாணரைக் கை கூப்பிச் சேவித்துள்ளார். சாந்திநிகேதனத்தை நேரில் பார்த்த பிறகு டாகூருடைய உயர் நோக்கங்கள் வெறும் மேகங்களிடையே பறப்பவைகளல்ல; அசையாத அவனியில் அவைகளுக்குக் கடைக்கால்கள் வெட்டப்பட்டுள்ளன என்பதை உணர்ந்தார். டாகூர் இறந்தபொழுதுகூட மகாத்மா காந்தி அடிகள், கவிஞர்பால் ஞாபகார்த்தமாக எதைச்செய்வதாயினும் அத்தொகைகள் கவிஞர் வாழ்நாட்களில் ஜலம் விட்டு வளர்த்த பொது ஸ்தாபனமாகிய சாந்திநிகேதனத்திற்கே வழங்கப்பட வேண்டுமென்று அறிக்கைகளை விடுத்தார்.

ரவீந்திரருக்கும் மகாத்மாவினிடம் மரியாதை பெருகியது. உபநிஷத்துக்களை வாசித்துத் தினம் தினம் வாழ்க்கையில் அவைகளில் கண்ட கருத்துக்களை உபயோகப் படுத்தியவரானமையால், துறவறமென்று உலகையே வெறுத்து ஓடாமல் மக்களிடையே வைராக்கியத்துடன் பாடுபடும் பரம யோகியாக விளங்குபவரை வணங்கினர். பிரவிர்த்தியில் ஈடுபடுபவனே நிவிர்த்தி மார்க்கத்தைப் பிடித்துக்கொள்ளத் தகுந்தவனாகிறான். ஒன்றுமே செய்யாவிடில் நிவிர்த்திக்கு உவந்த மனப்பாங்கு எவ்விதம் விளையக்கூடும்? கர்மயோகிகள் என்பதற்கும் இதுவேதான் தாத்பரியம். உயர்ந்த கர்மாக்களைச் சதா செய்து மனத்தைக் காமக் குரோதங்களினின்றும் வசப்படுத்தி, லாப நஷ்டங்களைக் கண்டு சற்றும் மனம் வேறுபடாமல், மேலும் மேலும் ஊக்கத்துடன் பிறர்பால் உழைப்பதையே கீதை ஓதுகிறது. உபநிஷத்துக்களின் சாரத்தையே பகவத்கீதை வெளியாக்குகிறது என்பார்கள். கீதையைச் சதா வணங்குபவர் காந்தி அடிகள். உபநிஷத்துக்களை எப்பொழுதும் வழிபடுகிறவர் ரவீந்திரநாத டாகுர். ஆகையால் இருவருள்ளங்களும் ஒன்றியிருப்பதை நாம் அறிய முடியும். வெளியான பல காரியங்களில் இருவரிடமும் சிற்சில

வேற்றுமைகளைக் காண்பதால் இருவரும் தனித்தனி வழியே சென்றார்கள் என்று கூறுபவர்கள், காந்தி டாகூர் இவர்களுடைய அடிப்படையான தர்ம ஞானத்தை உணராதவர்கள் தாம்.

உலகம் முழுவதுமே தேடினாலும் சமீப காலத்தில் டாகூருடைய அறிவின் ஆழத்தை எட்டிய இதரக் கவிஞர்களே இல்லை என்று தைரியமாய்ச் சொல்லி விடலாம். மேலைநாட்டு இயக்கங்களில் முழுகியவர்களின் மத்தியில் ஒருவர் மட்டும் தமது சொந்த பாஷையை மறக்காமலும், அதில் மட்டும் தம் கற்பனைக் களஞ்சியங்களைப் போஷித்தும் வந்தார் என்பது அழியாத கௌரவத்தை இவர்பால் அளிக்கின்றது. வான்புகழ் கொண்டவராயினும், வாழ்க்கைத் தர்மத்தில் இந்தியர்களிடமே பற்றுடையவரானார். இவரை வாசியாதவர்களுக்கு இவருடைய தாடியைக் கண்டு அதை மட்டும் பரிசீலனை செய்வதுடன் சிந்தனையை நிறுத்தும்படி ஏற்பட்டுவிடுகிறது. தென் இந்தியர்கள் செய்வது ஒன்று தான் சாத்தியம். டாகூருக்குத் தமிழ் மொழி பெயர்ப்புகள் இயற்றல் வேண்டும். இந்தியர்களுக்கே அதனால் பெருமை; தென் இந்தியர்களுக்கோ அதனால் தனிச் சிறப்பு.



# முத்து மாலை

ரவீந்திரநாத டாகூருடைய காவியத் திரட்டுக்களை வாசித்தனுபவித்தவர்களுக்கு, சிலவற்றையாவது தம் பாஷைகளில் பிறருக்குத் தரவேண்டுமென்று ஆசை உண்டாகும். ஆனால் உடனே தாம் பொறுக்கி எடுத்தவைகளைப் பார்க்கையில், கவிஞருடைய இதரக் கவிகளே இவைகளை விடச் சிறந்தனவாகத் தோன்றத் தொடங்கும். காரணம், ஒன்றை விட ஒன்று அழகையும் அறிவையும் போஷிப்பதால் ஒன்றைத் தனியாக உயர்ந்ததெனக் காட்டுவது சாத்தியமில்லை என்று தோன்றும். மேலும் கவிஞரின் சொல்லாகிற பனி மலரை உலர்ந்த நிர்மால்யமாய்த்தான் மொழிபெயர்ப்பில் காண இயலும். கீழே '**பிறைமதி**' '**பழக்குவியல்**' '**தோட்டக்காரன்**' இவற்றிலிருந்து சில பாட்டுக்கள் கொடுக்கப் பட்டுள்ளன.

## I

## பிறைமதி (சிசு)

[குழந்தைகளைப்பற்றி டாகூர் சொல்லும் அழகிய கருத்துக்கள், நம்மை எப்பொழுதும் குழந்தைகள் உள்ளங்களாகிற மலர்க் குவியலின் உள்ளே செலுத்திவிடுகின்றன. பார்ப்போம் இங்குச் சில வற்றை.]

['**உதயம்**']

'எங்கிருந்து வந்தேன நான், எங்கே என்னைக் கண்டெடுத்தாய், அம்மா!' என்றது தாயினிடம் குழந்தை.

குழந்தையை அப்படியே வாரி எடுத்து மார்போடு அணைத்து, பாதி அழுகையும், பாதி சிரிப்புமாய் அவள் சொல்லலானாள்:—

'என் இதயத்தின் ஆழத்தில், அதன் ஆசையைப் போலவே நீ பதுங்கிக் கொண்டிருந்தாய்.

'என் மரப்பாச்சி விளையாட்டிலெல்லாம் உன்னைக் கண்டேன். காலையில் தினம் என் தெய்வத்தின் பதுமையை மண்ணில் பிடித்தும் கலைத்தும் செய்து வருகையில், உன்னையே உருவாக்கவும் அழிக்கவும் முற்பட்டேன்.

'எங்கள் குலதெய்வத்தை வைத்துத் தொழுகையில் உன்னை உடனுடன் பூசித்தேன்.

'என் ஆசைகளிலெல்லாம், பாசங்களிலெல்லாம், என் ஆவியிலும், என்னைப் பெற்ற தாயின் ஆவியிலுங்கூட உன்னை உயிர்பெறக் கண்டேன்.

'என் கன்னி உள்ளம் இதழ்களை விரிக்கையில், அதன் நறுமணம் போலவே நீ அதனைச் சுற்றிவந்தாய்.

'உன் மலர்போன்ற தேகத்தின் அழகும் சோபையும் எனது உடலெல்லாம் பரவி, பிறக்கும் கதிரவனைக் காட்டிக் கொடுக்கும் அருணோதயம் போலவே ஒளி யிட்டது.'

[மேகமும் அலைகளும்]

மேகங்களில் உள்ள ஜனங்கள் என்னை வாவென்று கூப்பிட்டுச் சொன்னார்கள் :—

விடிந்தது முதல் நாள் முடியும் வரையிலும் நாங்கள் விளையாடுகிறோம்.

பொன்மயமான காலை வேளையுடனும், வெள்ளி போன்ற மதியுடனும் நாங்கள் விளையாடுகிறோம்.

நான் அவைகளைக் கேட்டேன், 'எப்படி உங்களிடம் வருவது?' என்று.

'பூமியின் விளிம்பிற்கு வந்து, கைகளைத் தூக்கினையானால் மேகங்கள் ஓடிவந்து உன்னைத் தூக்கிக்கொண்டு போகும்' என்றன மேகங்கள்.

'எங்கம்மா வீட்டில் காத்திருப்பாளே!' என்றேன் நான்; 'தனியே அவளை விட்டு விட்டு எப்படி வருவது?'

சிரித்துவிட்டு அவை சென்றன.

ஆனால் அதைவிட உயர்ந்த விளையாட்டு எனக்குத் தெரியும் அம்மா!

நான்தான் மேகமாம், நீதான் சந்திரனும். என் இரு கரங்களாலும் உன் முகத்தை மூடிக்கொள்ளுகிறேன். நம் வீட்டுக் கூரையே நமக்கு ஆகாசமாம். தெரிகிறதா, அம்மா!

* * * *

அலைகளில் உள்ளவர்கள் என்னை அழைத்தார்கள். அவர்கள் சொன்னது :

'காலையிலிருந்து மாலைப்பொழுது வரையில் நாங்கள் பாடுகிறோம். எங்கெல்லாமோ சென்று திரிந்து வருகிறோம்.'

'எப்படி உங்களிடம் வருவது?' என்றேன். அவைகள் வழி சொல்லித் தந்தன. 'கடற்கரையோரமாய் வா. கண்களை இறுக் மூடிக்கொள். அலைகள் உன்னை அப்படியே ஏந்திச் சென்றுவிடும்.'

'சாயங்காலம் அம்மா என்னைத் தேடுவாளே. அவளை அங்கேயே விட்டு வரவா?' என்றேன்.

அவை புன்னகை செய்து குதித்தோடி விட்டன.

அதைவிட அழகானதொரு விளையாட்டு எனக்குத் தெரியும்.

நான் தான் அலையாம், நீ தான் கரையாம். உருண்டு உருண்டு உன் மடியில் சிரித்துவந்து விழுகிறேன்.

உலகில் ஒருவரும், நானும் நீயும் எங்குள்ளோம் என்பதையே அறியார்.

## பழக் குவியல் (பால்குனி)

[பழக் குவியலிலிருந்து சில ஜாதிக் கனிகளைத் தருவோம். கீழ்வரும் பாட்டு உட்கருத்தாய் வைக்கும் விஷயங்கள் காதலுக்கும் பொருந்தும்; கவி-திருஷ்டிக்கும் உவந்ததாய்க் காணப்படும்.]

[பாட்டு **18**]

இல்லை; மலரின் இதழ்களை விரிய வைப்பது உன்னுடைய செயல் அல்ல.

மொட்டைக் குலுக்கிப் பார்; திறந்து பார்; உன்னால் அதை மலரச் செய்ய முடியாது.

உன் விரல் பட்டு அது வாடுகிறது; அதன் இதழ்களை யெல்லாம் பிய்த்து மண்ணில் போட்டு நாசமாக்கி விடுவாய்.

கைபட்டால், வர்ண முண்டா, வாசனையுண்டா அதற்கு? ஆ, இல்லை. உன் வேலை அல்ல அதனை மலரச் செய்வது.

அதனை மலரச் செய்பவன் எவ்வளவு சிரமமில்லாமல் செய்து விடுகிறான்!

அவனுடைய ஒரு சிறு பார்வை போதுமே; உடனே உயிரோட்டம் அதனுள் பாயுமே!

அவனுடைய ஒரே மூச்சுக் காற்றில் மலர் தன் இதழ்களை விரித்துக்கொண்டு காற்றில் ஆடத் தொடங்கி விடுகிறதே!

* * * *

[பாட்டு 50]

பரிமளம் மொட்டைப்பார்த்துச் சொல்லியது:—

'அந்தோ, பொழுது போகிறதே; வளர்ந்த நாள் முடிவடைந்து விட்டது; நானும் விடுதலை யடையாமல் புஷ்பச் சிறையில் அடைபட்டு வாடுகிறேன்.'

வீணுக ஏன் பதறுகிறாய்? கோழையே!

உன்னைக் கட்டியிருக்கும் விலங்குகள் முறிந்துவிடும். மொட்டு கண் திறந்தும், உன் ஆயுட் காலம் முடியும் நாள் நெருங்கும்; நீ இறந்தும், வஸந்தம் மட்டும் என்றும் உயிருடன் உலவிவரப் போகிறது.

நறுமணம் மலரினுள்ளே தவித்து வாடிவிட்டது: 'ஐயோ, நேரம் போகிறது; எனக்குத்தான், செய்வது யாது, வேண்டுவதென்ன என்று புரியவில்லை' என்றது.

மனம் இடிந்து போகாதே கோழை நெஞ்சமே! வஸந்த காலத் தென்றல் உன் ஆசைகளை ஒற்றுக்கேட்டு விட்டது. உன் ஆசைகள் பரிபூரணமாவதற்குள் நாளும் முடிவாகாது.

வரும் காலத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் பரிமளம் பொருமியது:—'அப்பப்பா! என்ன துர்ப் பாக்கியப் பயனோ, என் வாழ்க்கைக்கு அர்த்தமில்லாமல் ஆனது! இக்கதி எதனால் என்று யார் சொல்லு வார்கள்?'

மனம் தளராதே கோழையே!

விடியும் வேளை வருகிறது. அப்பொழுதுதான் உன் ஆத்மா எங்கும் உள்ள ஆத்மாவுடன் கலந்து ஒன்றி உன் வாழ்க்கை நோக்கத்தைப் பெறும்.

[பாட்டு 52]

> [காயத்ரி மந்திரத்தை உணர்ந்தவர்களுக்குக் கீழ்வரும் பாட்டின் கருத்து கவிதை வடிவங்கொண்டு அழகே உருவெடுத்த தாகத் தோன்றும்.]

'வானத்தைக் காட்டிலும் அகண்டமாய் இல்லாத தொன்று உன்னைத் தாங்க முடியுமா ? சூரியபகவானே !

உம்மையே சதா கனவு காண்கிறேன். ஆனால் உம்மை அணுகி ஏவல் புரிய என்னால் முடியாது.'

இவ்வாறெல்லாம் வருந்திப் பனித் துளி ஓலமிட்டது. மேலும் கூறியது :—'உம்முடைய தேஜோராசியை வகிக்க என்னுடைய சின்ன உடம்பினால் முடியுமா ? என் வாழ்க்கையே கண்ணீர் மயமாகி விட்டதே, ஏன் ?'

, கதிரவன் பதிலளித்தான் :--'எல்லையற்ற வானத்தின் வெட்டவெளியை நான் என் கிரணங்களால் ஒளி மய மாக்குவது என்னவோ உண்மை. ஆயினும் உன்னை விடச் சிறிய அணுவினுள்ளும் என்னை அடக்கிக்கொள்ள என்னால் சாத்தியம். ஆம், நீ ஒரு சிறு துளியாயினும், உன்னை மிகப் பிரகாசமாக்கிச் சின்னஞ்சிறு வாழ்க்கை யையும் கணநேரம் முழுவதும் ஒளி பெறச் செய்வேன்.'

## தோட்டக்காரன் (மாலி)

[பாட்டு 66]

> [வாழ்க்கையில் எதையோ அர்த்தமில்லா மல் தேடிக்கொண்டு உயர்ந்த சந்தர்ப்பங் களை யெல்லாம் கைநழுவ விட்டு விடும் மாந்தர்களைப் பற்றிய உயர்ந்ததோர் குறிப்பு என்லாம் கீழே வரும் பாட்டை.]

பைத்தியக்காரன் ஒருவன், தலைமயிர் சடையாகி, புழுதி படிந்து, உடல் துரும்பாய் இளைத்து, உதடுகள் இதய கபாடத்தை இறுக மூடியதுபோல் திறவாமல் இருக்க, கண்கள் மின்மினிப் பூச்சியைப் போலவே இடைவிட்டுப் பிரகாசிக்க, தான்வேண்டிய ஸ்பர்ச வேதியைத் தேடிக் கொண்டிருந்தான்.

அவனுக்கு முன்னால் முடிவற்ற கடல் ஓலமிட்டுக் கொண்டே யிருந்தது.

தொண தொண வென்று பேசும் கடல்-அலைகள் தாங்கள் வைத்திருக்கும் ரத்தினங்களைப் பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருந்தன. தங்கள் ரகசியத்தை உணராத மாந்தர் மதியீனத்தை மனமாரப் பரிகசித்தன போலும்!

பாவம், அவனுக்கு இனி ஒரு விதமான நம்பிக்கைக்கும் இடமில்லையோ என்னவோ, தேடுவதை விடவே மனமில்லாமல் வாழ்க்கையின் வேட்கையாகவே அதை ஆக்கிக்கொண்டு விட்டான்.

அடைய முடியாததை எட்டிப் பிடிக்கவே கடல் கொந்தளிப்பது போலவும்—,

கிட்டாத லக்ஷ்யத்தைக் குறித்து விண் சுடர்கள் சுழலிடுவது போலவும்—,

அப்பைத்தியக்காரன் தனியே கடற்கரையில், தான் காணாத கல்லைத் தேடி அலைந்தான்.

ஒரு நாள் ஒரு மாடு மேய்க்கும் இடைப்பையன் எதிரே வந்து கேட்டான்:—'எங்கிருந்து, ஐயா, உமக்கு இடுப்பில் அணிந்திருக்கும் பொற்சங்கிலி கிடைத்தது?'

பைத்தியம் திடுக்கிட்டுவிட்டது—இரும்பாய் இருந்த சங்கிலி தங்க மயமாய் மாறியிருந்தது! கனவு அல்லவா அவன் காண்பது? அது எதனால் மாறியது என்பதை அவனுக்குத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

தலையில் அடித்துக் கொண்டான். அவன் தங்கமாக்கிய பொருளை எங்கே கண்டிருக்கலாம்?

வாஸ்தவத்தில், கற்களைப் பொறுக்கி எடுப்பதும், இடுப்பிலுள்ள இரும்பு வளையத்தைக் கல்லைக் கொண்டு தொடுவதும், அவனுக்கு அன்றாடப் பழக்கமாகிவிட்டது. அதனைப் பாராமலேயே எடுத்த கல்லைத் தூர எறியவும் அவன் தொடங்கிவிட்டான். இவ்விதம் செய்கையில் தான் ஒருநாள் அவன் நிஜமான கல்லைத் தேடிக் கண்டெடுத்திருக்க வேண்டும்.

சூரியனும் அஸ்தமன வாயில் விழப் பார்த்தான்; ஆகாசம் முழுவதும் பொன் தகட்டால் மூடப்பட்டிருந்தது.

மறுபடியும் தான் தேடும் வேலையில் மனத்தைத் திருப்பினான் அப்பைத்தியக்காரன். அவன் தேகத்திலுள்ள வலிவு குன்றியது; முதுகு கூன் பெற்றது; இதயம் மண்ணில் விழுந்து கிடக்க, வேர் அறும்படி வெட்டிச் சாய்த்த மரம்போல் ஆனான்.

[பாட்டு 59]

[பெண்மையைக் கவிஞர் எவ்வாறு உயர்த்துகிறார்? கவனிப்போம்.]

பெண்ணே! ஈசுவர சிருஷ்டி மட்டுமல்ல நீ, மனிதனுடைய சிருஷ்டியுங்கூட; தங்கள் அந்தரங்கத்தின் கலைச் செல்வங்களை யெல்லாம் வழங்கி உன்னைக் கௌரவிக்கின்றனர் மாந்தர்கள்.

பொன் கிரணங்களைப் பின்னி உனக்கு வேண்டியதைக் கவிஞர்கள் தருகிறார்கள்; ஓவியர்கள் புதியதொரு அமரத்வத்தை உனக்கு இடுகிறார்கள்.

கடல் நல்முத்தையும், நிலம் செம்பொன்னையும், மரம் நறுமலரையும் உன்பால் அர்ப்பணம் செய்து, சதா உன்னை அலங்கரித்து வரம் பெற்றவளாய் உன்னைச் செய்கின்றன.

உன் யௌவனத்தின் வனப்பை அதிகரிக்கச் செய்ய மனித உள்ளங்களின் ஆசைகளெல்லாம் திரண்டு வருகின்றன.

பாதி பெண்ணும், மற்றொரு பாதி கனவின் விளைவு மானாய்!

[பாட்டு 58]

நந்தவனத்தில் ஒரு நாள் காலையில் ஒளி இழந்த கண்கள் படைத்த பெண் ஒருத்தியைக் கண்டேன். தாமரை இலையில் மூடி எடுத்து வந்த மலர் மாலை யொன்றை எனக்கு அளிப்பதற்கு அவள் வந்தாள்.

என் கழுத்தில் அதை அணிந்ததும், கண்களில் கண்ணீர் மல்கியது.

அச்சிறுமியை முத்தமிட்டுப் பின்வருமாறு ஆசீர்வதித்தேன்: 'புஷ்பங்களைப் போல் கண்ணில்லாமலே நீயும் இருக்கிறாய், பெண்ணே! உனக்கே உன் அருமையான கொடையின் உயர்வு தெரியாது!'

Printed at the Indian Express Press, Mount Road, Madras.